விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 26 வியாழக்கிழமை (09.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 052

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO 100

## ஆதரிப்பதா? எதிர்ப்பதா?

# இலங்கை விவகாரத்தால் குழம்பிப் போயுள்ள இந்தியா

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை ஆதரிப்பது குறித்து இந்தியாவிடம் குழப்பமான தன்மைகள் தெரிவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(24ஆம் பக்கம் பார்க்க)


## அரசியல் தலைமைகளுக்கு நீதிமன்றம் ஆணை

(கொழும்பு)

நேற்று கொழும்பு நீதிமன்ற வளாகத்திற்கு அண்மையில் சரத் பொன்சேகா விடுதலை தொடர்பாக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட முக்கிய எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக மேல் நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, மேல் மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த அறிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும், நீதவான்கள்-சட்டத்தரணிகள்-பொதுமக்கள் ஆகியோரது நடமாட்டங்களுக்கும் இடையூறு செய்யும் எந்த ஒரு பொதுக்கூட்டத்தையும், ஆர்ப்பாட்டத்தையும், நடத்துவோருக்கு இத்தகைய நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை என்பதை அறிவித்து மேல் நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதன்படி நேற்று திஸ்ஸ அத்த நாயக்க, அனோமா பொன்சேகா, மனோ கணேசன், விக்கிரமபாகு (24ஆம் பக்கம் பார்க்க)



முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா சிறை வைக்கப்பட்டு இரண்டு வருட பூர்த்தியையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. புதுக்கடையிலுள்ள நீதிமன்ற கட்டிட தொகுதிக்கு முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டம் பேரணியாக சென்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக நிறைவுற்றது.

## கட்டிடத்தில் தீ விபத்து இருவர் உயிரிழப்பு

### வெள்ளவத்தையில் அனர்த்தம்

(கொழும்பு)

வெள்ளவத்தை அடுக்கு மாடி கட்டிடமொன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீவிபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். வெள்ளவத்தை 37ஆம் தெருவில் அமைந்துள்ள பலமாடி கட்டிடமொன்றின் 4ஆம் மாடியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தீவிபத்தில் காயமடைந்தவர்கள் களுபோவில வைத்தியசாலையில் (24ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகள் 42 பேர் விடுவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலை புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் 42 பேர் நேற்று புதன்கிழமை தேசத்துக்கு மகுடம் கண்காட்சி கூட பிரதான மேடையில் வைத்து பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், சிறைச்சாலைகள் மற்றும் மறு சீரமைப்பு புத்துறை அமைச்சர் சந்திர சிறி கஜதீர, அமைச்சர் எஸ்.எம் சந்திரசேன, பிரதி அமைச்சர் பிஎியூ. பீ.ஏக்கநாயக்க சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்புத்துறை அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க, புனர்வாழ்வு ஆணையாளர் சுதந்தரராஜகுரு, சிறைச்சாலைகள் ஆணையாளர் பிஎியூ.பீ.கொடிப்புலி உட்பட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ-1)

## புதுக்குடியிருப்புக்கு மார்ச் 24இல் தேர்தல்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று சபைகளுக்கான தேர்தல் மார்ச் மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இத்தேர்தல் தொடர்பிலான கூட்டம் நேற்று புதன்கிழமை காலை தேர்தல் செயலகத்தில் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இரு சபைகளுக்குமான தேர்தலை எதிர்வரும்மார்ச்மாதம்24ஆம்திகதிநடத்துவதற்கு தேர்தல்கள் செயலகம் முடிவெடுத்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்காக வேட்பு மனுத்தாக்கல் செய்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (எ-1)

# வெளிநாடுகளின் அழுத்தங்களால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது

## சுப்பிரமணிய சுவாமி தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நீதிமன்றத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நிறுத்த முடியாது. ஏனெனில் அதற்கான ஆதாரங்கள் இல்லையென்றேகூறலாம் என இந்திய ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார்.

இந்தியாவின் அல்லது வெளிநாடுகளின் அழுத்தங்களூடாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இலங்கைக்கு கூடுதல் அழுத்தம் கொடுத்தால் அந்நாட்டுக்கு உதவி செய்ய இன்னும் பல நாடுகள் உள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையை இரண்டாகப்பிரித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. அது எந்த வகையிலும் சாத்தியப்படமாட்டாது. இன்றைய நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நம்பி அவருடன் பேச்சுவார்த்தை நடத்தினால் மட்டுமே பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். இலங்கையிலுள்ள பிரச்சினைக்கு வேறு நாடுகளால் தீர்வு (24ஆம் பக்கம் பார்க்க)

# காணாமல் போனோரின் விபரத்தை அரச அதிபரிடம் கேட்ட அமெரிக்கர்

## பூரணவிபரம் இல்லையென பதிலளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காணாமல் போனோரின் எண்ணிக்கை என்ன என்பது தொடர்பில் தெரிவிக்குமாறு யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரிடம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உலக குற்றவியல் நீதிமன்ற தூதுவர் ஸ்ரீபன் ரப் கேட்டுக்கொண்டார். எனினும் பூரண விபரம் திரட்டப்படாததால் அதனை வழங்க முடியாதுள்ளதாக அரச அதிபர் பதிலளித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் காணாமல் போனோரின் விவரம் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத்திணைக்கள, உலக குற்றவியல் நீதிமன்ற தூதுவர் ஸ்டீபன் யாழ். அரச அதிபரிடம் கேட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள, உலக குற்றவியல் நீதிமன்ற தூதுவர் ரப் தலைமையிலான 5 பேர் கொண்ட குழுவினர் யாழ். மாவட்ட (24ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இடம்பெயர்ந்தோர் முகாமில் இருந்த 17பேர் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு

## - மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன்

உள்நாட்டில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்து படித்த மாணவர்களில் 17 பேர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப் பட்டுள்ளதாக மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

கடந்த 2வருடங்களுக்குள் நடைபெற்ற கல்விப் பொது தராதர (உயர் தர) பரீட்சைகளில் தோற்றி இவர்கள் சித்தியடைந்துள்ளனர் எனவும் அந்த மாணவர்களில் ஒருவர் மருத் துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தத்தினால் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா மெனிக் பாம் முகாமில் தங்க வைக் கப்பட்டிருந்த 207 குடும்பங்கள் புதுக்குடியிருப்பு, கோம்பாவில் பிர தேசத்தில் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை மீள் குடியேற்றப்பட்ட னர்.

இந்த மீள் குடியேற்ற நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் குண ரட்ன வீரக்கோன், மீள்குடியேற்ற பிரதி யமைச்சர் விநாயகமூர்த்தி முரளி தரன், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பந்துசேன மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் என். வேதநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் குணரட்ன வீரக் கோன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற் றிய அவர்,

இந்தப்பிரதேசத்தில் மீள்குடி யேற்றப்பட்ட மக்களை ஒரு போதும் அரசாங்கம் கைவிடமாட் டாது. இந்த மக்களுக்கு தேவை யான அனைத்து வசதிகளையும் அரசாங்கம் வழங்கும்.

இதன் ஒரு கட்டமாகவே இன்று மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள 40 பேர்ச் காணிக்கு மேலாக இன்னும் 40 பேர்ச் காணி மேலதிகமாக வழங்கப் படவுள்ளது.

பாடசாலை, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் வீதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஒரு போதும் உடனடியாக மேற் கொள்ளமுடியாது. இந்த உட்கட் மைப்பு வசதிகள் கட்டம் கட்டமாகவே மேற்கொள்ளப்படும்.

நானும் முகாமில் வசித்துள் ளேன். இதன் காரணமாக முகா மில் வாழும் மக்களின் பிரச்சினை எனக்கு தெரியும். இதனால் நான் மீள் குடியேற்ற அமைச்சராக நியமிக்கப் பட்ட பின்னர் 18 தடவை உள்நாட்டில் இடம்பெயர்ந்து பொது மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன்.

இதனாலேயே முகாம்களில் தங்கியிருந்த மக்களை தற்போது சொந்த இடங்களில் மீள் குடியேற் றியுள்ளோம்.

வடக்கு மற்றும் தெற்கு மக்கள் இணைவதன் மூலமே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். இதற் காக நாம் அனைவரும் ஒன்று பட வேண்டும் என்றார். (எ-11)

# பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்துவார் ஸ்ரேபன் ரப்



தடுப்புக்காவலில் வைக்கப்பட் டுள்ள முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர் பாகவே அமெரிக்காவின் போர்க் குற்றங்கள் தொடர்பான விஷேட தூதுவர் ஸ்ரேபன் ரப் முக்கியமாக ஆராய்வார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனை விட போரின் இறுதிக் காலப்பகுதியில் இடம்பெற்ற சம் பவங்கள் தொடர்பில் அரசுக்குள்ள பதிலளிக்கும் கடமைப்பாடு தொடர் பாகவும் முக்கியமாக ஆராயப்படும் எனத் தெரிகின்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கொழும்பை வந்தடைந்த ஸ்ரேபன் ரப் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பிரதிநிதிகளுடன் முதற் கட்டமாகப் பேச்சுக்களை நடத்தியி ருந்தார். கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்த னும், எம்.ஏ. சுமந்திரனும் இந்தப் பேச்சுக்களில் பங்கு கொண்டனர். சுமார் ஒன்றரை மணிநேரம் இடம் பெற்ற இந்தப் பேச்சுக்களின் போது போரின் இறுதிக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர் பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்பதை சம்பந்தன் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுட னான சந்திப்பு உறுதிப் படுத்தப் படாதிருக்கும் நிலையில், படைத் துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன ஸ்ரேபன் ரப் பேச்சுக்களை நடத்துவார் என அமெரிக்க தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சந்திப்பின் போது சரத் பொன்சேகாவின் விடு தலை மற்றும் இலங்கைக்குரிய பதிலளிக்கும் கடமைப்பாடு என்பன தொடர்பாக ஸ்ரேபன் ரப் கேள்வி எழுப்புவார் என எதிர்பார்க்கப்படு கின்றது. அதேவேளையில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லி ணக்கத்துக்கான ஆணைக்குழு வின் அறிக்கை தொடர்பாகவும் இவர்கள் ஆராய்வார்கள்.

இந்தச் சந்திப்புக்களை முடித் துக் கொண்டு வாஷிங்டன் திரும் பிய பின்னர் அமெரிக்க காங்கி ரஸுக்கு தன்னுடைய விஜயம் தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றை ஸ்ரேபன் ரப் சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-11)

# அரசாங்க அறிவித்தல்

**சமுர்த்தி முத்திரைக்குரிய உலர் உணவு விநியோகத்திற்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான**

**அவசரமான கூறுவிலை கோரல்**

யாழ். மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளிற்கு மூன்று மாதங்களுக்குரிய உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறு விலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

1. சிவப்பு நாட்டரிசி
2. கோதுமை மா
3. சீனி
4. பருப்பு

இப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப்பொருட்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்பு பணமாக ரூபா 5,000.00 உம், மீளளிக்கக்கூடியதான வைப்பாக ரூபா 50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை மாவட்ட சமுர்த்தி கிளையில் பெற்று தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சமுர்த்தி உலர் உணவு விநியோகத்திற்குரிய பொருட்களுக்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு 17.02.2012 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தில் உள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடிதவுறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும் போது அப்பொருட்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருட்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பொருட்களின் தரம் கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு 09.02.2012 ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 17.02.2012 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர்கள் அல்லது அவரின் அனுமதிபெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும். பொருட்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை கொள்வனவுக்கட்டளை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வாரத்தினுள் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களிடம் எம்மால் குறிப்பிடப்படும் அளவுகளிற்கு இணங்க போக்குவரத்து கூலியின்றி ஒப்படைத்தல் வேண்டும்.

கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

திருமதி இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலர்,
யாழ். மாவட்டம்.

(C-5824)

வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-9994777/011-7902938/
011-4343339

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

ஆனந்தி திருமண சேவை
மணமகன் தேவை
அவுஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்று கணக்கியல் டிப்ளோமாதாரியும் கணக்கியலில் பட்டம் பெற கற்றுக் கொண்டு பணியாற்றும் 1987ல் பிறந்த உத்தரட்டாதி 3ம் பாதம், கிரகபாவ சங்கியை 20 1/2, நட்புப் பெற்ற 8ல் செவ்வாயுடைய பெண்மணிக்கு உள்ளூர் /வெளியூரில் டாக்டர்/ பொறியியலாளர்/ கணக்காளராகவுள்ள மணமகனை விரும்புகின்றோம். அஞ்சல் வழி/ நேரடியாக/ 0212228708 மூலம் தொடர்புகொள்ளுங்கள்.
V.A. சிவராசா சோதிடர் 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(7465)

விற்பனைக்கு
வியாபார ஸ்தாபனங்களுக்கும் வீட்டுப் பாவனைக்கும் ஏற்ற திண்டுக்கல் இரும்புப் பெட்டகங்கள் (Iron Safe) வேண்டிய அளவுகளில் விற்பனைக்குண்டு.
சகல விதமான பழுதடைந்த இரும்புப் பெட்டகங்களும் (Iron Safe) சிறந்த முறையில் திருத்தியமைத்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: இரும்புப் பெட்டகத் தொழிலகம்
இல. 13, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:- 0779698942
(7458)

மனோதத்துவ வைத்தியம்
(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்
T.P.: 0719315664 , 0777569205
மீண்டும் யாழில்
03.02.2012 முதல் 11.02.2012 வரை 9 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-
ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.
இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.
தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.
றமணி கெஸ்ற் கவுஸ் (பட்டாபி படம் மாடத்திற்கு முன்னால்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
47,49, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
Learn French the French Way
யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Française de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.
6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.
வகுப்புகள் : சனி, ஞாயிறுகளில்....
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.
(7462)

# இன்று ஒரு தகவல்

## பூட்டைத் திறக்க வேண்டும்

ஓர் ஊரிலே ஒரு மன்னர் இருந்தார்.

அந்த நாட்டின் நிர்வாகத்தை கவனிப்பதற்கு ஒரு முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது.

எப்படித் தேர்ந்தெடுக்கிறது?

ஏற்கனவே அமைச்சர்களாகப் பலபேர் அங்கே இருந்தார்கள். அவர்களிலே ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அதனால் மன்னர் அவர்களை அவதானித்தபடியே இருந்தார்.

நான்கு பேருக்கு அந்தத் தகுதி இருப்பதை அவர் கண்டார். அவர்களிலே ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எப்படி என்பது தான் பிரச்சினை.

அவர்கள் நான்கு பேருக்கும் பொதுவான ஒரு போட்டி வைக்க வேண்டும். அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்தார்.

என்ன போட்டி வைக்கிறது? மன்னர் யோசித்தார். அதன்பின் ஒரு முடிபுக்கு வந்தார்.

ஒருநாள் காலையிலே அந்த நான்கு பேரையும் அழைத்து அவர்களிடம் சொன்னார்;

“இதோ பாருங்கள்... என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது. அது சாதாரண பூட்டு அல்ல. எண்கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட விஞ்ஞானப்பூட்டு. நாளைக்கு காலையிலே உங்களிடம் அந்தப் பூட்டைக் கொண்டு வந்து கொடுப்பேன். அதன்பின் ஒவ்வொருவருக்கும் பூட்டைத் திறப்பதற்கு ஒரு வாய்ப்பு தருவேன்.

யார் அந்தப் பூட்டை குறைவான நேரத்திலே திறக்கிறார்களோ அவர்தான் இந்த நாட்டின் முதலமைச்சர்” என்றார் மன்னர்.

அந்த நான்கு பேரும் நிம்மதி இல்லாமல் இரவு பூராகவும் தூங்கவில்லை.

விடியவிடிய பூட்டு தொடர்பான ஓலைச்சுவடிகள் எல்லாவற்றையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள்.

கணிதம் தொடர்பான குறிப்புகளையெல்லாம் விழுந்து விழுந்து படித்தார்கள்.

அவசரத்தில் படித்ததால் அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

முதலமைச்சராக வரவேண்டும் என்ற ஆசையிலே அவர்களால் எதையும் நிதானமாக சிந்திக்க முடியவில்லை.

இந்த நான்கு பேரில் ஒருத்தர் மட்டும் அமைதியாக இருந்தார்.

அவர் மட்டும்தான் கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கினார்.

மறுநாள் விடிந்தது.

அரசவையிலே மன்னர் வந்து அமர்ந்தார்.

இந்த நான்கு பேரும் வந்து சேர்ந்தார்கள்.

ஒரு பெரிய பிரம்மாண்டமான பூட்டை சேவகர்கள் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அதை மன்னர் முன் வைத்தார்கள்.

ஓ... இவ்வளவு பெரிய பூட்டா? நான்கு பேரும் ஆச்சரியமாக அதைப் பார்த்தார்கள்.

எல்லோருடைய படபடப்பும் இன்னும் அதிகமாகியது. ஏதோ பரீட்சைக்குப் படிக்கிற மாதிரி கையிலேயிருந்த ஓலைச்சுவடிகளைப் பார்த்தார்கள்.

அதன்பின்பு பூட்டைப் பார்த்தார்கள். ஏதேதோ முயற்சி செய்து பார்த்தார்கள். எதுவும் சரியாகப் புலப்படவில்லை. தோல்வியை ஒப்புக் கொண்டார்கள்.

கடைசியாக இரவு பூராகவும் தூங்கியவர் பூட்டுக்குப் பக்கத்திலே வந்தார். குனிந்து பார்த்தார்.

என்ன ஆச்சரியம்.

ஏற்கனவே, அந்தப் பூட்டு திறந்தேதான் இருக்கிறது. அது பூட்டப்படவேயில்லை.

சாவியும் தேவைப்படவில்லை.

கணிதமும் தேவைப்படவில்லை.

அவர் சுலபமாக அந்தப் பூட்டைத் திறந்துவிட்டார்.

அவர்தான் முதலமைச்சர் என்று மன்னர் அறிவித்தார்.

இந்தக் கதையிலேயிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன?...

ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால் அதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

மனம் பதற்றம் அடையக்கூடாது. அமைதியாக இருக்க வேண்டும். நிதானமாக இருக்க வேண்டும்.

ஒரு நிர்வாகம் சிறப்பாகச் செயற்பட இந்தப் பண்புகள் முக்கியமாகத் தேவை.

நிர்வாகம் என்பது நாட்டு நிர்வாகம் மட்டும்தான் என்பது இல்லை. குடும்ப நிர்வாகமும் அதில் அடங்கும்.

முதலில் என்ன பிரச்சினை என்பதைப் புரிந்து கொண்டு அதன்பின் அதை எப்படித் தீர்க்கலாம் என்று யோசிக்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 4,200 இற்கு அதிகமான மக்கள் மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்

## தெல்லிப்பழை பிரதேச செயலகம் தகவல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 200 குடும்பங்களுக்கும் அதிகமானோர் மின்சார இணைப்புக்காக விண்ணப்பித்துள்ளனர் என தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி எழிலரசி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மின் இணைப்பு தொடர்பான விசேட கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றப்பட்ட 4 ஆயிரத்து 200 குடும்பங்களுக்கும் அதிகமான குடும்பங்கள் மின் இணைப்புக்கான பதிவுகளை இதுவரை மேற்கொண்டுள்ளனர்.

21 வருடங்களின் பின் மீள்குடியேற்றப்பட்டுள்ள அப்பகுதி மக்களின் தேவைகள் மிக விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இதுதவிர மின் இணைப்புக்களை இலவசமாக செய்து கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், அ.விநாயகமூர்த்தி, செ.அலஸ்ரின், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மின்சார சபை உயரதிகாரிகள், பிரதேச செயலர்கள், பிரதேச, நகரசபை தவிசாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# இறப்புப்பதிவுக்கு தேவையான ஆவணங்களை எடுத்துவர பணிப்பு

(மல்லாவி)

முல்லை.மாவட்ட விவாக, பிறப்பு, இறப்பு பதிவுக் காரியாலயத்தினால் காலங்கடந்த இறப்புப் பதிவுக்குத் தேவையான ஆவணங்கள் தொடர்பான அறிவித்தல் ஒன்றை பொதுமக்களுக்கு வெளியிட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இறந்த திகதி, இறந்த இடத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் வைத்தியசாலைக் கடிதம், கிராம அலுவலர் அறிவிப்புக்கடிதம், கண்ணீர் அஞ்சலி, மரண அறிவித்தல் பிரசுரங்கள், அந்தியேட்டி அழைப்பிதழ் ஆகியவற்றில் ஏதாவதொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன் இறந்த காரணத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்,வைத்தியரின் கடிதம், மரண விசாரணை அதிகாரியின் அறிக்கை என்பவற்றுடன் இறப்பு வீட்டில் கலந்து கொண்ட இருவரின் கடிதம்,கிராம அலுவலரின் கடிதம்,இறந்தவர் உயிருடன் வசித்தார் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் இறந்தவரின் பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, திருமணச்சான்றிதழ், பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ், இறந்தவருக்கும் விண்ணப்பத்தை சமர்ப்பித்தவருக்கும் இடையில் உள்ள உறவுமுறை என்பவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பவற்றை சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 60-65 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 70-80 | 90 | 70 |
| தக்காளி | 25-30 | 40 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 25 |
| கோவா | 50 | 30 | 30 |
| கரட் | 60 | 40 | 40 |
| பூசணி | 30 | 30 | 20 |
| புடோல் | 20 | 60 | 30 |
| வாழைக்காய் | 30-40 | 40 | 25 |
| சின்ன வெங்காயம் | 60 | 50 | 40 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 50 |
| பாகற்காய் | 30 | 80 | 50 |
| வெண்டிக்காய் | 40 | 90 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 40 | 60 |
| பயற்றங்காய் | 100 | 80 | 50 |
| லீக்ஸ் | 70 | 90 | 50 |
| பீற்றூட் | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 120 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 280 |
| போஞ்சி | 30 | 30 | 20 |
| கத்தரிதம்புள்ள | 10 | 30 | 20 |
| கீரை - 1 பிடி | 3-5 | 15 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 15 | 25 |
| வெங்காயப்பூ | 80 | 80 | -- |

# இராசி பலன்

09.02.2012

(தை 26, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு

துதியை பின்னிரவு 1.38 மணிவரை

மகம் பிற்பகல் 1.19 மணிவரை

இராகுகாலம் 2.05-3.35 மணிவரை

சுபநேரம் 8.05-9.35 மணிவரை

**மேடம்** இனிமையான நாள்,சுப செய்திகள் இல்லம் வந்து சேரும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்,வியாபார விருத்தியுண்டு.

**இடபம்** அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்,தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்,வாகன சுகமுண்டு, விருந்தினர் வருகையுண்டு.

**மிதுனம்** கோயில் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுவாரஸ்யமான நாள்,உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** உங்கள் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், சொத்துக்கள் வாங்குவதில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** குடும்பச் சுமை கூடும்,திட்டமிட்ட காரியங்களில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம்,ஆரோக்கியம் சீராக நடவடிக்கை எடுப்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**கன்னி** அலைச்சல்கள் அதிகரிக்கும், தொழிலில் பணியாளர்களை மாற்றும் சிந்தனை மேலோங்கும், சயன சுகக்குறைவான நாள், மன உளைச்சல்கள் அதிகரிக்கும்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், பொருளாதார நிலை உயர்வடையும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், புகழ் கூடும்.

**விருச்சிகம்** தொட்ட காரியங்களில் எளிதில் வெற்றி பெறுவீர்கள்,பயணங்களால் பலனுண்டு,பணத்தேவைகள் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்,ஆலய வழிபாட்டில் ஆனந்தம் காண்பீர்கள், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள்.

**மகரம்** மகிழ்ச்சி வந்து சேர மயில்வாகனனை வழிபட வேண்டிய நாள், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தில் கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம்.

**கும்பம்** வாழ்க்கைத் துணை வழியே வரவுகள் வந்து சேரலாம்,மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்,சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மீனம்** காணாமல் போன பொருளொன்று கைக்கு கிடைக்கலாம், உடல் நலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், தொழில் வளர்ச்சியுண்டு.

வளவன்

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பிரதி அதிபர் திருமதி கமலவேணி விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக பழைய மாணவர் கு. நித்தியானந்தன், திருமதி இ. நித்தியானந்தன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய உடற்கல்விப் பயிற்சி ஆசிரிய ஆலோசகர் வ. செந்தூரன், உரும்பிராய் இந்துக் கல்லூரி அபிவிருத்தி சங்க செயலாளர் ச. ஏகாம்பரநாதன், திருமதி அ. ஏகாம்பரநாதன், கௌரவவிருந்தினராக பழைய மாணவர் ம.மதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (அ-7)

* * * * * *

(கரவெட்டி)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி எல்.என். ஜோசப் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் யமுனா நந்தகுமார் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-3-24)

* * * * * *

வடமராட்சி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் யமுனா நந்தகுமார் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-3-24)

# குறுகிய காலத்தில் வடபகுதியின் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டு வருகின்றன

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உலகில் மிகப் பிரபல்யம் பெற்ற மேதைகள் மின்னொளி இல்லாமல் குப்பி விளக்கிலேயே தமது கல்வியினை தொடர்ந்தனர் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மின் பொறியியலாளர்களுக்கான சந்திப்பு இந்து பௌத்த கலாசார நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் எமக்கு கல்வி கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. ஆயுதம் ஏந்திப் போராடுவதற்குத்தான் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

நாட்டின் அபிவிருத்திக்கு கல்வி அவசியம். கல்வியின் அபிவிருத்திக்கு மின்சக்தி அவசியம். எனவேதான் நாம் அனைத்து பிரதேசத்திற்கும் மின்சக்தி வழங்கி வருகின்றோம்.

போரினால் பாதிப்படைந்து மீள்குடியேறிய மக்களுக்கு மின் இணைப்புக்கான கட்டணங்களை இலவசமாக வழங்கி வருகின்றோம்.

நாம் மிகக் குறுகிய காலத்தில் வடபகுதிக்கு தேவையான அபிவிருத்தியினை தற்போது மேற்கொண்டு வருகின்றோம்.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் இருக்கும்போது நிலவிய அசாதாரண நிலை காரணமாக மின்சாரம் தடைப்பட்டது. 1992 ஆம் ஆண்டுகளின் பின்னர் மின்சாரம், போக்குவரத்து என அனைத்தும் அழிவடைந்து சென்று விட்டன.

இதனால் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான அனைத்துத் தொடர்புகளும் துண்டித்துப் போயின.

இந்தியாவில் தற்போதும் 45 மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவதில்லை. இலங்கையில் நூற்றுக்கு 90 வீதமான பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு உள்ளது.

எமது நோக்கம் இந்து, பௌத்த சமாதானம் ஆகும். இனங்களும் இரு மொழியினை தெரிந்து வைத்திருப்பது அவசியமானதாகும். இரு இனங்களுக்கிடையிலான தொடர்பை வலுப்படுத்த இது உதவும்.

அடுத்த வருடம் முழுமையாக காப்பற் போடட வீதிகள் யாழ். பிரதேசத்திற்கு கிடைக்கவுள்ளது.

ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் வடபகுதி நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலும் ஏனைய அபிவிருத்திகளிலும் பின்தங்கிக் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் மின்அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் மின் விநியோக மார்க்கங்களாலும் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு பின்வரும் பகுதிகளில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்விநியோகம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன் துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (அ)

# வேலைதேடுவோரை பதிவுசெய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வேலை தேடுபவர்களை திங்கட்கிழமை முதல் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கானை பிரதேச செயலர் அ. சோதிநாதன் அறிவித்துள்ளார்.

இதில் பதிவுகளை மேற்கொள்ள விரும்புவர்கள் அலுவக நேரங்களில் பிரதேச செயலக திட்டமிடல் செயலகத்தில் மனித வள அபிவிருத்தி அலுவலரை தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களை பெற்று பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார். (அ-7)

# குடும்ப பெண்ணின் தங்கநகை அபகரிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி அல்வாய் மத்தடிப் பகுதியில் குடும்பப் பெண்ணின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் அபகரித்து செல்லப்பட்டுள்ளது.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு குறித்த பெண் முச்சக்கர வண்டியில் செல்வதற்காக தனது வீட்டிற்கு முன் நின்ற வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் இரண்டு பவுண் தங்க சங்கிலியை அபகரித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ-3-24)

# இனந்தெரியாத குழுவினர் குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு

(கரவெட்டி)

வடமராட்சி தும்பளை பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை மூன்று பேர் கொண்ட குழுவினர் துரத்தித் துரத்தி வாளால் வெட்டியதில் காயங்களுடன் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் சண்டை வழக்கொன்றில் கையொப்பமிட்டபின் வீடு திரும்பிய வேளை தும்பளை பகுதியில் வழிமறித்த மூன்றுபேர் கொண்ட குழுவினர் குடும்பஸ்தர் மீது சரமாரியாக வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் கற்கோவளம் புனிதநகர் பகுதியைச் சேர்ந்த முத்தையா வெற்றிவேல் (வயது-42) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே வெட்டுக்காயங்களுடன் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்துள்ளார். அங்கிருந்த குறித்த நபரை பொலிஸார் வைத்தியசாலைக்குச்செல்லுமாறுகூறியதையடுத்து அந்நபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-3-24)




# மா. மை. அணியை தோற்கடித்து கழுகு அணி சம்பியனாகியது



(கரவெட்டி)

இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக்கிண்ணத்தை மாலுசந்தி மைக்கல் அணியை 19 ஓட்டங்களால் நெற்கொழு கழுகு அணி வெற்றி பெற்று சம்பியனானது.

வடமராட்சி பிரதேசத்திற்கு உட்பட்ட 32 கழகங்கள் பங்குபற்றிய அணிக்கு 16 ஓவர் கொண்ட கிரிக்கெட் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மைக்கல் அணி களத்தடுப்பை தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகு அணி 16 ஓவர் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 108 ஓட்டங்களை பெற்றது.

இதில் கோகுலன் 32, திவாகர் 30 ஓட்டங்களை பெற்றனர். மைக்கல் அணி பந்து வீச்சின் சார்பில் தர்சன் 3, தினோயன் 2, பிரசாந், சந்திரகுமார் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 15.1 ஓவர்களில் 89 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் சயந்தன் 26, வினோத்ராஜ் 18, தினோஜன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சின் சார்பில் கோகுலன் 3, ஜீவகன், செந்தூரன் தலா 2, திவாகர் ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கோகுலனும் தொடர் நாயகனாக செந்தூரனும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-24)

# உழவியந்திரம் மின்கம்பத்தோடு மோதி விபத்து


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான உழவியந்திர வாகனம் ஒன்று மின்கம்பத் தோடு மோதி சேதமடைந்துள்ளது. இச்சம்பவம் ஓட்டுமடம் சந்தியில் நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது.

காக்கைதீவுப் பகுதியில் குப்பைகளை அகற்றிவிட்டு திரும்பி வரும் போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. மிக வேகமாக ட்ரக்டரை செலுத்திய போதே இவ்விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் மின்கம்பம் ஒருபக்கமாக சரிந்துள்ள நிலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-4)

# 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் குறைந்த அதிகாரத்தை கூட பறிக்கும் முயற்சியில் அரசு

## மனோ கணேசன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்துக்கும் அப்பால் (13+) அதிகாரம் பகிரப்படும் என்று ஜனாதிபதி இந்தியாவிடம் கூறினார்.

இலங்கையில் நாடு நகர திட்டமிடல் கட்டளைச் சட்டமூலத்தில் அரசு கொண்டுவர முயற்சிக்கின்ற திருத்தங்கள் மாகாண சபைகளுக்கு அரசியலமைப்பின் ஊடாக உத்தரவாதப்படுத்தப்பட்ட அதிகாரங்களைப் பறிக்கும் செயல் என அந்நாட்டு எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன.

இந்தச் சட்ட மூலத்தை சட்டமாக்குவதற்கு முன்னதாக மாகாண சபைகளின் கருத்தைப் பெற வேண்டுமென உச்ச நீதிமன்றம் ஆலோசனை வழங்கியுள்ள நிலையில் அதனை அனைத்து மாகாண சபைகளிலும் நிறைவேற்றும் நடவடிக்கையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி மேல்மாகாண சபையில் கடந்த திங்கட்கிழமை இந்த சட்டவரைவுக்கு ஆதரவு கிடைத்துள்ளது. சட்ட வரைவுக்கு ஆதரவாக ஆளுங்கட்சியினர் வாக்களித்த அதே வேளை எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மனோ கணேசன் தலைமை வகிக்கும் ஜனநாயக மக்கள் கட்சி உள்ளிட்ட எதிரணியினரும் வாக்களித்தனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தப்படியான மாகாண சபை முறைக்கும் அப்பால் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதாக இந்தியாவுக்கும் உலக நாடுகளுக்கும் கூறிக்கொண்டு அரசியலமைப்பின் படி இருக்கும் குறைந்தபட்ச அதிகாரங்களைக் கூட பறித்துவிடும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

குறித்த பிரதேசம் பாதுகாக்கப்பட்ட புனித பிரதேசம் அல்லது புத்த சாசனத்துக்குத் தேவையான பிரதேசம் என்று பௌத்த சாசன அமைச்சு கருதுமானால் அந்த நிலப்பகுதியை தமக்காக எடுத்துக் கொள்ளக் கூடிய அதிகாரத்தை இந்தச் சட்டம் அரசுக்கு வழங்குவதாக சுட்டிக் காட்டும் மனோ கணேசன் இது சிறுபான்மை மக்களின் உரிமைகளை மீறும் நடவடிக்கை என்றும் தெரிவித்தார்.

வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக இந்த அதிகாரத்தைப் பறித்து விட வேண்டுமென்று அரசாங்கம் முயற்சிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (அ-2)

# கடத்தப்பட்ட சிறுமி மீட்பு

(களுத்துறை)

களுத்துறை விகாரைக்கு அருகிலிருந்து சிறுமி ஒருவர் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்பிரதேச மக்கள் வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் சிறுமியை மீட்டுள்ளனர்.

சிறுமி தற்போது களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிறுமியின் ஒரு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் கைகள் பிளாஸ்டரால் கட்டப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுவரை சிறுமி அடையாளங் காணப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-2)

# மஹாபொல புலமைப்பரிசில் திட்டத்தை அரசாங்கம் ஒருபோதும் இடைநிறுத்தாது

## வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மஹாபொல புலமைப்பரிசில் முறைமையை அரசாங்கம் ஒருபோதும் இடைநிறுத்தாது என்று கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இப்புலமைப்பரிசில்முறைமையை நிறுத்தி விடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக அம்பாந்தோட்டை மாவட்ட ஐ.தே. க. எம்.பி. சஜித் பிரேமதாஸ கூறியிருப்பது அப்பட்டமான பொய்யென்றும் அவர் குறிப்பிட்டார்.

புலமைப்பரிசில் தொடர்பாக எம்.பி.சஜித் பிரேமதாஸவின் கூற்றை மறுதலிக்கும் வகையில் மேற்கண்டவாறு கூறிய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இம்முறை வரவு செலவு திட்டத்தில் புலமைப் பரிசிலுக்கென ஒரு செப்புக்காசு கூட ஒதுக்கப்படவில்லையென்று எம்.பி.சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

இது புலமைப்பரிசில் தொடர்பாக போதிய தெளிவின்றி வெளியிட்ட கூற்றாகும்.

மறைந்த அமைச்சர் லலித் அத்துலத் முதலி இந்த புலமைப்பரிசில் முறையை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினார். அவரையே கட்சியிலிருந்து வெளியேற்றியவரின் மகனான சஜித் பிரேமதாஸவே இந்த கூற்றை முன்வைத்திருக்கின்றார். இது கேலிக்குரிய கூற்றாகும்.

இது சுதந்திரமாக இயங்கும் ஒரு நிதியம். சுதந்திரமாக இயங்கும் இந் நிதியத்துக்கு கிடைக்கப்பெறும் வருமானம் மாத்திரமே மஹாபொல புலமைப்பரிசில் வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகிறது.

மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு 500 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதென்பதையும் சஜித் பிரேமதாஸவிற்கு இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேனெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## மெய்வல்லுநர் போட்டி

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரி மகாவித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.செல்வராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக 66 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சன்னா கொடித்துவக்கு கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-84)

# அறுவடை நெல்லை நியாயமான விலைக்கு விற்க முடியாமல் விவசாயிகள் பெரும் அவதி

## வன்னியில் பரிதாபம்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கில் மீள்குடியேற்றப் பகுதியிகளில் இம்முறை நெல் விளைச்சல் அறுவடை ஆரம்பமாகி சில வாரங்கள் கடந்துள்ள நிலையில்அறுவடைசெய்தநெல்லை நியாய விலைக்கு விற்கமுடியாமல் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய அரசின் நிறுவனங்கள் தாமதித்து வருவதால் தனியாருக்கு குறைந்த விலையில் விற்று நட்டமடைய வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இடம்பெயர்ந்து தற்காலிக கொட்டில் வீடுகளில் வசிக்கின்ற தங்களுக்கு அரசு கொள்வனவு செய்யும் வரை நெல்லைப் பதப்படுத்தி சேமித்து வைப்பதற்கு வசதிகளில்லை எனவும் விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மீள்குடியேற்ற கொட்டில் வீடுகளில்வாழும்விவசாயகளுக்குநெல்லை பதப்படுத்தி களஞ்சியப்படுத்தும் வசதிகளும் இல்லை.

இதேவேளை,அரசின் விவசாய திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள நெல் வகைகளுக்கு சந்தை வாய்ப்புக்கள் மிகக் குறைவாக இருப்பதாகவும் சிபாரிசு செய்யப்பட்டிருக்காத நெல் வகைகளுக்கே கூடுதல் சந்தை வாய்ப்புக்கள் இருப்பதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

வன்னியிலுள்ள நெல் விவசாயிகள் கோரும் நிலை நியாயமானது என்று ஒப்புக் கொள்ளும் வெளி மாவட்ட நெல் வியாபாரிகள், நெல்லின் விலையை அரிசி ஆலைக் காரர்களே நிர்ணயம் செய்வதாகவும் அவற்றில் தம்மால் தலையிட முடியாது என்றும் தமிழோசையிடம் கூறினர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கருத்து வெளியிடும்போது, ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள நியாய விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்யுமாறு நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக கூறினார். (அ-2)



# மாரி ஒட்டேரோ டில்லிக்கு சென்று பல்தரப்புகளுடன் பேச்சு நடத்துவார்

(கொழும்பு)

இலங்கைக்கு இவ்வார இறுதியில் விஜயம் செய்யவிருக்கின்ற ஜனநாயகம் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமெரிக்க துணை இராஜாங்க செயலாளர் மாரி ஒட்டேரோ இலங்கையின் விஜயத்தின் நிறைவில் டில்லிக்கும் விஜயம் செய்யவிருப்பதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான இரண்டம் நிலை செயலாளர் மாரி ஒட்டேரோ 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 14 ஆம் திகதி வரையே இலங்கையில் தங்கியிருப்பார்.

அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரிகளான மாரி ஒட்டேரோ மற்றும் ரெர்பேர்ட் ஓ பிளேக் ஆகிய இருவரும் இவ்வார இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்ற நிலையிலும் மற்றுமொரு அதிகாரியான யுத்தக் குற்ற விவகாரங்களை கையாளும் அமெரிக்கத் தூதுவர் ஸ்டீபன் ஜே ராப் இலங்கையில் தங்கியிருக்கின்றார்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை நிறைவு செய்துகொண்டு கொழும்புக்கு திரும்பிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவசர விஜயமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தானுக்கு பயணமாக உள்ளார்.

அமெரிக்காவிற்கு சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தனது விஜயத்தை நிறைவு செய்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள நிலையில் சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவிற்கு பயணமாகியுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்திக் கொள்ளும் நடவடிக்கையாகவே ஜனாதிபதியின் பாகிஸ்தான் விஜயம் அமையும் என்றும் அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாகிஸ்தான் ஜனாதிபதி அசீப் அல் சர்தாரி, பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் செல்லவுள்ளனர்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவைக் கூட்டத்தின் 19 ஆவது கூட்டத்தொடரில் ஆதரவை திரட்டிக் கொள்ளும் வகையிலேயே இந்த விஜயம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாரி ஒட்டேரோ 14, 15 ஆம் திகதி வரை டில்லியில் தங்கியிருப்பார்.

அங்கு சிவில் சமூக பிரதிநிதிகள், அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் இளம் தலைவர்களையும் சந்திக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுவதுடன் புதிதாக பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் இருநாடுகளுக்கும் மேற்கொள்ளும் ஆரம்ப விஜயமாகும்.

இதேவேளை, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நரம்பியல் சத்திரசிகிச்சை மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அமெரிக்காவிற்கு பயணமாகியுள்ளார்.

அமெரிக்காவின் வைத்திய சங்கத்தின் அழைப்பின் பேரிலேயே அவர் வோஷிங்டனுக்கு சென்றுள்ளார்.

அந்த மாநாட்டில் விசேட உரையையும் ஆற்றவுள்ளார். அத்துடன் தற்போது மேற்கொள்ளப்படும் நரம்பியல் சத்திரசிகிச்சை தொடர்பிலும் கண்காணிப்பார்.

ஜனாதிபதி பாகிஸ்தான் விஜயத்தை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் ஐ.நாவின் ஆதரவை திரட்டிக் கொள்ளும் வகையில் பல நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ-2)

# கூட்டமைப்புடனான் பேச்சுக்களில் எவ்வித நன்மையும் கிட்டவில்லை

## பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு திட்டமொன்றை முன்வைக்கும் முனைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் பலன் எதுவும் கிட்டவில்லை என பொருளாதார அபிவிருத்தி அசைம்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அரசாங்கம் நம்பிக்கை இழந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வழி முறைகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பின்பற்றி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மெய்யான நோக்கமின்றி தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இடை நடுவில் நிபந்தனைகளை விதித்து வெளியேறிச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வழியைப் பின்பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாக பசில் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# புலிகளிடமிருந்து ஜனாதிபதி மஹிந்தவை பாதுகாக்க ஆலோசனை வழங்கிய அமெரிக்கா

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தாக்குதல்களில் இருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தப்புகின்றமைக்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அமெரிக்கா சொல்லிக் கொடுத்துள்ளது என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டின் இறுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்துக்கு சென்று இருந்தார்.

இவருக்கு அங்கு கொடுக்கப்பட்டு இருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்த்து அசந்து போனார்.

இந்நிலையில் நாட்டில் சொந்த பாதுகாப்பை வலுப்படுத்த எண்ணினார்.

இதற்காக வெளிநாட்டு இராஜதந்திர மட்டத்தில் இருந்து ஆலோசனைகள் பெற முடிவெடுத்தார்.

இச்சூழலில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தொலைபேசி மூலம் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்குடன் தொடர்பு கொண்டு ஜனாதிபதி மஹிந்தவின் சொந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை எப்படி எல்லாம் மேம்படுத்தலாம்? என்று வினவி இருக்கின்றார். தூதுவரும் பொருத்தமான ஆலோசனைகளைக்கூறி இருக்கின்றார்.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து கடந்த 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் 18 ஆம் திகதி அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட இராஜதந்திர ஆவணம் ஒன்றில் இருந்து விக்கிலீக்ஸ் மூலம் கிடைத்துள்ளது. (அ-2)

# புலிகளுக்கு எதிரான இறுவெட்டை பாதுகாப்பு அமைச்சு தயாரித்தது

## வன்னி மக்களின் ஆதாரங்களாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் குற்றச் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சு விசேட இறுவெட்டு ஒன்றை வெளியீடு செய்யவுள்ளது.

வன்னிப்போர் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் மக்களுக்கு இழைத்த அநீதிகள் மற்றும் குற்றங்கள் தொடர்பில் இந்த இறுவெட்டு வெளியிடப்படுகின்றது.

வன்னி மக்களின் ஆதாரங்களுடன் இந்த இறுவெட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இறுதிக் கட்டப் போரின் போது சிறுவர் போராளிகளை இணைத்துக் கொண்டமை, மதகுருமார் மீது தாக்குதல் நடத்தியமை, தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்கள் இந்த இறுவெட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

போரின் இறுதி நாட்களில் புலிகள் மேற்கொண்ட கொலைகள் தொடர்பில் பிரதேச மக்களே சாட்சியமளித்துள்ளனர்.

இந்த இறுவெட்டை சர்வதேச புலி வலையமைப்பின் பிரசாரங்களுக்கு எதிராக பயன்படுத்த முடியும் என பாதுகாப்பு அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(அ-2)

# குளியலறையில் வழுக்கி விழுந்த பாடகி ஜானகிக்கு தலையில் காயம்

(திருப்பதி)

திருப்பதி விடுதி குளியலறையில் வழுக்கி விழுந்த பிரபல பின்னணி பாடகி ஜானகிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதை தொடர்ந்து அவருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருப்பதி ஏழுமலையான் பெருமைகளை அன்மையா என்பவர் கீர்த்தனைகளாக பாடியுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் இந்த கீர்த்தனைகள் திருப்பதியில் விழாவாக நடத்தப்படுவது வழக்கம். பிரபல பாடகர்கள் கலந்து கொள்ளும் இந்த விழாவில் பின்னணி பாடகி ஜானகியும் இதில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார்.

நேற்று முன்தினம் இரவு கச்சேரியில் கலந்து கொண்டு கீர்த்தனைகளை பாடிய பின்னர் தனியார் விடுதிக்கு வந்து ஓய்வெடுத்தார்.


விடுதியில் உள்ள குளியலறைக்கு ஜானகி சென்றார். குளியலறையில் தண்ணீர் தேங்கியிருந்ததை கவனிக்காததால் கால் வழுக்கி அதில் தவறி விழுந்தார்.

இதில் ஜானகியின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. தலையில் இருந்து அதிகளவு இரத்தம் வெளியேறியதால் அவர் மயக்கமடைந்தார். இதனைக் கண்ட அவரது உதவியாளர் கொடுத்த தகவலின் பேரில் ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனை முன்பு அவரது ரசிகர்கள் திரண்டனர். ஜானகியின் உடல் நிலை குறித்து தகவல் தெரிவிக்குமாறு கோஷமிட்டனர். இதனைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைக்கு பின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது.

இன்னும் இரண்டு நாட்கள் சென்ற பின்னர் வீடு திரும்புவார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர். (அ-2)

# கப்டன் ஆட்டம் ஆரம்பம்!



**கையை நீட்டி... நாக்கை துருத்தி...!**

சட்டசபையில்... 'சிம்மா... சிம்மா... நரசிம்மாவாக' கர்ஜித்த விஜயகாந்த்தான் இந்த வாரத்தில் சூடான பேச்சாளராக மாறிப்போனார்.

சட்டமன்றத்தில் முதன்முறையாக அ.தி.மு.கவும் தே.மு.தி.கவும் மல்லுக்கட்டி இருக்கின்றன. விஜயகாந்த் உட்பட தே.மு.தி.க. உறுப்பினர்கள் கூண்டோடு அவையில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். '10 நாட்கள் சபைக்கு வரக்கூடாது' என்று விஜயகாந்த் இடைநிறுத்தப்பட்ட நிலையில் சட்ட சபையில் நடந்த அமளியைப் பற்றி இரண்டு தரப்பினரின் கருத்துகள்.

இடைநிறுத்த உத்தரவு வந்த நிலையில் இன்னும் கொதிப்புடன் மீடியாவை எதிர் கொண்டார் விஜயகாந்த்!

எம்.எல்.ஏக்களை தேர்ந்து எடு த்து சட்டமன்றத்துக்கு அனுப்பி வைப்பதே மக்கள் பிரச்சினைகளை பேசுவதற்குத்தான். ஆனால் பேச விடுவதில்லை. தேர்தல் கூட்டணி பற்றி அவங்க பேசுறாங்க. நாங்க பேசுவதற்கான உரிமையைப் பறிக்கிறார்கள். தனியாக நிற்கத் திராணி இருக்கிறதா... தைரியம் இருக்கிறதா? என்றெல்லாம் கேட்கிறார்கள்.

திருநெல்வேலிக்கே அல்வாவா? திருப்பதிக்கே லட்டா? மதுரைக்கே மல்லிப்பூவா? என்று ஊர்ப்பக்கம் சொல்லுவார்கள். இப்போது அதையே நான் திருப்பிச் சொல்கிறேன். தே.மு.தி.கவுக்கே சவாலா? நாங்கள் ஆதரவு கொடுத்ததால்தான் அ.தி.மு.க-வே இன்று அரியணையில் அமர்ந்திருக்கிறது? கடந்த தி.மு.க.ஆட்சியில் 13 இடைத்தேர்தல்கள் நடந்தன. எல்லாத் தேர்தலிலும் துணிச்சலோடு தன்னந்தனியாக களம் இறங்கியது எங்கள் கட்சி. ஆனால், ஐந்து இடைத் தேர்தல்களில் போட்டியிடாமல் அ.தி.மு.க. ஒதுங்கி நின்ற துணிச்சலை என்னவென்று சொல்வது? இடைத் தேர்தலைக்கூட சந்திக்காமல் பயந்து ஓடி ஒளிந்து கொண்ட அ.தி.மு.க. கூட்டணி இல்லாமல் தேர்தலைச் சந்தித்திருக்கிறதா? ஊர் கூடித் தேர் இழுத்து விட்டு இப்போது நாங்கள்தான் இழுத்தோம் என்கிறார்கள். மக்களுக்கு உண்மை தெரியும். எங்களோடு கூட்டணி வைத்தற்காக வெட்கப்படுகிறேன் என்று சொல்லி இருக்கிறார் ஜெயலலிதா. உங்களோடு ஏன் சேர்ந்தோம் என்று எங்களுக்கு அருவருப்பாக இருக்கிறது. அந்த அளவுக்கு இந்த ஆட்சி நடக்கிறது!

சட்டசபையில் நான் கை நீட்டிப் போசுவதை மட்டுமே டி.வி.யில் காட்டுகிறார்கள்... அந்தப் பக்கம் அ.தி.மு.க. எம். எல். ஏக்கள் என்ன செய்தார்கள் என்பதையும் காட்டியிருந்தால் உங்கள் நடுநிலை மீது நம்பிக்கை வந்திருக்கும். பாராளுமன்றத்தின் ராஜ்ய சபா, லோக் சபா நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்புவதற்காக தனியாக டி.டி. சனல் இருக்கிறது. பாராளுமன்றத்தில் எது நடந்தாலும் அதை அப்படியே நேரடியாக காட்டுகிறார்கள். அது போல் பொதிகை சனலில் காட்ட வேண்டியதுதானே? அவர்களுக்குத் தேவையான பகுதிகளை மட்டுமே எடிட் செய்து ஒளிபரப்பி ஆனந்தப்படுகிறார்கள்.

எங்களுக்கு இறங்கு முகம் தொடங்கி விட்டதாம். இதை வாக்குப் போட்ட மக்கள்தான் சொல்ல வேண்டும். ஜெயலலிதா திருந்தி விட்டார் என்று நினைத்தோம். அவர் திருந்தவில்லை. அதே ஆவணப் போக்கோடு தான் நடக்கிறார். போன ஆட்சியில் ஜெயலலிதா அவைக்கு வந்து ஒரு மணி நேரத்துக்கு மேல் பேசிவிட்டு என்னைப் பேச விடவில்லை என்று சொன்னதை எல்லாம் மறக்க முடியுமா? எனக்கு எந்தப் பயமும் இல்லை. மிரட்டிப் பணிய வைத்து வேலை வாங்க நினைத்தால் எதுவும் எங்களிடம் நடக்காது. தகுதி இல்லாதவர் தலைவர் ஆகியிருக்கிறார் என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். உங்க கட்சி எம்.பி.சேடப்பட்டி முத்தையா பாராளுமன்றத்தில் வாக்குப் போடக் கூட தெரியாமல் இருந்தாரே. வாக்குப் போடக்கூட தகுதி இல்லாத கட்சியோடு கூட்டணி வைத்தற்காக நான் வெட்கப்படுகிறேன்.

தே.மு.தி.க.வோடு கூட்டணி வைக்க எனக்கு விருப்பமில்லை. கட்சிக்காரர்கள்தான் விரும்பினார்கள். அதனால்தான் கூட்டணி சேர்ந்தோம் என்று சொல்லியிருக்கிறார். எங்களோடு கூட்டணி சேர எப்படியெல்லாம் கெஞ்சினார்கள் என்று எடுத்து விட முடியும். இப்போது எம்.எல்.ஏக்களாகவும் மந்திரிகளாகவும் இருக்கிறவர்களில் யார் யாரெல்லாம் தூது வந்தார்கள் என்று சொல்லட்டுமா?

இது சவால்... ஏற்கத் தயாரா?

சொல்லி முடிக்கும்போது கண் சிவக்கிறது!

**சட்டமன்றம் என்பது மற்போர் களம் அல்ல...**

பழ.கருப்பையா(அ.தி.மு.க. எம்.எல்.ஏ): சட்டசபையில் விஜயகாந்த் நடந்துகொண்ட விதம் பலரையும் முகம் சுளிக்க வைத்தது. தன்னை நோக்கிக் கூச்சல் இடுகிறார்கள் என்றவுடன் கையை நீட்டியும் உதட்டைக் கடித்துக்கொண்டும் நாக்கை துருத்திக் கொண்டும் பேசுவது யாராலும் ஜீரணிக்ககூடியது இல்லை. கூச்சல் என்பது எல்லாத் தரப்பிலும் வாடிக்கைதான். விஜயகாந்தின் ஆட்கள் எழுந்து நின்று அவையை ரணகளப்படுத்தவில்லையா?

ஒரு நடிகரிடம் ஒரு இயக்குநர் சென்று உங்களை எதிர்த்து சத்தம் போடுகிறபோது நீங்கள் என்ன செய்வீர்களோ அதைச் செய்யுங்கள் என்று சொன்னால் ஒரு நடிகர் அந்த சூழலைக் கற்பித்துக்கொண்டு என்ன செய்வாரோ... அதைத்தான் விஜயகாந்த் அவையில் செய்தார். அவர் இன்னும் நடிகர் என்ற மனநிலையில் இருந்து மாறவில்லை. குறிப்பாக நடிகர் என்ற மனநிலையில் இருந்து விடுபடவில்லை.



பொறுப்புமிக்க அவையில் சட்டம் செய்யும் அவையில் தான் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் என்ற நினைவே அவருக்கு இல்லை. ஏற்கனவே தேர்தல் காலத்தில் தன் கட்சி வேட்பாளரையே அடித்து விட்டார். அவருடைய கட்சி வேட்பாளர் அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்றாலும் மக்கள் அந்தச் செயலை அநாகரிகமாகவே கருதினார்கள். சட்டமன்றம் என்பது மற்போர் களம் அல்ல... சொற்போர் களம். கருத்தில் வலிமை இருக்குமானால் ஒருவர் கையை நீட்டாமலேயே அந்தக் கருத்து அவையில் சம்மணம் போட்டு அமர்ந்துவிடும். அவரால் அம்மாவின் கருத்தை எதிர்கொள்ள முடியவி ல்லை என்பதைத்தான் அவருடைய பதைபதைப்பான நடத்தை காட்டியது. அவர் முற்றாக மனச் சமநிலையை இழந்து விட்டார்.

அன்று என்ன நடந்தது என்றால் தே.மு.தி.க.உறுப்பினர் அரசைக் கடுமையாக விமர்சித்துப் பேசினார். அதற்கு மந்திரிகள் உடனுக்குடன் பதில் அளித்தார்கள். முடிந்தால் அவர் மறுபடியும் கேள்வி கேட்கலாமே தவிர மிரட்டக்கூடாது. கருணாநிதி அரசு மீது மக்களுக்குப் பெருஞ்சினம் மூண்டிருந்தது. கருணாநிதியை எப்போது வீட்டுக்கு அனுப்புவது என்று துடிதுடித்துக் கிடந்தார்கள் மக்கள். அதற்கு மாற்றாக அம்மாவையே பார்த்தார்கள். சென்ற தேர்தலில் அம்மாவுடன் கூட்டணி சேராத ராமதாஸ் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். அம்மாவுடன் சேர்ந்த விஜயகாந்த் சட்டமன்றத்துக்குள் நுழைந்தார்.

ஆனால், நாங்கள் முட்டுக்கொடுத்துதான் இந்த மரம் நின்றது என்று விஜயகாந்த் கருதினார். இந்தப் பிழையான எண்ணத்தை அகற்ற அம்மா உள்ளாட்சித் தேர்தலில் அவரை மட்டும் அல்ல... எவரையும் அழைக்காமல் விட்டுவிட்டார். தனித்து நின்றதால் ஒன்றுமே இல்லை என்கிற உண்மை வெளிப்பட்டுவிட்டதே என்ற கோபம் விஜயகாந்துக்கு எழுந்திருக்கிறது.

கடவுளுடனும் மக்களுடனும் தான் கூட்டு என்று சொன்ன விஜயகாந்த் 2006 தேர்தலில் 234 தொகுதிகளிலும் விதைத்தார். ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே அறுவடை செய்தார். அதன் பின் வந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 இடங்களில் நின்றார். ஆனால், எந்த ஒன்றிலும் வென்றார் இல்லை. உள்ளாட்சித் தேர்தலில் அவருடைய மானம், மரியாதை எல்லாம் போய் விட்டது. இந்தப் பின்னணியில் அவர் இன்னொரு ராமதாஸ் ஆகிவிடாமல்

**தமிழக பார்வை**

எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருக்க முடிவதே அம்மாவோடு சேர்ந்தால்தான். அதை அவருக்குப் புரியவைப்பதற்காகத்தான் அம்மா அவரை உள்ளாட்சித் தேர்தலில் கைவிட்டார். குளத்தைவிட்டுக் கரையில் எடுத்துப் போடப்பட்ட மீன் போல அவர் துடிதுடிக்கிறார். சங்கரன் கோவில் வருகிறது. நின்று பாருங்களேன் என்று அம்மா நேரடியாக விட்ட அறைகூவல் விஜயகாந்த் ஆட்டம் காணச் செய்துவிட்டது.

விஜயகாந்த் சட்டமன்றத்துக்கு வெளியே போய் ஆளுநர் ஆட்சி இருந்தால் நான் நின்று காட்டுவேன் என்று சொன்னாராம். ஒவ்வொரு இடைத் தேர்தலின்போதும் ஓர் அரசு இரண்டு மாதம் பதவி விலகி மீண்டும் ஆட்சி நடத்துவது விளையாட்டுக் காரியம் இல்லை. விஜயகாந்த் சொன்னார் என்பதற்காக நம் அரசியல் சாசனத்தை கேலிக்கு உள்ளாக்க முடியாது. இது மலைய்யைத் தூக்கி தலையில் வை. நான் சுமக்கிறேன் என்பது போன்ற சவால்தான்!

**ஜூனியர் விகடன்**

# பிரதேச சபைகளின் தேர்தல்கள் மார்ச் 24 இல் இடம்பெறும்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு –புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேசசபைகளின் தேர்தல் எதிர் வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி இடம்பெறும்என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைபற்று பிரதேசசபைகளுக்கு தேர்தல் நடத்துவது தொடர்பிலான இறுதித்தீர்மாணம் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்டது.தேர்தல் திணைகளத்தின் பேச்சாளர் ஒருவர் இதனை தெரிவித்தார். தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதற்கு குறித்த இரண்டு பிரதேச சபைகளுக்கும் வேட்பு மனு தாக்ல் செய்து கொள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நிலக்கண்ணிவெடி அகற்றப்படாததன் காரணமாக கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசசபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வீதி மின்விளக்குகளுக்கு இலவச மின்சாரம் இல்லை

## சலுகைகள் கிடைக்கும் என்கிறார் சம்பிக்க



(யாழ்ப்பாணம்)

வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள விளக்குகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க முடியாது. ஆனால் லுகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மின்சார இணைப்பு நடவடிக்கைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேசசபை மற்றும் நகரசபைத் தவிசாளர்களினால் வீதிகளில் பொருதப்பட்டுள்ள விளக்குகளால் அதிகளவு மின்சாரம் செலவிடப்படுகின்றது.இதனால் சபைக்கு பாரிய நிதி நெருக்கடி ஏற்படுகிறது. எனவே வீதி விளக்குகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையடுத்து கருத்து தெரிவிக்கையிலேயே சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தவிர வீதி அகலிப்பு காரணமாகவும் மின்சாரம் அதிகளவில் தடைப்படுகிறது என மேலும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், அ.விநாயகமூர்த்தி, செ.அலஸ்ரீன் மற்றும் யாழ்.மாவட்ட மின்சார சபை அதிகாரிகள் ,பிரதேச செயலர்கள்,பிரதேசசபைமற்றும்நகரசபை தவிசாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# அரிசியை ஏற்றுமதி செய்ய அனுமதிகோரும் வர்த்தகர்கள்

## வர்த்தக அமைச்சு தகவல்

(கொழும்பு)

அரிசியை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான அனுமதியை நான்கு உள்ளூர் வர்த்தகர்கள் கோரியுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள் நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது சந்தைப்படுத்தல் அதிகார சபையில் களஞ்சியப்படுத்தில்வக்கப்பட்டுள்ள நெல் வர்த்தகர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதனூடாக பெற்றுக் கொள்ளப்படும் அரிசி, ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். உரிய தரத்திற்கு அமைய களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள நெல் அரிசியாக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இம்முறை போகத்தின் போதான அறுவடைகள் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கு சந்தைப் படுத்தல் அதிகார சபையின் களஞ்சியசாலையை வெற்றிடமாக்கும் தேவைஏற்பட்டுள்ளதாக அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கோ.செல்வராஜா மங்கள விளக்கேற்றுவதனையும் விருந்தினர்கள் அருகில் நிற்பதனையும் விழா நாயகர்களையும் படத்தில் காணலாம் . (படம்:–பூநகரி செய்தியார்)

# தேசத்திற்கு மகுடம் கண்காட்சி உயிர் ஒன்றை காவு கொண்டது

அநுராதபுரத்தில் இடம்பெறும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி வளாகத்தில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் பாரிதாபமாக உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்காட்சியை பார்வையிட வருகை தந்திருந்த வவுனியா வைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரேநேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கண்காட்சியை பார்த்துக் கொண்டிருந்த குறித்த இளைஞர் மீது மின் கடத்தியொன்று விழுந்து இவ்விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சி எதிர் வரும் 12 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சுப்பிரமணியசுவாமி ஈழத்தமிழருக்கு செய்த துரோகத்தை மறக்கமுடியாது

## பிரபா எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட காலத்திலும் இந்தியாவில் இருந்து கொண்டு இலங்கை தமிழர்களுக்கு எதிராக குரல் கொடுத்தவர் இந்த சுப்பிரமணியம் சுவாமி என்பதை இலங்கை தமிழ் மக்கள் மறந்துவிடக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய அரசியலில் கோமாளி பட்டம் பெற்றுள்ள சுப்பிரமணியம் இலங்கை வந்திருப்பது வெறும் அரசியல் விளம்பரத்திற்காகவே .யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் விடுதலை போராட்டத்திற்கு எதிராகவும் தமிழ் நாட்டு மக்கள் இலங்கை தமிழ் பிரச்சிணையில் கொண்டிருந்த அக்கறைக்கு எதிராகவும் குரல் கொடுத்தவர் சுப்பிரமணியம் சுவாமி என்ற இந்த தனி நபரே.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவின் வருகை மூலமாக எமக்கு எதுவும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் நாம் உள்ளோம்.எமது பிரச்சினையை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு சென்றும் முடிபுபெற முடியாத நிலையில் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதை தீர்மானிக்க முடியாத நிலையில் உள்ளோம்.

இதனாலேயே இவரை சந்திப்பதை நாம் தவிர்த்துள்ளோம்.இவர் போன்ற எமது சமூகத்திற்கு எதிராகச் செயற்பட்வர்களைநாட்டிற்குஉள்ளே வருவதற்கு கூட நாம் அனுமதிக்கக் கூடாது. இவரை வைத்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இலங்கை தமிழ் அரசியல்வாதிகளுக்கு இல்லை என்பதே எனது கருத்தாகும் எனவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நீதியமைச்சின் செயற்பாடுகளை உலக வல்லரசுகள் வரவேற்கின்றன

## நீதியமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

நீதி அமைச்சின் செயற்பாடுகள் உலகின் வல்லரசு நாடுகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதி அமைச்சின் கீழ் இயங்கும் இணக்க சபையின் செயற்பாடுகளை வரவேற்றுள்ள உலகின் வல்லரசு நாடுகளில் ஒன்றான சீனா அந்த செயற்பாடுகளை பின்பற்றுவது தொடர்பில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

அநுராதபுரம் ஒயமடுவவில் நடைபெற்றுவரும் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சியை முன்னிட்டு நீதி அமைச்சினால் அனுராதபுரம் மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரச்சினைப்படும் இரு தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு செல்லாமல் தமது பிரச்சினைகள் தொடர்பாக இணக்கசபையின் ஊடாக தீர்வுகளை பெற்றுக் கொள்கின்றனர்.

நீதித்துறைக்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளை நீதி அமைச்சு முன்னெடுத்து வருகின்றது. நவீன யுகத்திற்கு ஏற்றவகையில் எமது செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கவுள்ளோம்.

அதேபோன்று இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகின்றது.அவற்றை கட்டுப்படுத்தவும் நீதி அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் ஊடாக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பணிப்புறக்கணிப்பு

அரசாங்க தாதிமார் சங்கத்தி னால் இன்று வியாழக்கிழமை ஒரு மணி நேர பணிப்புறக்கணிப்பு நடைபெறவுள்ளது என அரசாங்க தாதிமார் சங்க செயலாளர் பி.வி.சிவயோகம் அறிவித்துள்ளார்.

இப்பணிப்புறக்கணிப்பானது நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை சகல வைத்தியசாலைகளிலும் தாதிய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பின்போது 3 கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளபோதும் ஏனைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே இப்பணிப்புறக்கணிப்பு இடம் பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-7)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 35

சோவியத்யூனியனுக்கு இராணுவத்தை முறைப்படி நிறுத்திவைக்க ஏராளமான தேர்ச்சி மிக்க கமாண்டர்களும் அரசியல் போதகர்களும் இராணுவ நிபுணர்களும் தேவைப் பட்டனர். இவர்களைப் பயிற்றுவிப்பதற்காக 1941-இல் பல இராணுவக் கல்விக் கூடங்களும் இராணுவ விஞ்ஞானப் பேரவைகளும் தோற்றுவிக்கப்பட்டன. ஆனாலும், யுத்தம் தொடங்கியபோது, படைப்பிரிவுகளுக்குத் தேவையான அளவு கமாண்டர்களை அளிக்க முடியவில்லை.

சோவியத் போர்க்கலை, இராணுவ நடவடிக்கைகளின் வடிவங்கள், முறைகள் சம்பந்தமாக அக்கால கட்டத்தில் மிக முற்போக்கானவையாயிருந்த கருத்துக்களை வகுத்தளித்தது. இராணுவத்தின் முப்படைகளையும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்பில் பயன்படுத்தினால்தான் பலமிக்க எதிரியை வெற்றிகொள்ள முடியும் என்று கருதி போர்த்தந்திரம் நவீன ஆயுதப் போராட்டத்தின் தலைமையை சரிவர மதிப்பிட்டது. இது "டாங்கி யுத்தம்," "வான் யுத்தம்," "கடல் யுத்தம்" போன்ற பூர்ஷ்வா தத்துவங்களையும்- இவை முக்கிய பங்கை முப் படைகளில் ஏதாவது ஒரு படைக்கு அல்லது ஒரு படை வகைக்கு மட்டும் தந்தன- மற்றும் மின்னல் வேகயுத்தத்தை ஆதாரமாகக் கொள்வதையும் நிராகரித்தது.

போர்த் தந்திரக் கலையில், சேனை மற்றும் படை நடவடிக்கைகளைத் தயார்ப்படுத்தி நிறைவேற்றுவது சம்பந்தமாக கோட்பாட்டு ரீதியாகப் புதிய, விஞ்ஞானபூர்வ தத்துவம்

படைப்பிரிவுகளிலும் கப்பல்களிலும் போதனைப்பணியை மேம்படுத்தவும் போர் வீரர்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை உயர்தவும் விசேடக் கவனம் செலுத்தப்பட்டது. இந் நோக்கத்தோடு இராணுவ மற்றும் கப்பற்படைக் கட்சி ஸ்தாபனங்களை உறுதிப்படுத்தவும் கமாண்டர்கள் மத்தியில் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1941 ஆரம்பத்தில் இராணுவத்திலும் கப்பற்படையிலும் 5 இலட்சத்துக்கும் கூடுதலான கம்யூனிஸ்டுகளும்- இது 1938-இல் இருந்ததைவிடமும்

குண்டுவீச்சு விமானங்களை இயக்கும் சோவியத்யூனியனின் பெண் விமானிகள்



கிகளும் குறைந்த அளவில் தான் உற்பத்தி செய்யப்பட்டன. லாரிகள், இழுவை சாதனங்கள் போன்ற போக்குவரத்துச் சாதனங்கள் போதவில்லை. அந்நேரத்தில் நாட்டின் பொருளாதார வாய்ப்புக்கள் இவற்றை இன்னமும் குறைவான கால கட்டத்தில் செய்ய அனுமதிக்கவில்லை.



அச்சு நாடுகளின் விமானக் குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்புத் தேடும் சோவியத்தின் குழந்தைகள்

பொது இராணுவ-போர்த் தந்திர நிலவரத்தையும் பாசிச ஜேர்மனி தாக்கக் கூடிய காலக்கெடுவையும் மதிப்பிடுவதில் இராணுவ- அரசியல் தலைமை இழைத்த பெரும் தவறுகளும் நாடு தற்காப்

ஈடுபட்டிருந்தது என்பதை பற்றி புறவய ரீதியான மதிப்பீட்டைத் தருகிறார். "நாட்டின் தற்காப்பு விடயம் அதன் முக்கிய அம்சங்களிலும் திசைகளிலும் சரியாக இருந்தது என எனக்குத் தோன்றுகிறது. பல ஆண்டுகளாக பொருளாதார மற்றும் சமூக அம்சங்களில் எல்லாம் அல்லது இயன்றது அனைத்தும் செய்யப்பட்டன. 1939 முதல் 1941 நடுப்பகுதி வரையிலான காலகட்டத்தில் முயற்சிகளை எடுத்துக் கொண்டனர். இதற்கு ஏராளமான சக்தியும் சாதனங்களும் தேவைப்பட்டன. வளர்ச்சியடைந்த தொழிற்துறை, கூட்டுப் பண்ணைமுறை, சர்வ பொதுக் கல்வியறிவு, மக்களினங்களின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் சோஷலிச அரசின் பொருளாதார- ஆன்மீக சக்தி, போர்முனையையும் பின்னணியையும் ஒன்றாக இணைக் கத் தயாராக உள்ள லெனினியக் கட்சியின் தலைமை இவையனைத் தும் பிரமாண்டமான நாட்டின் தற்காப்புத் தன்மைக்கு மகத்தான ஓர் அடிப்படையாக, அமைந்தது. அத்துடன் பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம் பெற்ற மாபெரும் வெற்றியின் முதல் காரணமாக விளங்கின" என்று அவர் எழுதினார். ஆனால், அத்தோடு கூட "எல்லாவற்றையும் அதன தன் இடத்தில் வைக்க வரலாறு உண்

## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்

இதன் அடிப்படையாகத் திகழ்ந்தது. காலாட் படை, டாங்கிகள், பீரங்கிகள், விமானப்படை மற்றும் வான் இறக்குப்படைகளின் ஒன்று சேர்ந்த தாக்குதல்களின் உதவியால் எதிரியின் பரப்பில் ஆழ ஊடுருவி எதிரி



சோவியத்யூனியனின் மாலுமிகள்படை

யின் தற்காப்பை ஒரே சமயத்தில் செயலற்றதாக ஆக்குவதுதான் இதன் நோக்கம். உலகில் வேறு எந்த இராணுவத்திடமும் இத்தத்துவம் இருக்கவில்லை.

மடங்கிற்கும் அதிகம்-20 இலட்சத்துக்கும் அதிகமான காம்சமோல் உறுப்பினர்களும் இருந்தனர்.

ஆனால், எண்ணிக்கையில் கணிசமாக அதிகரித்துள்ள இராணுவத்தையும் கப்பற் படையையும் புனரமைத்து, மறு ஆயுதந் தரித்து, புதிய ஆயுதங்களைக் கையாள பயிற்சியளிக்க எதிரியின் ஆக்கிரமிப்பு தொடங்கும் முன் வெகு குறைவான காலமே எஞ்சியிருந்தது. புதியரக விமானங்களும் ராங்

பிற்குத் தயாராவதன் மீது தாக்கம் செலுத்தின. சோவியத் யூனியனின் மீது படையெடுக்க ஜேர்மனி தயாரகி வருகிறது என்று செய்திகள் கிடைத்துக் கொண்டிருந்த போதிலும் வந்து கொண்டிருக்கும் யுத்தத்தை இராஜ தந்திர வழியில் தள்ளிவைக்க முடியும் என்றுபலர் நம்பினார்கள். மேற்கு இராணுவ வட்டாரங்களின் துருப்புகள் உரியநேரத்தில் முழு இராணுவ தயார்நிலைக்கு கொண்டு வரப்படவில்லை. ஹிட்லர் துருப்புகள் திடீரெனதாக்கக் கூடும். என்ற எச்சரிக்கையுடன் கூடிய கட்டளை எல்லைப் புற வட்டாரங்களுக்கு ஜூன் 21 ஆம் திகதி மாலைதான் பிறப்பிக் கப்பட்டது. இது பல படைப் பிரிவுகளைச் சென்று அடையவேயில்லை. ஆக்கிரமிப்பாளனின் முதல் அடி சோவியத் துருப்புக்களுக்கு எதிர்பாராததாயிருந்தது.

மாபெரும் சோவியத் படைத் தலைவரும் சோவியத் யூனியனின் மார்ஷலுமாகிய கெ.கா.ஜூக்கவ்- இவர், யுத்தம் தொடங்கவிருந்தபோது சோவியத் இராணுவத் தலைமை யகத்தின் தலைவராக இருந்தார். நினைவுகளும் சிந்தனைகளும் என் னும் தன்னுடைய நூலில், எதிர்நோக்கி வந்துகொண்டிருந்த ஹிட்லர் ஜேர்மனியின் ஆக்கிரமிப்பிற்கு தற்காப்பை ஏற்பாடு செய்வதில் நாடும் இராணுவமும் எப்படி



கெ.கா.ஜூக்கவ்

மையிலேயே மிகக்குறைவான சமாதான காலத்தைத்தான் நமக்கு அளித்தது. பலவற்றை நாம் சரியாக ஆரம்பித்தோம். பலவற்றை முடிக்க முடியவில்லை. பாசிச ஜேர்மனி தாக்கும் நேரத்தை நிர்ணயிப்பதில் நாம் செய்த தவறு, தாக்கம் செலுத்தியது. எதிரியின் முதல் அடிகளை எதிர்ப்பதற்கான தயாரிப்புகளில் இருந்த குறைபாடுகள் இவற்றுடன் தொடர்பு கொண்டிருந்தன" என்று அவர் வலியுறுத்தினார். (தொடரும்)

# காணி அதிகார சட்டமூலத்திற்கு முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ன?

## ஹக்கீமிடம் கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் காணி அதிகாரம் தேவையென்கின்றனர். ஆனால், மேல் மாகாண சபையில் இவ் அதிகாரத்தை பறிக்கும் சட்டமூலத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் உண்மை முகம் என்னவென்பதை பகிரங்கப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

நாடு, நகர திட்டமிடல் நிகழ்ச்சிச் சட்ட மூலம் தொடர்பில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை கட்சிகளின் நிலைப்பாடு என்னவென்பது வெளிப்படுத்த வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இந்தியாவிடம் 13 பிளஸ் அதிகாரங்களை வழங்குவதாக அரசாங்கம் உறுதியளிக்கிறது. ஆனால், நாடு, நகர திட்டமிடல் திருத்த சட்ட மூலத்தை கொண்டு வந்து பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள மாகாண சபைக்குள்ள காணி அதிகாரத்தை பறிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மாகாண சபைகளுக்குள்ள காணி அதிகாரங்கள் பறிக்கப்படுவதை எதிர்க்கின்றனர்.

ஆனால், மேல் மாகாண சபை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இச் சட்ட மூலத்தை ஆதரித்து வாக்களித்துள்ளனர். கிழக்கில் எதிர்ப்பு, மேல் மாகாணத்தில் ஆதரவு அப்படியானால் இது தொடர்பில் ரவூப் ஹக்கீமின் உண்மையான முகம் எது என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றும் வித்தையை தொடரக்கூடாது. அத்தோடு அரசாங்கத்திற்குள் அங்கம் வகிக்கும் இ.தொ.கா., ஈ.பி.டி.பி.உட்பட சிறுபான்மை கட்சிகள் இச் சட்டமூலம் தொடர்பாகக் கொண்டுள்ள நிலைப்பாட்டை தாம் சார்ந்த சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்திலுள்ள அடிப்படைவாதிகளின் அச்சுறுத்தலுக்கு அடிபணிந்தே இச்சட்ட மூலம் கொண்டு வரப்படவுள்ளது. இது மிகவும் பயங்கரமானது. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் மதஸ்தலங்கள், பாரம்பரிய காணிகள் ஏன் தனியார் காணிகளையும் மத்திய அரசாங்கத்தின் அமைச்சரால் சுவீகரிக்க முடியும்.

மாகாண சபைகளுடன் இது தொடர்பாக அரசாங்கம் எதுவிதமான பேச்சுவார்த்தைகளையும் நடத்த வேண்டிய அவசியமில்லை என்றார். (அ-2)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெயினாகாடு பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் அண்மையில் உயிரிழந்துள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான எம்.சுலைமா லெவ்வை (வயது-55) என்பவரே யானை தாக்கி உயிழிந்தராவார்.

நெயினாகாடு பிரதேசத்தில் தனது வயல் காணியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது காட்டு யானை துரத்தி தாக்கியதினால் இவர் உயிரிழந்துள்ளார்.

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளமையினால் விவசாயிகளும் பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அறுவடை இயந்திரங்களை இயக்க ஆட்கள் பற்றாக்குறை

## கிழக்கு விவசாயிகள் கவலை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை அறுவடைக்குரிய இந்திய தயாரிப்பான நவீன ரக இயந்திரத்தை செலுத்துவதற்கு பயிற்சி மற்றும் அனுபவம் பெற்ற சாரதிகள் போதியளவு இல்லாத நிலையில் விவசாயிகள் இந்தியாவிலிருந்து சாரதிகளை வரவழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

போர் முடிவடைந்த நிலையில் வேளாண்மை அறுவடையில் மனித சக்திக்கு பதிலாக இயந்திரங்களை கூடுதலாக பயன்படுத்தும் நிலைமை கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ளது.

இந்த இயந்திரங்களை செலுத்தக் கூடிய சாரதிகள் உள்ளூரில் இருந்தாலும் அவர்களிடத்தில் பயிற்சியும் தொழில்நுட்ப அனுபவமும் போதியளவு இல்லாத காரணத்தினால் இந்தியாவிலிருந்து சாரதிகளை தாம் வரவழைக்க வேண்டியிருப்பதாக விவசாயிகளும் இயந்திர உரிமையாளர்களும் கூறுகின்றார்கள்.

இந்திய சாரதிகள் முகவர்கள் ஊடாக அழைத்து வரப்பட்டாலும் சுற்றுலாப்பயண விசா பெற்றே நாட்டிற்குள் நுழைவதால் சட்ட ரீதியான பிரச்சினைக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாப்பயண விசாவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலை செய்த 6 பேர் அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உள்ளூர் சாரதிகளுக்கு முறையான பயிற்சி கொடுப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவசாயிகள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தொலைபேசி பாவனையால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

வீதி விபத்து மரணங்கள் அதிகரிப்பதற்கு கையடக்கத் தொலைபேசி பாவனையும் ஒரு பிரதான காரணமாகும்.

சிலர் வாகனங்களை ஓட்டிச்செல்லும் போது ஒரு கையில் கையடக்கத் தொலைபேசியை வைத்துக்கொண்டு பேசிக்கொண்டே செல்வார்கள். அதனால் அந்த வாகன ஓட்டியின் கவனம் வீதியில் குறைவாக இருக்கும். அதுவும் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைகின்றன.

இந்த ஆபத்தை உணர்ந்த பொலிஸார் வாகனங்களை ஓட்டிச் செல்பவர்கள் கைத் தொலைபேசியில் பேசுவதை தடை செய்துள்ளதுடன் அவ்விதம் செல்பவர்களுக்கு அபராதம் விதித்தல் அல்லது அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து தண்டிக்கிறார்கள்.

இப்போது சிலர் கையில் கையடக்கத் தொலைபேசியை வைக்காமலே கையடக்கத் தொலைபேசியில் பேசிக் கொண்டே செல்வதை அவதானித்திருக்கும் பொலிஸார் இதனையும் தடை செய்வதற்கு இப்போது சட்ட நடவடிக்கைகளை ஆராய்ந்து வருகிறார்கள்.

இதுவரையில் நாம் வாகனங்களை ஓட்டிச் செல்பவர்கள் தொலைபேசியில் பேசுவதை பொலிஸார் தடை செய்திருப்பது பற்றி தெரிந்து கொண்டோம். பொலிஸார் சமீபத்தில் நடத்திய ஒரு ஆய்வொன்றின் மூலம் பாதசாரிகள் குறிப்பாக பெண்கள் தொலைபேசியில் பேசிக்கொண்டே நித்திரையில் நடப்பவர்களைப் போன்று நடுவீதியில் நடந்து செல்வதுடன் மஞ்சள் கோட்டிலும் வாகனமொன்று வருகிறதா என்பதைப் பொருட்படுத்தாமல் வீதியைக் கடக்கிறார்கள்.

இதனால் இப்போது வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதுடன் பல மரணங்களும் அதிகரிக்கின்றன. தொலைபேசியில் பேசிக்கொண்டு செல்பவர்கள் வீதியில் நடந்து செல்வது தவறு என்றும் அவர்கள் விரும்பினால் நடைபாதையில் தொலைபேசியில் பேசிக்கொண்டு நடந்து செல்லலாம்.

நடுவீதியில் நடக்கும்போதோ வீதியை கடக்கும் போதோ தொலைபேசியில் கதைத்துக் கொண்டு நடப்பதை ஒரு குற்றச் செயலாக பொலிஸார் கருதுகிறார்கள். எனவே, இனிமேல் வீதியில் இவ்விதம் பொறுப்பற்ற முறையில் தொலைபேசியில் பேசிக்கொண்டு செல்பவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளனர். (அ-2)



கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தின நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 2011இல் வகுப்பு ரீதியான சாதனையாளர்களுடன் அதிபர், விருந்தினர்கள் நிற்பதனை படத்தில் காணலாம்.

# போலி ஆவணங்களை பயன்படுத்தி பிரித்தானியா சென்றவர் கைது

(கொழும்பு)

போலியான ஆவணங்களை பயன்படுத்தி பிரித்தானியாவிற்கு சென்ற நான்கு இலங்கையர்களுக்கு அந்நாட்டு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

முஹமட் ஹுசெய்ன், அஸ்லம் ரியாஸ், மொஹமட் பயாஸ் மற்றும் மொஹமட் இப்ராஹிம் ஆகியோரே இவ்வாறு போலி ஆவணங்களைப் பயன்படுத்தி பிரித்தானியாவில் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட போலி கடவுச்சீட்டு மற்றும் வதிவிடப் பத்திரங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஹுசெய்ன், ரியாஸ் மற்றும் பயாஸ் ஆகிய மூவரும் விசா காலாவதியாகியும் பிரித்தானியாவில் தங்கியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

குற்றச் செயலில் ஈடுபட்ட ஹுசெய்னுக்கு 13 மாத சிறைத்தண்டனையும் அஸ்லம் ரியாஸ் மற்றும் முஹமட் பயாஸ் ஆகியோருக்கு 12 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இப்ராஹிமிற்கு ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கஹவத்த கொலை விசாரணை 10 பொலிஸ் குழுக்களிடம் ஒப்படைப்பு

கஹவத்த ஓபாத் பகுதியில் இடம்பெற்ற கொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக 10 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரிடமும் மேலும் சிலரிடமும் கொலைச்சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் குழுவொன்றும் வேறாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார். (அ-2)

# கைதிகளுக்கு தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

சிறைக்கைதிகளுக்கு தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன. எனினும் இதனை சட்ட விரோத காரியங்களுக்கு பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யூ.கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

கைதிகளின் நலன் கருதி இந்த வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



# சிறுவர் அரங்கம்

05

## அம்புலி மாமா கதைகள்

## நன்றிதான் பெரிது!

மகதராஜ்யம் உன்னத நிலை யில் இருந்தபோது போதிசத்வர் ஒருமுறை பொக்கிஷ அதிகாரியாக இருந்தார். அவரது சொந்த சொத்தே எண்பது கோடி வராகன்கள். காசியில் ஸ்ரீவத்சன் என்ற வியாபாரி இருந்தான். அவனது சொத்தும் எண்பது கோடி வராகன் களுக்கும் மேலாக இருந்தது. போசிசத்வரும் ஸ்ரீவத்சனும் நண் பர்களாக இருந்தனர். வியாபாரத்தில் பெரும் நட்டம் ஏற்பட்டதால் ஸ்ரீவத் சன் மிகமிக ஏழையாகி விட்டான். அப்போது அவனுக்கு தன் நண்பரான போதிசத்வரின் நினைவு வந்தது.


உடனே அவன் போதிசத்வ ரைக் கண்டு "என் நிலை மிக மோசமாகி விட்டது. நான் ஓட்டாண்டியாகி விட்டேன். இந்த நிலையில் எனக்கு உதவு பவர் உங்களைத் தவிர வேறு யாருமேயில்லை" என்றான். போதி சத்வரும் "ஸ்ரீவத்சா கவலைப்படாதே உனக்கு நிச்சயம் உதவி செய்கிறேன்" எனக் கூறி தன் சொத்தில் பாதியை அதாவது நாற்பது கோடி வராகன்களை கொடுத்து தன் பணியாட்களில் பாதிப் பேரை அவனுடன் அனுப்பியும் வைத்தார்.

சில வருடங்களாயின. மகத நாட்டில் மாபெரும் கலகம் ஏற் பட்டது. அதில் போதிசத்வரின் சொத்தெல்லாம் பறிபோன தோடு அவரது உத்தியோகமும் போய் விட்டது. அவர் ஏழை யாகிவிட்டார். அப்போது அவருக்குக்காசி நகரிலுள்ள தம் நண்பன் ஸ்ரீவத்சனின் நினைவு வந்தது. எனவே தன் குடும்பத் தோடு அவர் காசிக்குச் சென்றார்.

காசி நகர எல்லையில் ஓரிடத்தில் தம் மனைவி மக்களை இருக்கச் சொல்லி விட்டு போதிசத்வர் ஸ்ரீவத்சனின் மாளிகையின் வாச லில் நின்று அங்கு, வாயில் காப்போனிடம் தான் இன்னா ரென்றும் அவனது எஜமானைக் காண வந்திருப்பதாகவும் கூறினார். வாயில் காப்போனும் "உள்ளே போய்ப் பாருங்கள்" என்றான்.


போதிசத்வர் உள்ளே சென்றதும் ஸ்ரீவத்சன் அவரைப்பார்த்து மரியாதை இல்லாமல் "என்னப்பா வேண்டும் உனக்கு?" என்று கேட்டான். அந்தத் தோர ணையைக்கண்டு போதிசத்வர் தாழ்ந்த குரலில் "உங்களைக் காணவே வந்தேன்" என்றார்.

"சரி இங்கே எதுவும் வசதிப்படாது. கொஞ்சம் அரிசி கொடுக்கச் சொல்கிறேன். அவ்வ ளவுதான் என்னால் முடியும்" என்றான். மறு நிமிடம் ஒரு வேலையாள் கால்படி அரிசியைக் கொண்டு வந்து போதிசத்வரிடம் கொடுத்தான். அதனை வாங்கிக் கொண்டு அவர் மனைவி மக்கள் இருந்த இடத்திற்குச் சென்றார். அவரது மனைவியும் "உங்கள் நண்பர் என்ன சொன்னார்? என்ன கொடுத்தார்?" என்று ஆவலுடன் விசாரித்தாள். போதிசத்வரும் "இதுதான் அவ னால் உதவ முடியுமாம்" எனக்கூறிக் கால் படி அரிசியை அவளிடம் காட்டினார். "அவனி டம் இருந்து இதை ஏன் வாங் கிக் கொண்டீர்கள்? அவனது முகத்திலேயே விட்டெறிந்து விட்டு வந்திருக்க வேண்டும்" என்றாள் அவர் மனைவி கோபத் தோடு போதிசத்வரும் கண்களில் பொங் கிய நீரை அடக்கியவாறே "என்ன தான் இருந்தாலும் நண்பர்கள் ஒருவரை மற்றவர் பகைத்து கொள்ளக்கூடாது. அதனால்தான் எதுவும் பேசாமல் இதனை வாங் கிக் கொண்டேன்" என்றார். அவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் அவரிடம் முன்பு மகதத்தில் பணி புரிந்த தற்போது காசியில் ஸ்ரீவத்சனிடம் பணிபுரியும் ஒரு வேலையால் அவ்வழியே வந்தான். அவன் தன் பழைய எஜமானைக்கண்டு அவ ரது காலில் விழுந்து வணங்கி "ஐயா தாங்கள் இங்கு இந்தக் கோலத்தில் வரக்காரணம் என் னவோ?" என்று கேட்டான்.



போதிசத்வரும் அதுவரை நடந்ததை எல்லாம் கூறவே அப்பணியால் மிகவும் மனம் வருந்தி, போதிசத்வரையும் அவரது குடும்பத்தினரையும் தன் வீட்டிற்கு அழைத்துக் போனார். பிறகு தன் நண்பர்களான மற்ற பணியாட்களிடமும் போதிசத் வரைப்பற்றிக்கூறி ஸ்ரீவத்சன் அவரிடம் நன்றி கெட்ட வித மாக நடந்து கொண்டதையும் சொன்னான். அவர்களும் மனம் குமுறி காசி மன்னனிடம் போய்கூறினார்கள்.

காசி மன்னனும் போதி சத்வரை அழைத்து எல்லாம் விசாரித்து தெரிந்து கொண்டு ஸ்ரீவத்சனை தர்பாருக்கு அழைத்து வரும்படிக் கட் டளை பிறப்பித்தான். வீரர்கள் அவனை அழைத்து வந்தனர். அவனிடம் காசி மன்னன் "இவரிடமிருந்து நீ பண உதவி பெற்றது" உண்மையா? எவ் வளவு பெற்றாய்?" எனக் கடுமையான குரலில் கேட் டான். அரசன் கேட்ட விதத் தைக்கண்டு ஸ்ரீவத்சன் பயந்து "ஆமாம் இவரது சொத்தில் பாதியை எனக்கு கொடுத்து உதவினார்" என்றான்.



காசி மன்னன் அப்போது "ஓ! பாதி சொத்தை வாங்கிக் கொண்ட நீ இவரை இப்படித் தான் மரியாதை குறைவாக நடத்துவதா?" என்றான். ஸ்ரீவர்சன் வெட்கித் தலைகுனிந்து கொண்டான். மன்னன் ஸ்ரீவத்சன் சொத்து முழுவதையும் பறிமுதல் செய்து போதிசத்வருக்கு அத னைக் கொடுப்பதாக தீர்ப்புக்கூறினான்.

அப்போது போதிசத்வர் "பிறர் சொத்து எனக்கு வேண்டாம். நான் கொடுத்த நாற்பது கோடி வாரகன்களை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்" என்றார். காசி மன்னனும் நாற்பது கோடி வார கன்களை ஸ்ரீவத்சனிடமிருந்து வாங்கிப் போதிசத்வரிடம் கொடுத்தார். போதிசத்வரும் தம் பணத்தை அடைந்து சுகமாக வாழ்ந்து வந்தார்.

# பெல்ஜியத்தில் இருந்து ஐ. நா. சபை நோக்கிய நீதிக்கான நடைபயணம்

பெல்ஜியத்தில் இருந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை நோக்கி நீதிக்கான நடை பயணம் மேற்கொண்டுள்ள மூவர் நேற்று முன்தினம் 3 ஆவது நாளாக வெட்ட வெளிப் பிரதேசங்கள் ஊடாக கடும் குளிர் மற்றும் எதிர்க்காற்றுக்கு மத்தியில் 60 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடந்துள்ளனர்.





தமிழ் மக்களின் விடிவுக்காக ஐரோப்பிய நாடுகளின் அரசியல் தலைவர்கள், மக்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இலட்சியப் பயணம் மேற்கொள்ளும் இந்த உறவுகளுக்கு புலம் பெயர்ந்த மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை நல்கி வருகின்றனர்.

கடும் சிரமத்தின் மத்தியிலும் மனம் தளராது உறுதிநடை மேற்கொள்ளும் ஏக காலத்தில் அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற செய்தி தாங்கிய அஞ்சல் அட்டைகள் ஊடாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் தமிழ் உணர்வாளர்களால் விழிப்புணர்வுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்மக்களின் இலட்சியங்களை அடிப் படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நீதிக்கான நடை பயணத்தின் நோக்கத்தையும் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட இன அழிப்பு, அதன் போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களை அம்பலப்படுத்துவதன் மூலமே வெளிநாடுகளின் ஆதரவையும் வெளிநாட்டு மக்களின் ஆதரவையும் நாம் பெற்றுக் கொள்ள முடியும் என நடைபயணத்தை மேற்கொள்ளும் உறவுகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே கடும் குளிர் மற்றும் காற்றின் மத்தியில் இடம்பெறும் நடை பயணம் மற்றும் அஞ்சல்வழிப் விழிப்புணர் போராட்டங்களிற்கு புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் தமது ஆதரவை கொடுத்து தமிழின அழிப்பை மேற்கொண்ட இலங்கை அரசாங்கம் மீதான போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி இன அழிப்பை அம்பலப்படுத்த துணை நிற்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் தமது நாடுகளில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அலுவலகங்கள் அல்லது பிராந்தியப் பணியாளர்கள் ஊடாக இந்த அஞ்சல் அட் டைகளைப் பெற்று தாம் வாழும் நாடுகளில் உள்ள வேற்று நாட்டு மக்களுக்கும் அவற்றை கொடுக்குமாறு நடைபயணத்தை மேற்கொள்ளும் உணர்வாளர்கள் வேண்டி நிற்கின்றனர். (அ-2)

## பாலம் இடிந்ததில் ஒருவர் பலி

ஹெட்டிபொல பகுதியிலுள்ள பாலமொன்று உடைந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.தற்போதுள்ள பாலத்திற்கு பதிலாக புதிய பாலமொன்றை நிர்மாணிப்பதற்கு நேற்று முன்தினம் மாலை சில வெடிப்புச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவங்களை மேற்கொள்வதற்காக பாலத்தினை சோதனையிடுவதற்கு மூவர் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் பழைய பாலம் உடைந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.பொலநறுவை பகுதியைச் சேர்ந்த 23 வயதான ஒருவரே இந்த அனர்த்தத்தின் போது உயிரிழந்துள்ளார். (அ-2)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### செல்லத்தம்பி மல்லிகாதேவி



மலர்வு
24 . 04 . 1956

உதிர்வு
11 . 02 . 2009

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் குலவிளக்காய்
எங்களுக்கு அன்பூட்டி வளர்த்த தெய்வமே!
எங்களை இருட்டு மடுவில் விட்டு மறைந்து போனாலும் தாயே
ஈர விழிகளுடன் தீபம் ஏற்றுகின்றோம் அம்மா!!
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

புலோப்பளை கிழக்கு,
புலோப்பளை.

பிள்ளைகள்,கணவன்,
பேரப்பிள்ளைகள்.

(சி-58222)

## ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம்!

### குழப்பத்தில் இந்தியா

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் ஆதரவுடன் கொண்டுவரப்படும் தீர்மானத்தை ஆதரிப்பது தொடர்பாக இந்தியாவிடம் இருந்து குழப்பமான சமிக்ஞைகள் வெளிப்படுவதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் ஆதரவுடன் ஜெனீவாவில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு இந்தியா முடிபு செய்திருந்தது.

எனினும் இந்தியாவின் இறுதியான முடிபு குறித்த அதிகார பூர்வமான தகவல்கள் ஏதும் இதுவரை வெளியிடப்பட வில்லை.

ஆனால் கொழும்புக்கான இந்திய தூதுவர் அசோக் கே காந்தா ஜெனீவா அமர்வுகளின் போது இலங்கைக்கு பக்கபலமாக இந்தியா இருக்கும் என்ற உறுதிமொழியை இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏஎவ்பி க்கு தகவல் வெளியிட்ட தனது பெயரை குறிப்பிட விரும்பாத அரச அதிகாரி ஒருவர் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தோற்கடிக்க இந்தியா உதவும் என்று உறுதிபடக்கூறியிருந்தார்.

அதேவேளை தென் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் மேற்கொண்ட பரப்புரைகளின் மூலம் பெற்றுள்ள ஆதரவைக் கொண்டு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஜெனீவாவில் முறியடிக்க முடியும் என்ற நம்பிக்கையில் இலங்கை இருப்பதாகவும் கொழும்பு ஊடக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (அ-2)

## நோர்வேயில் புலிகள் குறித்த முத்திரை வெளியீட்டுக்கு

### இலங்கை அரசு அதிருப்தி

(கொழும்பு)

நோர்வேயில் விடுதலைப்புலிகளின் சின்னங்களுடன் அஞ்சல் தலை வெளியிட்டமை தொடர்பாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்துடன் தொடர்பு கொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

அத்துடன் ஒஸ்லோவில் உள்ள இலங்கைத்தூதரக அதிகாரிகள் இந்த அஞ்சல் தலைகளை தடைசெய்வது தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சுடனும் அந்த நாட்டின் அஞ்சல் தொலைத்தொடர்புத் துறையுடனும் கலந்துரையாடி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

பல ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப்புலிகளின் சின்னங்களுடன்அஞ்சல் தலைகள் வெளியிட்ட போது இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்புத்தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது விடுதலைப்புலிகளின் சின்னங்களுடன் அஞ்சல் தலை வெளியிட்டமைக்கு நோர்வே இதற்கு அனுமதி வழங்கியது குறித்து இலங்கை அரசானது தனது சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. (அ-2)

# இலங்கை தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்வில் இந்தியா அக்கறை காட்டவேண்டும்

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்தியில் இந்தியா மேலும் அக்கறை செலுத்த வேண்டும். அதேநேரம் இனப் பிரச்சினை தீர்விலும் இந்தியா தமது முழுப்பங்களிப்பை வழங்க வேண்டும் என்று இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அமைதியான சூழ்நிலை இலங்கைக்கு மாத்திரமல்ல இந்தியாவுக்கு அவசியமானது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகளை போரில் தோற்கடித்த தலைவராக உள்ளார்.


எனினும் இந்த தோல்வி தமது தோல்வியாக தமிழ் மக்கள் உணராத வகையில் ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் சுவாமி வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் கொள்கை காரணமாகவே அம்பாந்தோட்டை துறைமுக அமைப்பின் மூலம் சீனா இலங்கையில் காலடி பதித்துள்ளதாக சுவாமி குற்றம் சுமத்தினார்.

தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த சுவாமி இந்தக் கருத்துக்களை பி.டி.ஐ.செய்தி சேவையிடம் தெரிவித்துள்ளார். (அ-2)

# அரசாங்க அனுசரணையில் அநீதி தலைவிரித்தாடுகின்றது

## பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் அரச அனுசரணையில் அநீதி தலைவிரித்து ஆடுகின்றது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கட்சி பேதங்களை மறந்து அனைத்து மக்களும் அநீதிக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும். நாம் உங்களின் பின்னணியில் இருக்கின்றோம் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். தோள் பட்டையில் ஏற்பட்ட உபாதைக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு சென்று திரும்பிய போது அவர் ஊடகங்களுக்கு இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆசனப்பட்டி அணிதல் தொடர்பில் பாராளுமன்ற அனுமதி கிடைக்கவில்லை

(கொழும்பு)

வாகனங்களில் செல்லும் போது ஆசனப்பட்டியை அணிவது இன்னும் சட்டமாக்கப்படவில்லை என மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரி ஒருவரை கோடிட்டு இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, அதற்காக தண்டப்பணம் விதிக்கும் நடைமுறையை பொலிஸார் மேற்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக ஒரு சட்டம் நடைமுறைக்கு வரவேண்டுமானால் முதலில் அது சட்டமா அதிபரின் ஒப்புதலை பெறவேண்டும். அதன் பின்னர் அது நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டு அதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டாலே இலங்கையின் சட்டத்துக்குள் அது உள்ளீர்க்கப்படும்.

எனினும் வாகன ஆசனப்பட்டி அணியும் நடைமுறை தொடர்பில் இன்னும் நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைக்கவில்லை.

எனவே, அதனை சட்டமாக எடுத்து நீதிமன்றங்களில் தண்டப்பணம் அறவீடு செய்கின்றமை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் மேட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பாதுகாப்புக் கடவைகள் அமைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள புகையிரதக் கடவைகளில் பாதுகாப்பான கேற்றுகள் பொருத்துவதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாக புகையிரத பொது முகாமையாளர் டி.ஏ.பி. ஆரியரட்ண தெரிவித்துள்ளார். இதற்கமைய 200 பாதுகாப்பு கேற்றுகள் பொருத்தப்படவுள்ளன. இதற்கென ஒரு பில்லியன் ரூபாவை புகையிரதத் திணைக்களம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கமைய கரையோர புகையிரதப் பாதை கடவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதற்கான காரணம் கரையோர புகையிரத சேவை நவீனமயப்படுத்துவதை அடுத்து வேகம் அதிகரிக்கப்பட்டமையாகும்.

அத்துடன் பாதுகாப்பான புகையிரத கடவைகள் இல்லாத காரணத்தால் புகையிரதப் போக்குவரத்தின் போது பொதுமக்களின் பாதுகாப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. அளவையில் இடம்பெற்ற விபத்து தொடர்பாக புகையிரத திணைக்களத்தின் மேலதிக பாதுகாப்பு பராமரிப்பு அத்தியட்சகர் தலைமையிலான குழு விசாரணைகளை நடத்தி இருந்தது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்டதும் நஷ்ட ஈடு வழங்கப்படல் உட்பட ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார். (அ-2-7)

# 2012.02 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1822-ஹெயிட்டி புதிதாக அமைக்கப்பட்ட டொமினிக்கன் குடியரசை முற்றுகையிட்டது.

★ 1885-முதலாவது ஜப்பானியர் ஹவாய் தீவை வந்தடைந்தனர்.

★ 1895-வில்லியம் மோர்கன் volleball ஐக் கண்டுபிடித்தார்.

★ 1897-பெனின் மீது பிரித்தானியர் தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ 1900-இலங்கையிலும் இந்தியாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

★ 1900-டேவிஸ் கோப்பை டென்னிஸ் பந்தயம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1904-போர்ட் ஆர்தர் சமர் ஆரம்பித்தது.

★ 1942-ஐக்கிய அமெரிக்காவில் பக லொளி சேமிப்பு நேரம் அறி முகப்படுத்தப்பட்டது.

★ 1962-பொதுநலவாய அமைப்பினுள் ஜமெய்க்கா விடுதலை பெற்றது.

★ 1965-வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்க தாக்குதல் படைப் பிரிவு முதற்தடவையாக தென் வியட்நாமிற்கு அனுப்பப்பட்டது.

★ 1969-போயிங் 747 விமானத்தின் முதற் சோதனைப் பறப்பு மேற்கொள் ளப்பட்டது.

★ 1971-கலிபோர்னியாவில் 6.4 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 1971-அப்பல்லோ 14 விண்கலம் மூன்று அமெரிக்கர்களுடன் பூமி திரும்பியது.

★ 1971-சோயூஸ் 17 விண்கலம் பூமி திரும்பியது.

★ 1986-ஹேலியின் வால்மீன் சூரியனுக்கு அண்மையில் எட்டரைக் கோடி கி.மீ. தூரத்தில் வந்தது.

★ 1991-லித்துவேனியாவில் விடுதலைக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்தார்கள்.

★ 1996-ஐரிஷ் குடியரசு இராணுவம் தனது 18 மாத யுத்த நிறுத்த உடன்பாட்டினை முறித்துக் கொண்ட சில மணி நேரத்தில் லண்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இருவர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1773-வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்காவின் 9 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1841)

★ 1910-ஜாக் மொனோட், நோபல் பரிசு பெற்றவர் (இ.1976)

★ 1940-ஜே.எம்.கோட்ஸி, நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க எழுத்தாளர்

★ 1943-ஜோசப் ஸ்டிக்லிட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர்

★ 1979-சாங் சீயி, சீனத் திரைப்பட நடிகை

### இறப்புக்கள்

★ 1881-பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, இரகசிய நாவலாசிரியர் (பி.1821)

★ 1977-ஜி.ஜி. பொன்னம்பலம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர். (பி.1901)

★ 1979-டெனிஸ் காபோர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1900)

★ 1984-யூரி அந்திரோபொவ், சோவியத் ஜனாதிபதி (பி.1914)

★ 1994-ஹ்வார்ட் டெமின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1934)

★ 2001-ஹேர்பேர்ட் சைமன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க பொருளியலாளர் (பி.1916)



★ 1970-கிளென்மெக்ரா, அவுஸ்திரேலியத் துடுப்பாட்டக்காரர்

# மனிதனின் அழிவின் பின்னும் வாழப்போகும் கரப்பான்பூச்சி

அணு குண்டு ஒன்று வெடித்து பெரும் உயிர் அழிவு ஏற்பட்ட பின் சுடுகாடாக மாறியிருக்கும் பிராந்தியத்தை பார்க்க கூடிய ஒரு உயிரினம் ஒன்று உள்ளது என்றால் அது வீட்டில் வாழும் கரப்பான் பூச்சிதான்.

கரப்பான் பூச்சி மனிதனை விட பல ஆயிரம் மடங்கு கதிர்வீச்சை தாங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தது. மனிதனின் அழிவின் பின்னும் வாழப் போகும் இவை தோன்றியது மனித இனம் தோன்றுவதற்கு முன் அதாவது 350 மில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றியவை.


உலகின் துருவப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய எல்லாப் பகுதிகளிலும் வாழும் கரப்பான் பூச்சியின் தாயகம் ஜேர்மனி நாடாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பாகும்.

தற்போது உலகில் சுமார் 3 ஆயிரத்து 490 கரப்பான் இனங்கள் வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவை ஆறு குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கரப்பான் பூச்சி தலை, நெஞ்சு, வயிறு என்னும் 3 பிரதான பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு 3 சோடி கால்களும் ஒரு சோடி உணர்கொம்பும் உண்டு. கரப்பான் பூச்சிக்கு முதுகெலும்பு கிடையாது.

இரண்டு சோடி அல்லது ஒரு சோடி சிறகுகள் காணப்பட்டாலும் சில கரப்பான் பூச்சிக்கு சிறகுகள் கிடையாது. கரப்பான் பூச்சியின் இரத்தம் வெள்ளை நிறமுடையது. இவற்றால் தலை துண்டிக்கப்பட்டாலும் சுவாசிக்க முடியும்.( சில கரப்பான் பூச்சிகளால் வளி இல்லாமல் 45 நிமிடங்கள் வாழ முடியும்)

உலகின் மிகப்பெரிய கரப்பான் பூச்சி இனம் அவுஸ்திரேலியாவில் உள்ளது. 9 சென்ரி மீற்றர் வரை வளரக்கூடியது. இதன் நிறை 30 கிராமை விட அதிகமாக இருக்கும்.



கரப்பான் பூச்சியின் உணர்கொம்புகள் சூழலை அறிய உதவுகின்றது.

இரவில் (இருட்டில்) உணவு வேட்டையை செய்யும். இவை எந்த பாகுபாடுமில்லாமல் எல்லாவிதமான உணவையும் வெட்டியும் அரைத்தும் உண்ணுகின்றன. அப்படி உணவுப் பஞ்சம் ஏற்பட்டால் காகிதம், சவர்க்காரம் போன்றவை கூட உணவாகும்.

இதற்கு இதன் வலிமை வாய்ந்த தாடைகள் உதவி செய்கின்றன. சில சமயம் உணவே கிடைக்காமல் கரப்பான் பூச்சியினால் 3 மாதங்கள் வரை உயிர் வாழ முடியும்.

கரப்பான் பூச்சியும் வெட்டுக்கிளியும் மனிதரின் உயிர் காக்கும் மருத்துவர்களாக மாறும் நாள் தொலைவில் இல்லை என இங்கிலாந்தில் உள்ள நோட்டிங்காம்பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் சைமன் லீ என்பவரின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இப்பூச்சிகளின் மூளையில் காணப்படுகின்ற வேதிக்கூறுகள் பல தீங்குதரும் நுண்ணுயிரிகளை கொல்லும் தன்மை கொண்டுள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# உலகின் மிகச்சிறிய தவளை இனம் கண்டுபிடிப்பு



உலகிலேயே உயிரினப் பன்மைக்கு பெயர் போன இந்தோனேசியாவிற்கு அருகில் உள்ள பப்புவா நியூகினியா தீவுகளில் உலகின் சிறிய இனத் தவளை இனம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

வெறும் 7 மில்லி மீற்றர் அளவுள்ள இந்த தவளையே முள்ளந்தண்டுள்ள விலங்குகளில் சிறியது என்றும் நம்பப் படுகின்றது.


இந்த தவளை இனத்திற்கு Paedophryne amauensis என உயிரியல் பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

இதனை விட சற்று பெரிய பிறிதொரு இனமும் Paedophryne swiftorum அங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த தவளை இனங்கள் காடுகளின் நிலப்பரப்பில் குப்பை கூழங்களில் மறைந்து வாழ்வதால் இவற்றை அவ்வளவு இலகுவாக கண்டுபிடிக்க முடியாது என்று இந்த ஆய்வை நடத்திய அமெரிக்க உயிரியலாளர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை இதற்கு முன்னர் உலகின் சிறிய இன தவளை இனமான பிரேசில் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தவளை இனம் (Gold Forg-Brachycephalus didactylus) இருந்தது.

# மர்மமாக இறக்கும் பறவைகள்: வேற்றுக்கிரகவாசிகளின் வேலையா?



இவ்வாண்டின் (2012) ஆரம்பத்தில் இருந்து அமெரிக்காவில் கடந்த சில தினங்களாக பறவையினங்கள் சில மர்மமாக நூற்றுக்கணக்கில் இறந்து விண்ணில் இருந்து விழுகின்றன.

ஆராய்ச்சியாளர்களோ மூளையைப் போட்டு கசக்கியது தான் மிச்சம்... இவற்றின் இறப்புக்கு விடை இன்னும் புரியவில்லை.


அமெரிக்காவில் மட்டுமின்றி இத்தாலியிலும் இது தொடர்ந்திருக்கிறது. அமெரிக்காவில் பறவைகளின் இந்த திடீர் உயிரிழப்புக்கு பல வகை காரணங்கள் சொல்லப்பட்டாலும் வேற்றுக்கிரகவாசிகளின் பிரவேசக் கலங்களுடனான மோதல் மற்றும் அமெரிக்க இராணுவம் செய்மதிகள் உதவி கொண்டு செய்யும் உயர் சக்தி ஆயுதங்களின் பரிசோதனைகளின் விளைவென்பது கொஞ்சம் புதிதாகவும் வேறுபட்டும் இருக்கின்றன.

ஆனால் இந்தப் பறவைகள் நோய் தொற்றால் இறக்கவில்லை என்பதை மட்டும் தற்போதைக்கு உறுதி செய்திருக்கின்றார்கள். வேறு சிலர் காலநிலை மாற்றத்தை குறை சொல்கிறார்கள். வேறுசிலர் நஞ்சாதல் விளைவு என்கிறார்கள். வேறு சிலர் வான வேடிக்கையால் எழும் ஒலிகளின் விளைவு என்கின்றார்கள். சிலர் மின்னல் தாக்கம் என்கின்றார்கள். மேலும் சிலரோ உயர்ந்த இட அழுத்த தாக்கம் என்கின்றார்கள்.

பறவைகள் மட்டுமின்றி மீன்களும் ஆயிரக்கணக்கில் இறந்திருக்கின்றன.

சரி இப்படி ஒரு மர்மச் இறப்பு மனித சமூகத்தையே எட்டிப்பார்த்தால் என்னாவது? சிந்தித்துப் பாருங்கள்.??? போற வாற இருக்கிற மனிதர்கள் எல்லாம் காரணம் கண்டுபிடிக்க முதலே பொத்து பொத்தென்று விழ வேண்டியது தான்.

# அசைவ தாவரங்கள்



தாவரங்கள் என்றாலே சைவம் தான். அது எப்படி அசைவமாக முடியும் என்று கேட்கிறீர்களா?

சில தாரவங்கள் வறண்ட இடங்களில் வளரும். இவற்றுக்கு தேவையான உணவு கிடைக்காத நிலையில் சிறு பூச்சிகளை இலைகளைக் கொண்டு மடக்கி அவற்றில் இருந்து என்சைம், அமிலம், புரதம் போன்ற சத்துக்களை உறிஞ்சி எடுத்துக் கொள்கின்றன. இது போன்ற வேலைகளை கச்சிதமாக செய்வதற்கேற்ப இத்தகைய தாவரங்கள் தகவமைப்பை பெற்றுள்ளன. அதாவது ஜீப் போன்ற இலைகளையும் பை போன்ற வடிவ இலைகளும் ஒட்டிக் கொள்ளும் பசையையும் கொண்டுள்ளன.

ஜென்லிசியா என்ற தாவரம் விலங்குகளின் ஜீரண உறுப்பு போன்றே காணப் படுகின்றது. டிராகன்பிளை, சண்டியூ போன்ற தாவரங்களும் பூச்சிகளை பிடித்து லபக்கி விடுகின்றன. கார்னிவோரஸ் பிளாண்ட்ஸ் என்ற தாவரம் லார்டு அண்டு லேடீஸ் (ஆரம் மாஸ்குலேட்டம்) போன்ற தாவரங்கள் சிறு பூச்சிகளை கவர்வதற்காக என்றே ஸ்பெஷலாக மாமிச வாசனையை வீசுகின்றது.

## அதிசய உலகம்...



# முதல் கலங்கரை விளக்கம்

கி.மு 280இல் எகிப்திய மன்னர்கள் முதன்முதலில் அலெக்சாண்ட்ரியா துறை முகத்தில் 400 அடி உயரம் உள்ள கலங்கரை விளக்கத்தை கட்டினார். அது மின்சாரம் கண்டுபிடிக்கப்படாத காலம். அதனால், விறகுகளை எரித்து வெளிச்சத்தை உண்டாக்கினார்கள் இது அந்த காலத்தில் ஏழு அதிசயங்களில் ஒன்றாக கருதப் பட்டது.




16 ஆம் நூற்றாண்டில் கப்பல் போக்குவரத்து அதிகமானது. ஐரோப்பாவில் நிறைய கலங்கரை விளக்கங்கள் கட்டப்பட்டன.

அப்போது எண்ணெய் விளக்குகள் மற்றும் இராட்சத மெழுகுவர்த்திகளைக் கொண்டு வெளிச்சத்தை உண்டாக்கினர்.

1716இல் அமெரிக்காவில் முதலில் பொஸ்டன் நகருக்கு அருகில் கலங்கரை விளக்கம் கட்டப்பட்டது. இங்கிலாந்து நாட்டில் தான் முதலில் மின்சார விளக்குடன் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது. எலக்ரிக் கார்பன் ஆர்க்விளக்கை பயன்படுத்தி வெளிச்சம் உண்டாக்கினார்கள். அமெரிக்காவில் உள்ள நவீன கலங்கரை விளக்கத்தில் மெர்க்குரி ஆர்க் விளக்குகளை பயன்படுத்தி வருகின்றனர்.

# முல்லை மாவட்டத்தின் அபிவிருத்திக்கு மக்கள் பொறுமையுடன் இருப்பது அவசியம்

## மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை என குற்றஞ்சாட்டக்கூடாது என்றார் முரளிதரன்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் இரண்டு வருடங்களில் அபிவிருத்தியடைந்த மாவட்டமாக மாற்றப்படும். அது வரை மக்கள் பொறுமை காப்பதுடன் அரசாங்கம் மீள்குடியேற்றங்களை மேற்கொள்ளவில்லை எனக் குற்றம் சாட்டி மக்களை குழப்புவதற்கு முயற்சிக்கும் தரப்பினரின் ஏமாற்று பேச்சுக்களை செவிமடுக்க வேண்டாமென்றும் மீள்குடியேற்றத்துறை பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கோம்பாவில் கிராம சேவகர் பிரிவில் திம்பிலி கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட 209 குடும்பங்களுக்கான 200 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மீள் குடியேற்றத்துறை அமைச்சர் குணரத்ன வீரக்கோன், பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், முகாம் வாழ்க்கையிலிருந்து உங்களை விடுவிக்கும் நோக்குடனேயே அந்தக் தற்காலிக மீள்குடியேற்றங்கள் நடத்தப்படுகின்றன.உங்களுடைய சொந்த வாழ்விடங்களுக்குச் செல்லும்வரை சுதந்திரமாக நீங்கள் வாழ வேண்டும் என்ற நோக்குடனேயே இந்த மீள்குடியேற்றம் செய்யப்படுகின்றது.

எதிர்வரும் இரண்டு வருடங்களில் முல்லைதீவு மாவட்டத்தை அபிவிருத்தியடைந்ததொரு மாவட்டமாக நாம் மாற்றுவோம் .அதுவரை நீங்கள் பொறுமை காக்க வேண்டும்.

அரசாங்கம் எந்த மீள்குடியேற்றங்களையோ அபிவிருத்திகளையோ மேற்கொள்ளவில்லை. உங்களை அரசாங்கம் கைவிட்டு விட்டது எனக் கூறி உங்கள் மனங்களை குழப்புவதற்கு சில தரப்பினர் முயற்சிப்பார்கள். அவர்களின் ஏமாற்று வார்த்தைகளைநீங்கள் செவிமடுக்க வேண்டாம்.

நாம் உங்களுக்கு மின்சார வசதிகள், குடிநீர், போக்குவரத்து உள்ளிட்ட உட்கட்டுமான வசதிகளையும் ஏற்படுத்தி தருவோம். இதில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்நிகழ்வில் உரையாற்றிய மீள்குடியேற்றத்துறை பிரதியமைச்சர் குணரட்ண வீரக்கோன், வடபகுதி மக்கள் கலாசாரம் மற்றும் பண்பாட்டுக்கு மதிப்பு கொடுப்பவர்கள் என்பதால் வடபகுதி மக்கள் மீதான மதிப்பு மேலும் அதிகரிப்பதாக கூறினார்.

தென்பகுதியில் கலாசாரம் சற்று குறைவாககாணப்படுகிறது. ஆனால் வடபகுதியில் அவ்வாறு காண முடிவதில்லை. நீங்கள் கலாசாரத்தை மதிக்கின்றீர்கள். இதனால் தான் உங்கள் மீதான மதிப்பு அதிகரிக்கிறது.

கோம்பாவில் பகுதியில் 600 ஏக்கர் காட்டுப் பகுதி துப்புரவாக்கப்பட்டு இங்கு 200 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் 430 வீடுகள் அமைக்கப்படவிருக்கும் நிலையில் 200 வீடுகள் முதற்கட்டமாக அமைக்கப் பட்டுள்ளன.எஞ்சிய வீடுகள் கூடிய விரைவில் அமைத்து தரப்படும் என மீள்குடியேற்ற அமைச்சு உறுதியளித்துள்ளது. இப்பகுதியில் ஒரு மில்லியன் ரூபா செலவில் முன்பள்ளியொன்றும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. (அ-2)

# ஆணைக்குழுவின் அறிக்கை விவகாரம்; கட்சியின் நிலை இன்று அறிவிக்கப்படும்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மீதான கட்சியின் நிலைப்பாடு பற்றி இன்று வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் தெரிவிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை அடுத்து வடபகுதி பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் நம்பிக்கை உணர்வு ஏற்படும்.

வடபகுதி பிரச்சினைக்காக அரசியல் தீர்வு அங்கு வாழும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளினால் அங்கீகரிக்கப்படுவது அவசியமாகும்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பொதுச் செயலாளர் அத்தநாயக்க கருத்து வெளியிடுகையில், இந்த விடயம் தொடர்பாக நல்லிணக்கம் ஏற்படுத்தும் முயற்சிகளில் ஐ.தே.கட்சி தலையிடமாட்டாது என்றும் குறிப்பிட்டார். (அ-7)

# மாலே பிரச்சினையில் தலையிட போவதில்லை

## கூறுகிறது அரசாங்கம்

(கொழும்பு)

மாலைதீவில் இடம்பெற்றுவரும் பிரச்சினைகளில் தலையீடு செய்ய போவதில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாலைதீவில் உள்விவகாரப் பிரச்சினை நிலவி வருவதாகவும் அதில் தலையீடு செய்வது பொருத்தமற்றது எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மாலைதீவில் இடம்பெற்றுவரும் பிரச்சினைகள் சுமுகமான முறையில் தீர்க்கப்படும் என நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளது.

சடந்த சில வாரங்களாக நிலவிய கிளர்ச்சியைத் தொடர்ந்து மாலைதீவு ஜனாதிபதி முஹமட் நசீட் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

புதிய ஜனாதிபதியாக துணை ஜனாதிபதி முஹம்வாஹீட் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். (அ-2)

# இலங்கை மசகு எண்ணெய்க்காக ஈரானில் தங்கியிருப்பது ஆபத்து

## எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு

எதிர்காலத்தில் எரிபொருள் விலை அதிகரித்தால் அதன் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவிசாவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் தற்போது எரிபொருள் தொடர்பில் சிக்கி கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈரானுடன் தொடர்பை கொண்டுள்ள நாடுகளுக்கு எதிராக செயற்பட அமெரிக்கா கடந்த 5 வருடங்களுக்கு முன்னரேதீர்மானித்துள்ளது.

இதன் காரணமாக ஈரானுடன் நெருங்கிய தொடர்பை பேண வேண்டாம் என கடந்த காலங்களில் அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆலோசனை வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் எரிபொருள் துறை மசகு எண்ணெயை நம்பியிருக்கிறது. ஈரானிலேயே மசகு எண்ணெய் காணப்படுகிறது.

இதன் காரணமாகவே ஏனைய நாடுகள் ஈரானில் இருந்து விலகி ஏனைய எண்ணெய் வளநாடுகளுடன் எரிபொருள் கொள்கையை மாற்றிக்கொண்டுள்ளன.

தாம் பிரதமராக இருந்த காலப் பகுதியில் இந்திய எண்ணெய் நிறுவனத்தை இலங்கைக்கு கொண்டு வந்ததுடன் எண்ணெய் வளம் சார்ந்த பல்வேறு விடயங்களை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலை தற்போது ஈரானில் இருந்து விலகவும் முடியாமல் மாற்று நடவடிக்கை மேற்கொள்ளமுடியாமலும் அரசாங்கம் சிக்கி கொண்டுள்ளதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் பொதுமக்களின் பணம் வீணடிப்பு

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியினால் பொதுமக்களின் நிதி வீணடிக்கப்படுவதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

வீணான ஆடம்பரங்களுக்காகவும் அரசியல் இலாபத்திற்காகவும் இந்தக் கண்காட்சியை அரசாங்கம் நடத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கண்காட்சி ஏற்பாட்டாளரான அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவிக்கையில், அவர் குற்றச்சாட்டை நிராகரித்ததுடன் இதனால் பொது மக்கள் நிதி வீணடிக்கப்படவில்லை என குறிப்பிட்டார். (அ-2)








நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.சத்தியசீலன் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் மாணவர்களின் இடைவேளை இசையும் அசைவும் நிகழ்வையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கு பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ரா. சத்தியசீலன் வெற்றிக் கேடயத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# ஈழத்தமிழர்கள், ஆர்மேனிய வரலாற்றை ஆழ நோக்குவது இன்று பொருந்தும்



### தமிழர்களின் தற்போதய மனநிலை

தமிழ்த்தேசிய உரிமைப் போராட்டமானது, சுமார் நாற்பதாண்டு கால அறவழியிலான போராட்டத்தினூடாகவும், பின்னர் சுமார் நாற்பதாண்டுகால ஆயுதப் போராட்டத்தினூடாகவும் நகர்ந்து அடுத்த கட்டம் என்னவென்ற நிலையை எதிர்கொண்டு நிற்கிறது.

அறவழிப்போராட்டம், குறித்த இலக்கை எட்டாது என்றவுடன் அடுத்தது, ஆயுதப் போராட்டம் என்றும், ஆயுதப் போராட்டம் வீழ்ச்சியடைந்தவுடன், அடுத்தது அறவழிப் போராட்டம் என்றும் எழுந்தவாரியான முடிவுகளுடன் அடுத்த கட்டம் நிர்ணயிக்கப்படுதல் ஒரு தேசிய இனத்தின் போராட்டத் திக்கு ஆரோக்கியமானதல்ல.

உகந்த சூழலிலே, பொருத்தமான முறையில் ஆரோக்கியமான கலந்துரையாடல்கள், ஆக்கபூர்வமான சுயவிமர்சனங்கள் உள்ளக ரீதியிலே குறிப்பாக தமிழ்த் தேசியத்தின் எதிரிகளுக்கு தீனி போடாத வகையில் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தி, உரிமைப் போராட்டத்தை சரியான பாதையில் நகர வழியேற்படுத்துவதற்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்தத் தருணத்திலே, பலஸ்தீனத்துக்கான எனது சுற்றுப்பயணத்தின் போது, தகுதிவாய்ந்த, ஆனால், தன்னை அடையாளப்படுத்த விரும்பாத ஒரு பாலஸ்தீனியர் சொன்ன கருத்தை இங்கு பதிவு செய்வது பொருத்மாக இருக்கும் என எண்ணுகிறேன்.

"எங்களுக்குள் (பலதீனியர்களுக்குள்) பல பிளவுகளும், இருபெரும் பிரிவுகளும் இருக்கின்றன. எங்களது அணுகுமுறைகளிலும், எங்களது இலக்கை நோக்கிய எமது செய்பாடுகளை வெளிப்படுத்துவதில்

**நன்றி: இணையம்**

வேறுபாடுகளும், நெருக்கடிகளும் உள்ளன. ஆனால், இங்குள்ள (பலஸ்தீனத்தில்) எல்லோருக்கும் தெரியும் எங்களுடைய இலக்கில் நாம் தெளிவாகவும், உறுதியாகவும் உள்ளோம். ஒரு குடும்பத்துக்குள் முரண்பாடுகள் தோன்றுவது போன்றதே, எமக்குள் நிலவி வந்த முரண்பாடுகளும். ஆனால், எமது முரண்பாடுகள் எமது எதிரியை பலப்படுத்துவதானது, எமது இலக்கை நாமே சிதைப்பதற்கு வழியமைத்துவிடும் என்

மைக்கல்லை கடந்து, புதியதொரு சகாப்தத்தை உருவாக் கியிருக்கிறோம்" என்றார் அவர்.

அவருடைய கருத்து தமிழர்களது உரிமைப் போராட்டத்துக்கும் பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன். அதனை புரிய வேண்டியவர்கள் சரிவரப்புரிந்து, தமிழ் மக்கள் தமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கு ஏற்ற வகையில் தமது பங்களிப்பினை வழங்குவது பொறுப்பு மிகுந்ததும், வரவேற்கத்தக்கதுமான செயலாகும்.

**அடுத்து, ஏன் இப்படி நடந்தது, நாங்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டடோம், எல்லாம் போச்சுது, சர்வதேசம் எங்களைக் கைவிட்டு விட்டதே, இனி, என்ன நடந்தால் என்ன அனைத்துலகம் என்ன செய்யும் அல்லது ஏதாவது எங்களுக்குச் செய்யுமா? எங்களுக்கு நீதி கிடைக்க அல்லது தீர்வு வர எவ்வளவு காலம் எடுக்கும்? மற்றும் ஏன் இவ்வளவு காலம் எடுக்கிறது? போன்ற ஆதங்கங்களும் கேள்விகளும் தமிழ் மக்களிடத்தில் பரவலாக உள்ளன.**

மேலே குறிப்பிட்ட கேள்விகளும் ஆதங்கங்களும் மனித பேரவலத்தினால் தமது உறவுகளையும் உடமைகளையும் இழந்து நிற்கும் ஒரு சமூகத்தில் தவிர்க்கமுடியாதவை என்பதையும் உலக வரலாறு சொல்லி நிற்கிறது.

2009 மே மாதம் என்பது தமிழ் மக்களது வாழ்வில் அதி உயர் நெருக்கடியும் அழிவுகளும் இழப்புக்களும் ஆழமான சோகமும் நிறைந்த மாதம். பேரினவாதிகள் வெற்றிப் பெருமிதத்தில் இறுமாப்பும், எக்காளமும் இட்டபடியிருந்த நேரம். ஆனாலும் அதைக் கொண்டாட முடியாதவர்களாக இன்று உள்ளனர்; **போர்க்குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றம் என்ற விடயம் மேற்கிளம்பி குற்றவாளிகளை பதற வைத்துள்ளது.**

இது சரியான திசையில் நகர வேண்டுமானால் தமிழர்கள் மனநிலையில் உறுதியும் பின்வாங்காத தன்மையும் எங்களுக்கான காலம் வரும் என்ற நம்பிக்கையும் இருக்க வேண்டும். இது இருந்தால் மாற்று நிலையுடைய பூகோள அரசியலையும் விரிவாக்கப்படும் அமெரிக்காவின் வியூகத்தையும் தமிழ்த் தேசியத்துக்கு சாதகமான முறையில் கையாளலாம். வேட்கையுடனும் இலட்சியப்பற்றோடும் விடாமுயற்சியோடும் செயற்படுபவனுக்கே நாளை என்பது சொந்தமாகும்.

### உலக வரலாறு சொல்லும் பாடம்

தமிழ் மக்களில் ஒரு சாரார், எமக்கு நடந்த இன்னலால் மனமுடைந்து போயுள்ளனர். அதன் வெளிப்பாடாக எங்களுக்கு மட்டுமே இத்தகைய ஒரு அவலம் நிகழ்ந்துள்ளதாக எண்ணுகின்றனர். எங்களுக்கு நடந்தது மாபெரும் அவலம் சோகம் கொடுமை என்பது உண்மை. ஆனாலும், போராடும் தேசங்களுக்கு இதுவே வரலாறாக இருந்துவருகிறது.

உலக வரலாற்றிலே முதன்முதலாக இடம்பெற்ற இனப்படுகொலையாக ஆர்மேனியர்கள் மீது துருக்கி மேற்கொண்ட இனப்படுகொலை பதிவாகியுள்ளது. இனப்படுகொலையின் ஆரம்பம் 1850 ஆம் ஆண்டுகளில் முளைவிட்டிருப்பினும் அனைத்

யினை மறுக்கும் நிலை தொடர்கிறது. ஆயினும் உலகப் பொருளாதாரத்தில் துருக்கி துரிதகதியில்முன்னேற்றம் அடைந்து வரும் நிலையில் அதனுடனான உறவை பேணுவதற்கே மேற்குலகம் விரும்புகிறது.

அதேவேளை, துருக்கி ஆர்மேனியர்கள் மீது மேற்கொண்ட இனப்படுகொலையைத் தொடர்ந்து ஆர்மேனியர்கள் பல்வேறு தேசங்களுக்கும் பாதுகாப்புத்தேடி நகரத்தொடங்கினர். இன்று வரை ஆகக் குறைந்தது இறைமை உள்ள 19 நாடுகள் ஆர்மேனியாவில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை ஏற்று அங்கீகரித்துள்ளன. ஆனால், **அதிகமான ஆர்மேனியர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ள நாடுகளில் ஒன்றான அமெரிக்காவோ அதனை இன்னும் ஏற்று அங்கீகரிக்கவில்லை.**

இதில், கவனிக்கத்தக்க விடயம் என்னவென்றால், 2005 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ச். டபிள்யூ.புஸ் இற்கு, இன்றைய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆர்மேனியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலையை **இனப்படுகொலையென அங்கீகரிக்குமாறு கூறி கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அதனைத் தொடர்ந்து இனப்படுகொலை என்ற சொற்பதத்தையும் பிரயோகித்து வந்தார். ஜனாதிபதியான பிற்பாடு, ஆர்மேனியர்களுக்கு ஆதரவான நிலைப்பாடு தொடர்கின்றபோதும் இனப்படுகொலையென்ற சொல்லை தவிர்த்துவருகிறார்.** அனைத்துலக உறவில் பொருளாதாரத்தின் வகிபாகத்துக்கு இருக்கும் முதன்மையான நிலை இதற்குக் காரணமாக இருக்கலாம். எது எவ்வாறாயிருப்பினும் தமது முன்னைய பரம்பரையினர்மீது துருக்கிய பேரரசினால், மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலைதான் என்பதை ஏற்று அங்கீகரிக்க வைக்கும் செயற்பாடுகளில் அமெரிக்காவில் வாழ்ந்து வரும் ஆர்மேனியர்கள் சளைப்பின்றி தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இன்றும் துருக்கிக்கும்–ஆர்மேனியர்களுக்கும் இடையிலான கொதிநிலை தொடர்கிறது. ஆர்மேனியா ஒரு தனித்தேசமாக இன்று விளங்கினாலும் புலம்பெயர்ந்து வாழும் ஆர்மேனியர்கள் அதற்கான வலுவாகவும் அனைத்துலக குரலாகவும்இருந்து வருகிறார்கள்.

இதேவேளை கடந்த ஜனவரி மாதநடுப்பகுதியில் **ஆர்மேனிய இனப்படுகொலை** எதிர்ப்பு சட்டம் ஒன்று பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது 86 உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்ததோடு இனப்படுகொலையினை மறுப்பது குற்றச்செயல் என்னும் மசோதாவும் இயற்றப்பட்டது.

இது துருக்கிக்கு கடும் ஆத்திரத்தை உண்டு பண்ணியுள்ளது. அதனால், பிரான்சுக்கும் துருக்கிக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும்பொருளாதார உறவுகள் மோசமாகப் பாதிப்படையும் சூழல் உண்டாகியுள்ளது. இதனை பிரெஞ்சு அரசாங்கம் நிச்சயமாக எதிர்பார்த்தேயிருக்கும். அப்படியிருந்தும் இத்தகைய ஒரு சட்டத்தை நாடாளு மன்றத்திற்கு கொண்டு வருவதற்கான காரணத்தை அலசும்போது தமிழ் மக்களுக்கும் அமைவான சில படிப்பினைகளை உணரலாம்.

ஹமாஸிற்கு உதவிகளை மேற்கொண்டு வருகின்றது என்ற வலுவான சந்தேகங்களும் உள்ளன.

அத்துடன் பிரஞ்சு வாக்குரிமை கொண்ட கணிசமான ஆர்மேனியர்கள் பிரான்சில் வாழ்ந்து வருகிறார்கள். எதிர்வரும் பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் அவர்களது வாக்குகளும் சிறியளவிலான செல்வாக்கினை செலுத்தும் சக்தியாக இருக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. இதுபோன்ற பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டே நிக்கொலா சார்க்கோசியினுடைய அரசாங்கம் இத்தகைய ஒரு துணிகர நடவடிக்கையை எடுத்தது.

இத்தருணத்தில் ஒரு விடயத்தை ஆழமாகப் பார்க்கவேண்டும். அமெரிக்காவிற்கும், பிரான்ஸ் முதன்மையான நாடுகளில் ஒன்றாகவுள்ள ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு நிலை பல்வேறுபட்ட விடயங்களிலும் தொடர்கிறது. இரண்டும் மிக இறுக்கமான நேச சக்திகள். அவ்வாறிருக்க பொருளாதார நலனினைக் கருத்தில் கொண்டு துருக்கியுடன் மென்போக்கைக் கடைப்பிடிக்கும் அமெரிக்கா முரண்பாடுகளத் தோற்றுவிக்கக்கூடிய நிகழ்வுகளைத்தவிர்த்து வருகிறது. இத்தனைக்கும் இஸ்ரேலின் அதிநம்பிக்கைக்குரிய நாடு அமெரிக்கா. அத்தகைய.ஸ்ரேலுடன் துருக்கி கசப்பான உறவைப் பேணும்போதும்கூட துருக்கியை நோக்கிய அமெரிக்காவின் மென்போக்கு நிலை தொடர்கிறது.

அதேவேளை பிரான்சுக்கும் துருக்கிக்கும் இடையில் சிறப்பான பொருளாதார உறவு நீடித்து வந்தது. இது இருநாடுகளின் பொருளாதாரத்திலும் கணிசமாக தாக்கத்தை செலுத்தவல்லது. அப்படியிருந்தும், பிரான்ஸ் அத்தகைய ஒரு முடிவை எடுத்துள்ளது.

ஆனால், இந்த முடிவு அமெரிக்காவின் நாடி பிடித்துப்பார்க்காமல் செய்யப்பட்டிருப்பதற்கான வாய்ப்புக் குறைவு. பின்வழிக் கதவு கலந்துரையாடல்கள் நிச்சயமாக நடந்திருக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் நிறை யவே உள்ளது.

ஆனால், இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் தமது பொது நலனைக் கருத்தில்கொண்டு இரு நெருங்கிய நேச அணிகள் எதிரும் புதிருமாக செயற்படுவது, இராஜதந்திரத்தில் ஒன்றும் புதிய விடயம் அல்ல. குறித்த மூன்று தரப்புகளும் ஒரு விடயத்தை நோக்கி நகரும்போது அங் குள்ள நேசசக்திகள் தங்கள் நல



நிக்கொலா சார்க்கோசி

## அடுத்த பத்தாண்டுக்கான அமெரிக்காவின் பாதுகாப்புத் திட்டமும் ஈழத்தமிழரின் எதிர்காலமும்

பதை அச்சத்துடன் புரிந்து கொண்டோம். எமது பிளவுகளை எதிரி விரும்பினான் என்பதையும் அறிந்து கொண்டோம். ஏனெனில் எம்மை அழிப்பதற்கு அது அவனுக்குத் தினீ போட்டது. ஆதலால் நாம் ஒன்றிணைந்தோம். எங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை, எமக்குள் நாமே பேசி உடன்பாடுகளுக்கு வந்தோம். அது எமது சகோதரத்துக்குள் பகைமை வளர்வதை கட்டுப்படுத்தியது. இன்று நாம், எமது போராட் டத்தில் இன்னொரு வரலாற்று

துலகம் அதனை முதலாம் உலகப்போர் முடிவோடுதான், கவனமெடுக்கத் தொடங்கியது. ஆதலால் அதனை 1915 ஆம் தொடக்கம் 1923 வரை நடைபெற்ற இனப்படுகொலையாகவே வரலாறு பதிவு செய்துள்ளது.

குறித்த எட்டு ஆண்டு காலப்பகுதிக்குள் 10 தொடக்கம் 15 இலட்சம் வரையான ஆர்மேனியர்கள் துருக்கிய பேரரசினால், படுகொலை செய்யப்பட்டனர் ஆனால், இன்றுவரை இதனை துருக்கி இனப்படுகொலை என ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களின் இனப்படுகொலை

2010 மே மாதம் உணவு, மருந்து மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை ஏற்றிக் கொண்டு துருக்கிய கப்பல் பலஸ்தீனத்தின் காஸாவை நோக்கிப்பயணித்தது. இதனை இடைமறித்த இஸ்ரேலியப்படையினர் அதன் மீது தாக்குதலையும் நடாத்தியிருந்தனர். இதனைத்தொடர்ந்து, இஸ்ரேலுக்கும் துருக்கிக்குமான உறவு மேலும் விரிசலடைந்தது அதன் உச்சக்கட்டமாக இராஜதந்திர உச்சக்கட்ட தொனியூடாக பரஸ்பர எச்சரிக்கைகளும் விடப்பட்டது. இதேவேளை துருக்கி

னைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு கலந்துரையாடி முன்னெடுக்கும் நகர்வு அனைத்துலக உறவில் சாதாரணமானது. இது பொது எதிராளியை தமது நலனை நோக்கிய வலைக்குள் வீழ்த்துவதற்கு துணைநிற்கும். இதில் அமெரிக்காவிற்கும் பிரான் சிற்கும் நல்ல புரிந்துணர்வு நிலை உள்ளக ரீதியில் நிலவும்.

இதைவிடத் தீவிரமான ஒரு நிலை ஆசிய பசுபிக் நோக்கிய அமெரிக்காவின் வியூக விரிவாக்கத்தோடு இலங்கைத் தீவிலும் உருவாகப்போகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்மக்களின் மொழியுரிமையை மறுப்பது அவர்களின் அடையாளத்தை மறுப்பதற்கு சமமெனக் கூறியவர் ஜீ.ஜீ

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் 1939 ஆம் ஆண்டு அரச சபையில் சமபிரதிநிதித்துவத்தை பற்றி ஆற்றிய உரையும் 1956 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தனிச்சிங்கள சட்ட மசோதா சமர்ப்பிக்கப்பட்ட சமயம் ஆற்றிய உரையும் மிகவும் முக்கியமானவை. அவர் இதய சுத்தியுடனும் தீர்க்க தரிசனத்துடனும் செயலாற்றினார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நேர்மையோடு நாடி நிற்பது முழுமையான ஐக்கியம் ஆகும். எமக்குத் தேவைப்படுவது இன சௌஜன்யத்தை கொண்ட கட்சி முறைமையின் பரிணாம வளர்ச்சியாகும். அதற்கு முன்னோடி நிலைமையாக விளங்க வேண்டிய ஒரு சமூகமானது தனக்கென ஒரு இன ரீதியான கட்சியை ஆரம்பித்து அதிகாரத்தை கைப்பற்ற முடியாதென்ற நிலைப்பாடாகும்.

அதுதான் சரியான நிலை. அனைத்து சமூகங்களினதும் சமநிலை எப்போது அரசியலிலும் பொருளாதாரத்திலும் காண்பிக்கப்படுகிறதோ அப்போது ஒரே மாதிரியான சிந்தனை கொண்டவர்கள் ஒரு நிலையைக் கொண்டவர்களுள் ஒன்றடைவார்கள்.

சமாளிக்க முடியாத அளவுக்கு எண்ணிக்கையில் அதிகரித்து வருவதும் அறிவிக்கப்பட்ட ஒன்றாகும்.

தனது தற்போதைய நோக்கங்களை செயற்படுத்துவதில் இருந்து எந்தவொரு நாடாளுமன்ற முறைமையின்னாலும் முடியாதிருப்பதுமான ஓர் இனவாத கட்சியை சோல்பரி தடுக்கக்கூடிய ஆலோசனையாக எதனையும் எதிர்கால்திற்கென முன்வைக்கவில்லை என்பதே தமிழ்மக்களின் முறைப்பாடாகும்.

கடந்த 14 ஆண்டுகளாக டொனமூர் அரசியல் அமைப்பை செயற்படுத்துவதில் பிரதான குறைபாடாக காணப்படுவது மாற்று அரசு ஒன்றை உருவாக்க இயலாமையாகும். இக்காரணியானது சிங்கள அமைச்சர்களைக் கூட்டாகவும் தனிப்பட்ட விதத்திலும் ஏகாதிபத்தியவாதிகளாகவும் பொறுப்பற்றவர்களாகவும் ஆக்கியது.

தமிழ் மக்களின் முறைப்பாடு யாதெனில் நாட்டின் விவகாரங்களை நடத்திச் செல்வதில் போதுமான அளவு குரல் ஒன்றை வழங்க சிறுபான்மை இனத்தவருக்கு உரிமை வழங்க வேண்டும் என்பதாகும்.

அதேவேளை ஒரு கூட்டுச் செயலாட்சித்துறைக்கான விருப்பு நிலைக்கு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

அதேநேரம் குழுமுறைமையை இல்லாதொழிக்க பரிந்துரைக்கின்றது. ஆனால் நாட்டில் ஆட்சி பயனுறுதியான மற்றும் போதுமான பங்கினை சிறுபான்மை இனத்தவருக்கு வழங்குவதற்கோ அல்லது மாற்றீடாக எதனையும் உருவாக்கவோ முயற்சிக்கவில்லை.

இன்றைய மக்கள் இன ரீதியாக வாக்களிப்பதுதான் புத்தி சாலித்தனமான நடவடிக்கையாகும்.

சபாநாயகர் அவர்களே! அத்தியாவசியமாக இருந்தால் அன்றி டொனமூர் அரசமைப்பு தலையிடாது எனக்கூறியதும் தேசாதிபதி

**அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 35 ஆவது நினைவுதினம் இன்றாகும். இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது**

விகிதம் மற்றும் சமம் பற்றிய உணர்வு தம்மிடம் முற்றாகவே இல்லை என்பதை புலப்படுத்தியுள்ளார்.

இவ்விடயம் யாதெனில் அமைச்சரவை முறைமையை பரிந்துரைப்பதற்கு தீர்மானித்துவிட்டார் என்பதேயாகும்.

இத்திட்டத்திற்கு உங்கள் அங்கீகாரம் ஏற்புடையதாயுள்ளதா என்பதை நான் அறியும் வரை இத்தகைய ஒரு குழுவை நியமிப்பதற்காக நான் அனுசரணையாக இருக்கமாட்டேன் என்ற அறிக்கையில் இருந்து தெளிவாவது என்ன? தேசாதிபதியின் பரிந்துரைகளை எடுத்துக் காட்டுவதற்கு போதியளவு சாட்சியங்கள் உள்ளன என்பதாகும்.

சபாநாயகர் அவர்களே!

மக்கள் பிரதிநிதிகளை கலந்தாலோசிப்பது தேவையில்லை என நினைக்கின்ற மனநிலையிலேயே தேசாதிபதி அவர்கள் செயலாற்றி உள்ளார் எனக் கூறியுள்ளேன்.

குறிப்பாக ஒரு சமூகத்தை சேர்ந்த அனைத்து அமைச்சர்களையும் கொண்ட சபையாக அமைய வேண்டும். அரசியல் அமைப்பு சீராக்க விடயத்தில் அனைத்து தரப்பு மக்களாலும் பரிசீலனை செய்யும் உரிமை பறிக்கப்பட்டது.

அதன் காரணமாக சிறந்த அதிகார சபையாக அது அமையவில்லை. இறுதியாக இலங்கையை பொறுத்தவரையில் எமது நாடாளுமன்றத்தில் இந்தச் சபையை முரண்டுபடுகின்ற பகைமை கொண்ட நலன்களின் தூதுவர்களாகக் கொண்ட ஒரு சபையாக இல்லாமல் ஒட்டு மொத்தமாக இலங்கையர்களின் நலன் ஒன்றையே தம் ஒரே விருப்பமாக கொண்ட சபையாக மாற்ற வேண்டும்.



அதன்மூலம் உயிர் ஊட்டப்பட்ட மக்களின் அனைத்துப் பிரிவினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய திட்ட வட்டமான ஒரு சபையை ஆக்குமாறு பேரரசின் ஸ்தாபகர்களின் உயிர் ஊட்டிய உணர்வுகளுக்கு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

**தனிச்சிங்கள சட்டமூலத்தின் போது ஆற்றிய சிங்கள உரையின் ஒரு பகுதி..**

சபாநாயகர் அவர்களே!

மொழி என்பது ஒவ்வொரு மனிதனும் தமது எண்ணங்களை பொதிந்து வைத்திருந்து வெளிப்படுத்தும் ஒரு ஊடகமாகும். அதன் வழியாகவே நாம் எமது உணர்வுகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகின்றோம்.

எமது குழந்தைப் பருவத்திலிருந்து நாம் இறக்கும் வரை அதனை சுமந்து செல்கின் றோம். ஒருவன் தன் தாயின் தாலாட்டிலேயே உண்மைகளையும் தத்துவங்களையும் முதல் கற்றுக் கொள்கின்றான்.

இது மற்றவர்களுக்கு புரியாமல் இருக்கலாம். ஒருவனுக்கு தன் மொழியை மறுப்பதும் தன் இனத்துவத்தையும் அந்தஸ்தையும் மறுப்பதும் ஏற்க முடியாதவொன்றாகும்.

அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான மொழி உரிமையை தமிழ் இனத்திற்கு மறுப்பது அவ்வினத்திற்கு தொடர்ச்சியாக இருந்து வந்த தனியான அடையாளத்தை மறுப்பதாகும். தனியான, முழுமையான பொருளாக இருப்பதை முறிப்பதாகும். தனியான ஒரு உட்பொருளாக அது இருப்பதை மறுப்பதாகும். இது தவிர்க்க முடியாதது.

பூகோள ரீதியாக நாம் வாழும் பிரதேசத்திற்கும் எம்மைச் சூழ்ந்திருக்கும் கடற்பிரதேசத்திற்குமுரிய மதிப்பை கொடுத்து நோக்கினால் இது தெட்டத் தெளிவாகும்.

சிங்களத்தை நாட்டின் ஒரு தேசிய மொழியாக திணிப்பதென்பது தமிழ் இனத்தையும் தமிழ் மக்களையும் தவிர்க்க முடியாதவாறும் தடுக்க முடியாதவாறும் ஒரு முடிவுக்கு கொண்டு வந்து விடும்.

இச்சட்டத்தை அமுல்படுத்திக் கொண்டு செல்கையில், இந்நாட்டின் சனத்தொகை மொழி ரீதியாகப் பிளவுபடச் செய்வது தான் அவர்களது நோக்கமாகும். இதுதான் அவர்களின் நோக்கம் என்றால் நாங்கள் ஆராய்ந்து பார்த்திருந்த அச்சத்தையல்ல கருத்தினை அவர்களுக்கு முன்வைக்கின்றோம்.

அதாவது அவர்களது மூடத்தனமான செயல்கள் தவிர்க்க முடியாத, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

நேரிய உள்ளத்தோடு நான் அவர்களை கேட்கிறேன். இச்சட்டமூலத்தை இன்னும் அவர்கள் தொடர்ந்து முன்னெடுக்கப் போகின்றார்களா? அப்படியானால் சபாநாயகர் அவர்களே!

**தொகுப்பு:- க.மு.தர்மராசா**

எல்லோரும் இதை புரிந்து கொள்ள வேண்டும்.

இதனால் ஏற்படப் போகின்ற தவிர்க்க முடியாத விளைவுகளை முழுமையாக உணர்ந்து கொண்டே அவர்கள் அதை செய்கின்றார்கள்.

**நாங்கள் இந்த நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும் போது நாங்கள் எடுத்த முயற்சிகள் கணப்படுத்த முடியாத அளவு ஆழமான வெடிப்பை விளைவிக்க கூடுமென்று அப்போது நாங்கள் நினைத்திருக்கவில்லை என்று பிற்காலத்தில் அவர்கள் சொல்லக் கூடாது.**

# ஈரான் அரசாங்கத்தின் சொத்துக்களை முடக்குங்கள்

## ஒபாமா உத்தரவு

(வோஷிங்டன்)

ஈரான் அரசுக்குச் சொந்தமாக அமெரிக்காவில் உள்ள சொத்துக்களை முடக்குமாறு ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

ஈரானின் அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது என அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளதுடன் பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் நெருங்கிய நட்புநாடான இஸ்ரேல் ஈரான்மீது போர் தொடுக்கும் முனைப்புடன் உள்ளது. ஈரான்மீதான இஸ்ரேலின் போர் நிச்சயமாக அமெரிக்காவின் பொருளாதாரத்தில் கடும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஒபாமா கருதுகிறார்.

இதனால் ஈரானை முடக்கிவைக்கும் நடவடிக்கைகளை அவர் தீவிரப்படுத்தியுள்ளார். அதன் ஒருபடியாக அமெரிக்காவில் இயங்கும் ஈரானின் மத்திய வங்கியின் செயற்பாட்டை முடக்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை முதல் இத் தடை அமுலுக்கு வந்துள்ளது. ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி வர்த்தகத்தைதடைசெய்வதன்மூலம் அந்நாட்டைப் பணிய வைக்க



முடியும் என்று அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கருதி வருகின்றன. (அ-2)

# லண்டன் சிறையில் இருந்த பின்லேடனின் சகா விடுதலை

(லண்டன்)

ஜோர்தானைச் சேர்ந்தவர் அபு குவடா. இவர் பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்ட பின்லேடனின் முக்கிய கூட்டாளி ஆவார்.

ஜோர்தானில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டார். இங்கிலாந்திலும் நாசவேலையில் ஈடுபட்ட அவர் கைது செய்யப்பட்டு லண்டன் சிறையில் அடைக்கப்பட்டார். 6 1/2 ஆண்டுகளாக விசாரணை எதுவுமின்றி தொடர்ந்து பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இதற்கு ஐரோப்பிய மனித உரிமைக்கழக நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து கடுமையான நிபந்தனையின்கீழ் அவரை லண்டன் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது. எனவே அவர் ஜோர்தானுக்கு புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் தன்மீதுள்ள வழக்கு விசாரணையில் பங்கேற்கிறார். அவர் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க ஜோர்தான் அரசு தவறினால் 3 மாதத்தில் மீண்டும் தங்களிடம் ஒப்படைக்கவேண்டும் என இங்கிலாந்து நிபந்தனை விதித்துள்ளது. (அ-2)

# உலக தரிசனம்

# சிரியாவில் தொடரும் போராட்டம்; நூற்றுக்கணக்கானோர் பலி

## அமெரிக்க தூதரகம் மூடப்பட்டது

(பெய்ருட்)

சிரியாவில் ஏராளமான மக்கள் இராணுவத்தினரால் கொல்லப்படுவதைக் கண்டித்து அங்குள்ள தூதரகத்தை அமெரிக்கா மூடிவிட்டது.

பிரிட்டன் தனது தூதரை வாபஸ் பெற்றுள்ளது. மேலும் கடந்த இரு நாட்களில் இங்கு நடந்த மோதல்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் இதுவரை 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். இந்நிலையில் பதவிவிலகாத சிரிய ஜனாதிபதியின் போக்கைக் கண்டித்து அமெரிக்கா அங்குள்ள தூதரகத்தை மூடிவிட்டது. இதுகுறித்து ஜனாதிபதி ஒபாமா



குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி ஆசாத் பதவி விலகுவதற்கான நேரம் நெருங்கிவிட்டது. அவர் பதவிவிலகுவது பற்றி தற்போது பிரச்சினையல்ல. எப்போது பதவிவிலகுவார் என்பதுதான் தற்போதைய எதிர்பார்ப்பு என்றார்.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹக் குறிப்பிடுகையில், சிரியாவில் தற்போது கொலைகார ஆட்சி நடக்கிறது. இனிமேலும் சிரியா சர்வதேச நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறமுடியாது. எனவே சிரியாவில் உள்ள எங்கள் தூதரை வாபஸ் பெற்றுக்கொள்கிறோம் என்றார்.

முன்னதாக இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகள் தங்களின் தூதர்களை சிரியாவிலிருந்து வாபஸ் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அமெ. விமானத் தாக்குதலில் 8 பேர் பலி; 2 பேர் காயம்

(லாகூர்)

பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டி அமைந்துள்ள வடக்கு வசிரிஸ்தான் பழங்குடியின பகுதி தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதியாகும்.

அங்குள்ள மிரான்ஷா நகரில் தாப்பி பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த கட்டடத்தின் மீது அமெரிக்க ஆளில்லாத விமானங்கள் நேற்று அதிகாலை திடீரென ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தின.

இதில் 8 தீவிரவாதிகள் பலியாயினர். இரண்டு பேர் காயம் அடைந்தனர். தீவிரவாதிகளில் சிலர் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)

# படகு கடலில் கவிழ்ந்தது; 18 பேர் நீரில் மூழ்கி பலி

(டொமினிக்கோ)

கரீபியன் கடல் பகுதியில் இருக்கும் தீவு நாடான டொமினிக் அருகே, 60 பேரை ஏற்றிக்கொண்டு படகு ஒன்று சென்றுகொண்டிருந்தது.

இவர்கள் அனைவரும் அகதிகள். இந்த படகு திடீரென கடலில் கவிழ்ந்தது. இதில் படகில் பயணம் செய்த 18 பேர் நீரில் மூழ்கி பலியாகினர்.

இந்த தகவல் கிடைத்ததும் டொமினிக் நாட்டைச் சேர்ந்த பாதுகாப்பு படையினர் விரைந்து சென்று கடலில் தத்தளித்த பத்தொன்பது பேரை உயிருடன் மீட்டனர்.


மேலும் 20 இற்கும் மேற்பட்டோர் கதி என்ன? என்று தெரியவில்லை.

தொடர்ந்து தேடுதல் பணி நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)



மறைந்த பிரிட்டனின் முன்னாள் இளவரசர் சார்ளஸ் டிக்ன்ஸ் 200 ஆவது பிறந்த தினத்தையொட்டி அவரது நினைவிடம் உள்ள அபேய்லண்டனில் இளவரசர் சார்லஸ் அவரது மனைவி கமீலா ஆகியோர் அஞ்சலி செலுத்துதைப் படத்தில் காணலாம்.

# அவுஸ்திரேலிய கடல் பகுதியில் பழமைவாய்ந்த எரிமலை கண்டுபிடிப்பு



(சிட்னி)

ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த உயிரினங்கள் கூடிய எரிமலை அவுஸ்திரேலிய கடற்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய ஆய்வு விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

கிரேட் அவுஸ்திரேலியாவின் பியட் மரைன் பார்க் பெனடிக் படுகப்பு என்னும் கடற்பகுதியில் சுமார் 100 மைல் தொலைவில் 2 ஆயிரம் மீற்றர் ஆழத்தில் ஓர் எரிமலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


இது கடலுக்கடியிலிருந்து 200 மீற்றர் மேல் எழும்பியுள்ளதாகவும் தற்போது செயற்பாட்டில் இல்லை என்றும் ஆனால் இதில் உயிர்வாழ் பொருட்கள் நிறைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எரிமலையின் மேக்மா மேலே வரத்தொடங்கிய முயற்சியால் இந்த எரிமலை உருவாகியிருக்கலாம் என்றும் இந்தக்கடல் பகுதியில் வாழும் அனைத்து உயிரிகளும் தனிச் சிறப்பு வாய்ந்தது எனவும் கூறப்படுகின்றது.

இப்பகுதியில் எரிமலைகள் நிறைந்திருந்தபோதிலும் இந்த எரிமலை எந்தவிதத் தொந்தரவுகளும் இல்லாமல் காணப்படுவதே இதன் தனிச் சிறப்பாகும். இதனாலேயே இதன் உயிர்த்தன்மை பாதுகாக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளனர். (அ-2)

## மாலைதீவின் புதிய ஜனாதிபதிக்கு இந்தியப்பிரதமர் வாழ்த்து மடல்

(டில்லி)



புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள மாலைதீவு ஜனாதிபதி வாஹீத்திற்கு பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மாலைதீவுகளில் கடந்த 2 ஆம் திகதிகளில் எதிர்பார்க்கமுடியாத மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மாலைதீவுகளின் முதல் ஜனநாயக ஜனாதிபதி முகமது நஷீத் நேற்றுமுன்தினம் காலை பதவி விலகினார்.

இதையடுத்து நேற்று முன்தினம் மதியம் புதிய ஜனாதிபதியாக முகமது வாஹீத் பொறுப்பேற்றார்.

அந்நிய நாட்டினுடைய உள்விவகாரங்களில் தலையிடாமல் இந்தியா தன்னுடைய பெருந்தன்மையை வெளிப்படுத்தினாலும் சக பதவி வகிக்கும் ஒருவருக்கு வாழ்த்து தெரிவிப்பது ஏனைய நாட்டு பிரதமர்களுக்கு மரியாதையாகும்.

இந்த வகையில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் புதிய ஜனாதிபதி வாஹித்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும் எங்களது ஆதரவு உங்களுக்கு எப்போதும் உண்டு என்றும் பிரதமர் மன்மோகன் சிங் தன்னுடைய கடிதத்தின்மூலம் தெரிவித்துள்ளார். (அ-2)



மாலைதீவு ஜனாதிபதி முகமது நஸீத் பதவிவிலகியதை அடுத்து புதிய ஜனாதிபதியாக வாஹித் ஹுசைன் மாலே நகரில் பொறுப்பேற்றுக்கொண்டதைப் படத்தில் காணலாம்.

## பிலிப்பைன்சில் நிலநடுக்கம்; மக்கள் உணவின்றி அவதி

(மணிலா)



பிலிப்பைன்ஸ் நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்தது. பிலிப்பைன்சின் நெக்ரோஸ் தீவில் நேற்று முன்தினம் 6.9 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதில் ஏராளமான வீடுகள், கட்டடங்கள் இடிந்த விழுந்தன. இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது.

இன்னும் 92 பேரை காணவில்லை . அவர்களை தேடும் பணிகளில் ஆயிரம் இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.வீதி, பாலங்கள் சேதமடைந்துள்ளதால் நிலநடுக்கம் பாதித்த கிராமங்களுக்கு மீட்பு குழுவினர் நடந்தே சென்றனர். நிலநடுக்கத்திற்குப் பின்னர் அடுத்தடுத்து நூற்றுக்கணக்கான சிறிய அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

இது மக்களை அச்சமடைய செய்துள்ளது. மேலும் மின்சாரம், குடிநீர், அத்தியாவசிய பொருட்கள் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் அமைதிகாத்துஇயல்பு நிலை திரும்ப அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி நினோய் அகய்னோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதியில் அமைந்துள்ளது. அங்குள்ள லுசான் தீவில் கடந்த 1990 ஆண்டு 7.7ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சட்டத்திற்கு எதிராக செயற்பட்ட பிபிசி செய்தி நிருபர் ஈரானில் கைது

சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டதாக லண்டன் பிபிசி செய்தி நிறுவனத்தின் நிருபர்களை ஈரான் அரசு கைது செய்துள்ளது.

லண்டனை தலைமையிடமாக கொண்டு செயற்படும் பிபிசி நிறுவனம் உலகம் முழுவதும் மக்கள் பேசும் மொழிகளில் செய்திகளை வழங்கி வருகின்றது. அதேபோல் ஈரானில் பேசும் மொழியான பார்ஷி மொழியிலும் செய்திகளை வழங்கி வருகின்றது. இந்நிலையில் பார்ஷி மொழியில் செய்திகளை வழங்கி வரும் நிருபர்கள் சிலர் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுள்ளதாக கூறி ஈரான் அரசு கைது செய்துள்ளது என அரசுக்கு சொந்தமான செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2ஆண்டுக்குமுன்பிருந்தே பகுதி நேர நிருபர்களின் நடவடிக்கைகள் கவனிக்கப்பட்டு வந்ததாகவும் அவர்களின் நடவடிக்கைகள் சட்டவிரோதமாக இருந்ததால் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

இருப்பினும் எந்த வகையான குற்றம், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் விபரம் போன்றவற்றை வெளியிடவில்லை. முன்னதாக சட்டவிரோத குற்றத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட 2 பிபிசி நிருபர்களை கடந்த ஒக்டோபர் மாதத்தில்தான் ஈரான் அரசு விடுவித்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நழுவல் போக்கு

### விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்கம் செய்யவேண்டும் என்ற விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நழுவல் போக்கில் உள்ளார் என்று இந்தியா கண்டுபிடித்திருக்கிறது என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய உயர் மட்ட குழு ஒன்று இரு நாட்கள் விஜயம் மேற்கொண்டு 2008 ஆம் ஆண்டு ஜூன் 20,21 ஆம் திகதி கொழும்பு வந்திருந்தது.

இக் குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ச ஆகியோர் உட்பட அரச உயர் மட்டத்தினரை சந்தித்து உரையாடியுள்ளனர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்கின்றமை பற்றி மஹிந்த, பசில் ஆகியோருடன் பேசியபோது, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு முழுமையான அதிகாரங்களை அரசு வழங்கவில்லை என்று குற்றம் சாட்டி இருக்கின்றனர்.

அமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் பற்றிய விடயத்தை வரவேற்கக் கூடிய போக்கை பசில் கொண்டிருக்க நழுவல் போக்கை ஏமாற்றுகின்ற நிலைப்பாட்டை மஹிந்த கொண்டிருக்கிறார் என்று கண்டு கொண்டார்.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் அப்போதைய துணைத் தூதுவர் ஏ.மாணிக்கம் இவ் விடயங்களை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு தெரிவித்து இருக்கிறார்.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து 2008 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் திகதி அமெரிக்கவெளியுறவுஅமைச்சுக்கு அனுப்பப்பட்ட இராஜதந்திர ஆவணம் விக்கிலீக்சுக்கு கிடைத்துள்ளது. (அ-2)

## மாணவர்களுக்கான சீருடை வழங்கலை ஏப்ரல் மாதத்திற்குள் பூர்த்தியாக்குங்கள்

### ஐக்கிய தேசிய கட்சி வேண்டுகோள்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கும் நடவடிக்கைகள் ஏப்ரல் மாதத்துடன் பூர்த்தியாக வேண்டுமென ஐ.தே.கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் கடந்த காலங்களில் ஜனவரி மாதத்துடன் பூர்த்தி செய்யப்படுவது வழக்கமாகும்.

இது தொடர்பாக பிரதிக்கல்வி அமைச்சர் விஜித முனி சொய்சா கருத்து வெளியிடுகையில்,

மார்ச்மாதம் முடிவடைவதற்கு முன்னர் மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுவிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

துணிகளை விநியோகிப்பவர்களால் ஏற்படும் காலதாமதமே இதற்கான காரணமாகும். அதேவேளை ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் பாடசாலை சீருடைகளை பெறுவதற்கென பெற்றோர் 80 கிலோமீற்றர் நடக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருந்தனர் என்பதனையும் அவர் தெரிவித்தார். (அ-7)

## வாகனத்தின் கதவு திறந்ததில் விபத்து; சிறுமி பரிதாப உயிரிழப்பு

ஓடிக்கொண்டிருந்த வாகனத்தின் கதவு தவறுதலாக திறபட்டதால் வாகனத்திலிருந்து சிறுமி வீதியில் விழுந்த சம்பவம் ஒன்று கடந்த முதலாம் திகதி அன்று முத்திரைச்சந்தியில் இடம்பெற்றது.காயமடைந்த சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் நடைபெற்று 6 நாட்களாக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த தாவடி தெற்கு கொக்குவில் காளிகோவிலடியைச்சேர்ந்த ஜீவானந்தம் லோஜினி (வயது 4) என்ற சிறுமி நேற்று முன்தினம் சிகிச்சை பயனளிக்காத நிலையில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். (அ-4)



கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் ஆரம்ப நிகழ்வாக மரதன் ஓட்டம் நடைபெற்றபோது கிளிநொச்சி வலய விளையாட்டுத் துறைக் கல்விப் பணிப்பாளர் பி. விஷ்ணுவுக்கு பாடசாலை அதிபர் ம.சி. மனுவேல் கைலாகு கொடுத்து ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். (படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)

# வைத்தியசாலைக்கு தன்னை அழைத்துச் செல்லக்கோரி

# நேற்று உண்ணாவிரதம் இருந்த சரத் பொன்சேகா

அனோமா பொன்சேகா தலைமையில் புதுக்கடை நீதிமன்ற வளாகத்தின் முன்னால் நேற்று காலை 10.30 மணிக்கு இந்த ஆர்ப் பாட்டம் ஆரம்பமாகியது. பல அரசியல் கட்சி கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றின. ஐ.தே.கவும் பின்னர் இதில் இணைந்துள் ளன.

இவ் ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் கட்டளை யொன்றை பிறப்பிக்குமாறு வாழைத்தோட் டம் பொலிஸார் செய்த விண்ணப்பத்தை நீதிமன்றம் மறுத்துள்ளது.

எதிர்ப்பை தெரிவிக்கும் உரிமை ஆர்ப்பா ட்டக்காரர்களுக்கு உண்டென கொழும்பு கோட்டை நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி தெரிவித்து ள்ளார்.

இந்த உரிமைக்கு எதிராக தடை பிறப்பிக் கப்படமாட்டாதெனவும் அவர் கூறி னார். இருப்பினும் அமைதிக்கு பங்கம் விளை விக்கும் நிலைமை உருவாகினால் நடவ டிக்கை எடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டது. இவ் ஆர்ப்பாட்டத்தின் போது உண்ணாவிரதம் இருந்த முன்னாள் இராணு வத் தளபதி சரத் பொன்சேகா பின்னர் உண் ணாவிரதத்தை கைவிட்டுள்ளதாக ஐ.தே. முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அர் ஜுன ரணதுங்க கூறியுள்ளார். சரத் பொன் சேகா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தன்னை அதிகாரிகள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லத் தவறியதால் சரத் பொன் சேகா உண்ணாவிரதம் மேற்கொண்டிருந் தார். பின்னர் அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல தீர்மானித்ததையடுத்து அவர் உண்ணாவிரதத்தை கைவிட்டார். இதன்போது கருத்து வெளியிட்ட மனோ கணேசன் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் போராட்டத்தில் தமிழ் மக்கள் இணைந்து கொள்வதாக ஜனநாயக மக்கள் முன்ன ணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட் பாளராக சரத் பொன்சேகா நிறுத்தப்பட்ட போது எதிர்ப்பை வெளியிட்ட விக்ரமபாகு கருணாரட்ன, சிறிதுங்க ஜயசூரிய ஆகியோ ரும் இன்று சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோருகின்றனர்.

சரத் பொன்சேகா ஓர் சாதாரண நபர் அல்ல. சட்ட ரீதியான முறையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு நாற்பது இலட்சத் திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்.

இதனைவிட உலகின் மிகச் சிறந்த இராணுவத் தளபதியாக ஆட்சியாளர்கள் சரத் பொன்சேகாவை வர்ணித்தனர் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.(அ-2)

## செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறுகதை, கவிதை கற் பித்தல் தொடர்பான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளத்தில் உள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணு க்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு மதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்து ள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், க. பொ.த சாதாரண தர வகுப்புக்களுக்குட் பட்ட ஆசிரியர்கள் தலா ஒருவரும் க.பொ. த. உயர்தர பாடசாலைகளில் இருந்து தலா 2 தமிழ் பாட ஆசிரியர்களும் இச்செயலமர் வில் தவறாது கலந்து கொள்ள வேண்டு மென தெரிவித்துள்ளார். (அ-3-15)

# இயற்கை வளங்கள் அழிக்கப்படும் போது

# மனித வாழ்க்கையும் கேள்விக்குறியாகிறது

## பேராசிரியர் நோர்பேட் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகின் அரசியல் தலைமைகளை மாற் றும் அளவிற்கு சூழல் பிரச்சினை இன்று பூதாகரமாக கிளம்பியுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக புவியியற்றுறை தலைவர் பேராசிரியர் அன்ரனி நோர்பேட் தெரிவித் துள்ளார்.

பசுமை அமைதி விருது வழங்கும் நிகழ் வில் நங்கூரம் சமூக அறிவியல் நூலின் வெளியீடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று மனிதனால் காலநிலையை எதிர்வுகூற முடி யாத நிலை காணப்படுகிறது. திடீர் திடீர் மாற் றங்கள் வானிலையில் ஏற்படுகின்றன.

நாடுகளில் ஏற்பட்ட அபிவிருத்தியும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியும் சூழலில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

மனித வாழ்விற்கு அசாதாரண முறை யாக சூழலில் காணப்படுகின்ற தாவரங்கள், உயிர் அணுக்கள், நுண் உயிர்கள் போன் றன மனித செயற்பாடுகளால் அழிக்கப் படுகின்றன.

உலகின் காலநிலை மாற்றம் 19ஆம் நூற் றாண்டிலிருந்து ஏற்பட்டு இன்று வரை ஓசோ னில் ஓட்டை துருவ பனியுருகல் எனப் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன.

1944 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 84 விதமாக காணப்பட்ட காடுகள் இன்று 29 வீதமாக குறைவடைந்துள்ளன.

ஒவ்வொரு பிரதேச அல்லது சூழல் மாற் றங்களும் மனிதனின் ஒவ்வொரு நடவடிக் கையும் பாதிப்படைந்து கொண்டே செல்கிறன.

சூரியனில் இருந்து தற்போதைய காலங் களில் நிகழும் அசாதாரண வெப்ப வெளியே ற்றத்தினால் விமானப்பாதை, செய்மதிப் பாதை என்பன மாற்றமடைவதனால் எதிர் காலத்தில் உலகின் தொடர்பாடல் கூட மாற் றமடையலாம்.

கரிக்கோன் புயல்,மனிதனின் தலையீடு கள், எண்ணெய் சிந்துதல்,தொழிற்சாலை கழிவுகள் வெளியேற்றம்,எரிமலை, பூகோள வெப்பம், புவிநடுக்கம் என்பவற்றால் இய ற்கை அழிந்து செல்கின்றது.

உலகில் அவ்வப்போது நடைபெறுகின்ற யுத்தங்களினால் மக்கள் மட்டுமன்றி எதிர் காலத்தில் மனிதனை வாழவைக்கும் இயற் கையும் அழிப்புக்குள்ளாகுவதனால் மனித னின் எதிர்கால வாழ்க்கையும் வளங்களுக் கான யுத்தமாகவே மாற்றமடையப் போகின்றது.

கடந்த காலங்களில் காணப்பட்ட கல்வி முறை தனிமனித கல்வி முறைமையாகவும் இன்றைய கல்விமுறை ஒரு சமூகத்தினை முன்னேற்றமடையச் செய்யக்கூடியதாக கல்வி முறையாக காணப்படுகின்றது.

இலங்கையில் 40 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களால் எமது சுற்றுச் சூழலை பேணிப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் மனிதனால் எதிர்கொள்ள முடியாத கட்டுப்படுத்த முடியாத மாபெரும் அனர்த்தம் ஒன்று உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-4)

# ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

(மல்லாவி)

மாகாண மட்ட தமிழ்மொழி தினத்தை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள கவிதை தமிழ் சஞ்சிகைக்கு வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் துனுக்காய் கல்வி வல யத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களிடம் இருந்து ஆக்கங் களை எதிர்பார்க்கப்படுகின்றன.

இவ் ஆக்கங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு எதிர்பார்ப்பதாக துனுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆக்கங்கள் யாவும் சிறுகதைகளாகவோ அல்லது கவிதையாகவோ அல்லது அறிவு சார்ந்த ஆக்கங்களாகவோ அமையலாம்.

இவ் ஆக்கங்களை நேரடியாக துணுக் காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப் பாது நேரடியாக எஸ். தர்மலிங்கம் உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) வடமாகாணம் மருதனார்மடம், சுன்னாகம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அறி வித்துள்ளார். (அ-3-15)

# அமெரிக்க அதிகாரிகளின் வருகை

# இலங்கைக்கு அழுத்தங்கள் இல்லை

அமெரிக்காவின் உயர் இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம் செய்கின்ற போதும் அவர்களால் எவ்வித அழுத்தங்கள் இல்லை என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சு செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரி வித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைவரங் கள்ள அறிந்து கொள்ளவே அமெரிக்க அதிகாரிகள் நாட்டுக்கு விஜயம் செய்கின்ற னர். அது அவர்களின் நடைமுறைகளில் ஒன்றாகவே உள்ளது.

இந்நிலையில் அமெரிக்க அதிகாரிகளின் விஜயங்கள் இலங்கையின் நடைமுறை கொள்கைகளுக்கு வலுச் சேர்ப்பதாகவே அமைந்துள்ளதாக அமுனுகம குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை, பல்வேறு சக்திகள் இலங் கையின் ஜனாதிபதிக்கு பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருப்பதாக வும் அவர் குற்றம் சுமத்தினார். (அ-2)

# அனைத்துலக மன்னிப்புச் சபை கனேடிய காங்கிரசிடம் நிதி உதவியைப்பெற்றது

## இலங்கை குற்றச்சாட்டு

அனைத்துலக மன்னிப்புச் சபை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி உதவிகளைக் பெற்றுக் கொண்டதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்பான கனேடிய தமிழ் காங்கிரசிட மிருந்து அனைத்துலக மன்னிப்புச் சபை 50 ஆயிரம் டொலர்களைப் பெற்றுக் கொண் டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனேடிய தமிழ் காங்கிரசிடமிருந்து 50 ஆயிரம் டொலர்கள் பெற்றுக் கொண்டதாக அனைத்துலக மன்னிப்புச் சபையின் செய லாளர் நாயகம் அலெக்ஸ் நேவி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கை போர்க்குற்றச் செயல்கள் தொட ர்பில் கடுமையான விமர்சனங்களை வெளி யிட்டு வரும் முக்கிய அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புக்களில் ஒன்றாக அனைத் துலக மன்னிப்புச் சபை கருதப்பட்டுகின்றது.

இந்த விடயம் குறித்து லண்டனில் அமைந் துள்ள அனைத்துலக மன்னிப்புச் சபை தலை மைக் காரியாலயத்திடம் முறைப்பாடு செய் யப்படும் என இலங்கை அரசாங்கம் அறி வித்துள்ளது. (அ-2)

# ஏ9 வீதியில் வீதி விபத்துக்கள்

(மல்லாவி)

ஏ9 வீதியில் பனிக்கன் குளம், பளை ஆகிய இரு இடங்களில் ஊர்திகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள் ளாகியுள்ளன.



பனிக்கன்குளம் விபத்தின்போது

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவது, நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கொழும்பில் இருந்து யாழ். நோக்கிப் பயணித்த கயஸ் வாக னம் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் இரு ந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த டிப்பர் ரக ஊர்தி ஒன்றும் பளை நகரப் பகுதியில் இருந்து யாழ். நோக்கி 500 மீற்றர் ஏ9 வீதியில் அமைக்கப்படும் பாலத்திற்கு அருகில் விலகிச் செல்ல முற்படுகையில் ஒன்றை ஒன்று மோதிக் கொண்டன. இதில் கயஸ் வாகனம் பலத்த சேதமடைந்ததுடன் அதில் பயணித்த மூவர் சிறு காயங்களுக்குள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப் பட்டனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பளை நகரப் பொலிஸார் வீதித் தடைகளை அகற்றி போக்குவரத்தினை சீர்படுத்தியதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, இன்னுமொரு சம்பவம் ஏ9 வீதியில் பனிக்கன் குளம் பகுதியில் இருந்து யாழ். நோக்கிப் பயணித்த எல்வ்ரக ஊர்தியும் டிப்பர் ரக ஊர்தியும் நேருக்கு நேர் மோதியதில் எல்வ் ரக ஊர்தியில் பயணித்த சாரதி உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த மாங்குளம் பொலிஸார் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த இரு ஊர்திகளையும் அப்புறப்படுத்தியதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு ள்ளனர். (அ-3-15)

எவ்வித தியாகமும் இன்றி எந்தவித நன்மையையும் பெறமுடியாது.

– ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சந்தையில் ஒன்று கூடிய நீங்கள் உரிமைக்காக ஒன்று கூடலாகாதோ!

திருநெல்வேலியில் புதிதாக அமைக்கப்பட்ட மேல் மாடி சந்தைக்கட்டிடத் தொகுதி நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அ.விநாயகமூர்த்தி ஆகியோர் கூட்டாக கலந்து கொண்டு மாடிக் கட்டிடத்தை திறந்து வைத்தனர்.

திருநெல்வேலி சந்தைக் கட்டிடத்தொகுதியை திறந்து வைப்பதற்கு இதுதான் பொருத்தமான முறையென்று யார் நினைத்தாரோ தெரிய வில்லை. ஆனால் அவருக்கு வசிட்டரின்வாயால் பிரம்மரிஷிப் பட்டம் கொடுக்க முடியும்.

அவர்தான் யாதார்த்தம் உணர்ந்தவர். இந்த முடிபை எடுக்கத் தவறியிருந்தால், மானிப்பாய் மருதடியானுக்கும் திருநெல்வேலி வாலை அம்மனுக்கும் நடந்த கதிதான் திருநெல்வேலி சந்தையின் மாடிக்கட்டிடத்துக்கும் நடந்திருக்கும்.

திருநெல்வேலி சந்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பரிபாலனத்தில் உள்ள நல்லூர் பிரதேச சபைக்குட்பட்டது.

எனினும் சந்தைத் திறப்பு விழாவில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜாவும் விநாயகமூர்த்தியும் ஒன்றாகக் கூடி நின்று கட்டிடத் திறப்பு விழாவை நடத்தி முடித்தனர்.

இவர்கள் ஒன்றாகக் கூடி திறப்பு விழாவை நடத்துதல் என்பதற்குள் விட்டுக் கொடுப்புகள் தாராளமாக இருந்துள்ளன என்பது தெட்டத் தெளிவு. ஆக, கடந்த தைப்பூசத் திருநாளில் திரு நெல்வேலி சந்தையின் மாடிக்கட்டித் தொகுதி திறந்து வைக்கப்பட்டது என்ற நல்ல செய்திக் கூடாக இன்னுமோர் செய்தி சொல்லப்படுகின்றது.

அதாவது, தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டால் நல்ல பணிகள் நடந்தேறும் என்பதே அது.

அமைச்சர் டக்ளஸ் தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயக கட்சியை சம்பந்தர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விமர் சிப்பதோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விமர்சிப்பதோ அர்த்தமற்றது.

குறைகூறும் படலத்தால் தமிழ் மக்களின் எதிர்காலம் பாதிக்கப்படுவது மட்டுமன்றி குறை கூறுதல் என்ற ஒருவகைக் கலாசாரம் எங்கள் இனத்தைப் பற்றி பிடித்தும் விடும். இத்தகையதோர் சூழல் ஏற்பட்டுவிட்டால் எதிலும் எதற்கும் குறை கூறுவதே தொழிலாகிப் போகும்.

எனவே அரசியலில் இருக்கின்றவர்கள் முதலில் தாம் சார்ந்த இனத்துக்கு வழிகாட்டிகளாகவும் முன்மாதிரிகளாகவும் இருக்க வேண்டும்.

அந்தவகையில், தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களின் வாழ்வுக்கும் உரிமைக்குமாக ஒன்றுபட வேண்டும். இந்த ஒற்றுமை என்பது இரகசியமாகக் கூடப் பேணப்படலாம்.

அமைச்சர் டக்ளஸை குறைகூறுவதன் மூலமே வாக்குகளைப் பெறமுடியும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நினைப்பதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை குற்றம்சாட்டுவதன் மூலமே வாக்குப்பெற முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நினைப்பதோ பொருத்துடையதல்ல.

இத்தகைய நினைப்பு யாரிடமிருந்தாலும் அவர்களுக்கான எதிர்கால அரசியலின் ஆயுள் அவ்வளவு பலமானதாக இருக்காது.

எனவே தமிழ் மக்களின் இன்றைய அவலம் நிறைந்த சூழ்நிலையில் நீங்கள் ஒன்றிணைந்து தமிழினத்தின் உரிமையை வென்றெடுக்க வியூகம் அமையுங்கள்.

அதுவே நீங்கள் தமிழ் மக்களுக்குச் செய்யும் புனிதமான பணியாக இருக்கும்.

# பொன்சேகாவை தடுத்து வைத்து அரசியல் செய்கிறது அரசாங்கம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவை அடைத்து வைத்து அரசாங்கம் அரசியல் செய்கிறது. அவரது சிறைவாழ்க்கை அனைத்து அரசியல் கைதிகளின் சிறை வாழ்க்கைக்கு அடையாளமாக திகழ்கிறது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

சரத் பொன்சேகா தொடர்பில் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இன்று எமக்கு நீதிமன்ற ஆணையை பொலிஸார் அறிவித்துள்ளனர். நாம் நீதிமன்ற நடவடிக் கைகளுக்கு தடை போடுகின்றோம் என குற்றம் சாட்டப்படுகிறது. நாம் நீதி மன்றத்தை மதிப்பவர்கள். நீதியின் ஆட்சியை வேண்டி நிற்கும் நாம் நீதி மன்ற நடவடிக்கைக்கு தடை போடுவோமா? இந்த அரசாங்கம் தான் நாட்டில் ஜனநாயகத்திற்கு தடை போட்டுள்ளது.

இந்த அரசாங்கம் தான் நாட்டில் மக்களின் சுதந்திர வாழ்க்கைக்கு தடை போட்டுள்ளது. இந்த அரசாங்கம் தான் நாட்டில் நல்லாட்சிக்கு தடை போட்டுள்ளது. இந்த அரசாங்கம் தான் நாட்டில் நீதியின் ஆட்சிக்கு தடை போட்டுள்ளது. எங்களை நீதிமன்றத்தில் நிறுத்தினால் இதை எடுத்துக் கூறுவோம்.

சரத் பொன்சேகாவிற்கு 40 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வாக்களித்தார்கள். இன்று அவர்கள் அனைவரும் அவரை விடுதலை செய்யச் சொல்லி கேட்கிறார்கள். அவருக்கு வாக்களித்தவர்களும் அவரின் விடுதலைக்காக இன்று குரல் கொடுக்கிறார்கள். சிங்கள மக்களுடன் தேசிய பிரச்சினைகளில் நாம் கைகோர்ப்போம்.

சரத் பொன்சேகா விடுதலைக் கோஷத்தில் தமிழ்மக்களையும் நாம் இணைக்கின்றோம். அதன் அடையாளமாகவே நான் இங்கு நிற்கிறேன்.

அது மாத்திரமல்ல, நானும் நண்பர் விக்கிரமபாகுவும் சரத் பொன்சேகாவை அனைத்து தமிழ் அரசியல் கைதிகளின் சிறைவாழ்க்கை தொடர்பிலான அடையாளமாகவே நாம் பார்க்கிறோம்.

எப்படி சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான இயக்கம் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களின் இணைந்த இயக்கமாக இருக்கின்றதோ, அதுபோல் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான இயக்கமும் ஒரு தேசிய இயக்கமாக மாறவேண்டும் என்றார். (எ-1)

## புத்தரின் சிலைக்கு முன்னால் வைக்கப்பட்ட உண்டியல் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கடற்படை முகாமிற்கு அருகில் வைக்கப்பட்டுள்ள புத்தரின் சிலைக்கு முன்னால் இருந்த உண்டியல் நேற்று முன்தினமிரவு திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கடற்படையினரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை அன்றிரவு ஆட்களில்லாத சமயம் பார்த்து வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான மடிக்கணணியை திருடிச்சென்றுள்ளனர்.

நாவாந்துறை ஏ.பி லேனில் உள்ள வீட்டிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. வீட்டில் இருந்தவர்கள் மரண வீடொன்றிற்கு சென்ற சமயம் பார்த்தே இத் திருட்டு இடம்பெற்றுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (அ-4)

## பெண்ணுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

காணி வாங்கித்தருவதாகக் கூறி ஒருவரிடம் 19 இலட்சத்து 97ஆயிரம் ரூபாய் பண மோசடியில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட பெண் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கடந்த மாதம் 24ஆம் திகதி குறித்த பெண்ணை யாழ். விசேட பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த பெண் யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டார்.

நீதவான் குறித்த பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில் நேற்று நீதவான் முன்னிலையில் குறித்த பெண்ணை பொலிஸார் ஆஜர்படுத்திய போது 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு ஆட் பிணையிலும் 20 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையிலும் செல்ல அனுமதி வழங்கினார். (எ-6)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதியர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக சங்கானைக் கோட்ட கல்விப்பணிப்பாளர் துரை எங்கரசு, யாழ். வட்டு. இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் சி.சிவகணேசசுந்தரன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் திருமதி கா.நே.சண்முகநாதன், திருமதி க.குலநாயகம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (எ-7)

## விளக்கமறியலிலிருந்த இளைஞனுக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

ஒரு பெண்ணை கத்தியால் குத்தி கொலை செய்ததோடு மற்றொரு பெண்ணை வெட்டி காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரை யாழ். நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

கடந்த வருடம் ஏப்ரல் 31ஆம் திகதி பூநகரி முக்கம்புள் பிரதேசத்தில் இடம் பெற்ற கொலைச்சம்பவம் தொடர்பிலான குற்றவாளிக்கே பிணை வழங்கப்பட்டது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் விஜயரத்தினம் என்பவர் உயிரிழந்ததுடன் பரமேஸ்வரன் சுசிந்திரா என்பவர் காயமடைந்திருந்தார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளியான 21 வயதுடைய இளைஞனை பூநகரி பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு இதுவரை காலமும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த நபரினை விடுவிக்க கோரி யாழ். மேல் நீதிமன்றம் ஊடாக பிணை விண்ணப்பம் கோரப்பட்டதனைத் தொடர்ந்து நேற்று யாழ் நீதிமன்றத்தில் இவ் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த நபரினை ஒரு இலட்சம் பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்லவும் ஒவ்வொரு மாத கடைசி ஞாயிற்றுக்கிழமையும் பூநகரி பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இட வேண்டுமென்ற நிபந்தனைப் பிணையில் விடுதலை செய்ய யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் உத்தரவிட்டார். (எ-4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஆன்மீக பலமே நாட்டின் பலம்



குழந்தை தன் தேவைக்கு தன் தாயை நம்பியிருக்கிறது. அதுபோல வளர்ந்த பின்னும் மனிதன் தன் தேவைகள் அனைத்திற்கும் உலக நாயகியான ஜகன் மாதாவையே நம்பி வாழ்கிறான்.

அனைத்து சக்தியும் கொண்ட அம்பாள் கருணை வடிவத்துடன் எங்கும் நிறைந்திருக்கிறாள். உலகின் இயக்கத்திற்கு ஆதாரமாக திகழ்கிறாள்.

இந்தியாவில் பெண்களுக்கு தரப்படும் மதிப்பு உயர்வானது. தெய்வத்தை அன்னையாக கருதி வழிபாடு செய்தால் ஆன்மீக வாழ்வில் அனைத்து நன்மைகளும் உண்டாகும்.

குழந்தைகள் தாயிடமே அதிக பாசத்தை காட்டுகின்றனர். இதனால் தான் மாதா, பிதா, குரு , தெய்வம் என்று தாய்க்கு முதலிடம் தரப்பட்டுள்ளது.

ஆன்மீக பலத்தால் மட்டுமே நாடு எழுச்சி அடையப்போகின்றது. கடவுளிடம் கொண்ட நம்பிக்கையால் இந்திய மக்கள் பலம் பெற்றிருக்கிறார்கள்.

மனிதன் நல்ல, தீய எண்ணங்களில் உரிமையாளனாக இருக்கிறான். அவனுக்கு தேவையான அனைத்து வலிமையும் உதவியும் அவனுக்குள்ளேயே இருக்கிறது.

# அமெ. உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒரு இலட்சம் இந்தியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்

## வெளியுறவுச் செயலாளர் தெரிவிப்பு

அமெரிக்காவில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் இந்திய கம்பனிகளின் சார்பில் ஒரு இலட்சம் இந்தியர்கள் பணியாற்றி அந்த நாட்டிற்கு வளம் சேர்க்கின்றனர் என வெளியுறவு செயலாளர் ரஞ்சன் மத்தாய் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு செயலர் ரஞ்சன் மத்தாய் அணு உலை உள்ளிட்ட விடயங்கள் குறித்து அந்நாட்டுடன் விவாதிக்கவுள்ளார்.

இதற்கிடையே கடந்த 5 ஆம் திகதி வோஷிங்டனில் அவர் உரையாற்றுகையில், கடந்த ஆறு ஆண்டுகளில் அமெரிக்காவில் இந்திய தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கு அதிகமாகவுள்ளதாக நாஸ்காம் தெரிவித்துள்ளது. இந்திய வர்த்தகர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் அமெரிக்காவில் 26 பில்லியன் டொலர் அளவுக்கு முதலீடு செய்துள்ளனர்.

விசா கட்டண உயர்வு, கெடுபிடியான குடியேற்ற விதிகள் போன்றவற்றை இந்தியர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் அமெரிக்டகாவுடனான நட்புறவை இந்தியா மேம்படுத்திக் கொள்ள விரும்புசிறது. தற்போது அமெரிக்க தகவல் தொடர்பு பணிகளில் இந்திய கம்பனிகள் சார்பில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் பணியாற்றுகின்றனர்.

இவர்கள் அமெரிக்க வளத்திற்கு உதவுகின்றனர். ஆகவே அமெரிக்காவின் பணிப் பாதுகாப்பு என்ற பெயரில் எடுக்கப்படும் முடிவுகள் கவலை தருபவை. வளர்ச்சிக்கு எதிராக பாதுகாப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் இப்போக்கை அமெரிக்கா மாற்றிக் கொள்ளும் என எதிர்பார்க்கலாம். இந்தியா அடுத்த ஐந்தாண்டுக்கு உட்கட்டமைப்பு பணிக்காக 50 இலட்சம் கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் விவசாயத்துறை நவீனமயப்படுத்தப்பட உள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெள்ளை மாளிகையில் வெளியுறவுத்துறை அமைச்சர் கிலானி கிளிண்டனை சந்தித்துப் பேசியுள்ளார். ரஞ்சன் மத்தாய் வெளியுறவுத்துறை செயலாளராக பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் கிலாரியுடனான முதல் சந்திப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அமைச்சர் கிருஷ்ணா சீனாவுக்கு விஜயம்

மூன்று நாட்கள் அரசு முறைப் பயணமாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா சீனா சென்றுள்ளார்.

சீன தலைநகர் பீஜிங்கில் கட்டப்பட்டுள்ள புதிய இந்திய தூதரகத்தை திறப்பதற்காக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா சீனா சென்றுள்ளார்.

மேலும் அங்கு சீனாவின் உயர் அதிகாரிகளை கிருஷ்ணா சந்தித்து கலந்துரையாடவுள்ளார். அப்போது இந்தியா-சீனா இடையேயான உறவுகள் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்படவுள்ளது. (அ-2)

# மாலைதீவில் ஜனநாயகத்துக்கு தீர்வு காணப்பட வேண்டும்

## இந்தியா வலியுறுத்து

மாலைதீவுகளில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு விவகாரம், ஜனநாயகம் மற்றும் அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

மாலைத்தீவுகளில் இராணுவ நீதிபதி கைது செய்யப்பட்டதையடுத்து அங்கு தொடர்ச்சியாக போராட்டங்கள் நடை பெற்று வருகி ன்றன.

இதன் காரணமாக ஜனாதிபதி முகமது நஷீத் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். தற்போது துணை ஜனாதிபதி முகமது வாஹித் ஜனாதிபதி பொறுப்பை ஏற்றுள்ளார்.

இந்நிலையில் இந்திய அரசு சார்பில் கருத்துத் தெரிவித்துள்ள மத்திய வெளியுறவு த்துறை செய்தித் தொடர்பாளர் கூறியுள் ளதாவது, மாலைதீவுகளில் நடைபெற்று வரும் உள் நாட்டு விவகாரம் தொடர்பாக அவர்கள் தான் இதற்கு தீர்வு காண வேண்டும்.

ஜனநாயகம் மற்றும் அமைதியான முறையில் தீர்வு ஏற்படும் என்று விரும்புகின்றோம். மேலும் மாலைதீவுகளில் நடைபெற்று வரும் அரசியல் சூழ்நிலையை இந்தியா கவனித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பேருந்தும் லொறியும் மோதி விபத்து; 23 பேர் உயிரிழப்பு

(மைன்பூரி)

உத்தரப்பிரதேசத்தில் பேருந்தும் லொறியும் மோதிய விபத்தில் 23 பேர் பலியாகினர். 19 பேர் படுகாயமடைந்தனர்.

உத்தரபிரதேச மாநிலம் மைன்பூரி மாவட்டம் ஓஞ்சா நகரின் ராத்ரே கிராமத்தில் இருந்து 36 பயணிகளுடன் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. தேசிய நெடுஞ்சாலையின்·ஹேவ்லி கிராமம் அருகே வந்து கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக லொறியுடன் நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பேருந்தில் பயணித்த 18 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இவர்களில் 5 பேர் சிகிச்சை பலனின்றி இறந்தனர். இதனால் பலியானவர்களின் எண்ணிக்கை 23 ஆனது. 19 பேர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து பொலிஸார் தெரிவிக்கையில், பேருந்தில் பயணித்தவர்கள் அனைவரும் ஈத்தா மாவட்டத்தின் பக்வாலா கிராமத்தைச்சேர்ந்தவர்கள். நிச்சயதார்த்தநிகழ்ச்சிக்காக சென்ற போது இந்த கோர விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவித்தனர். (அ-2)




# ஏனைய நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடக் கூடாது

## ஈரான் தூதர் தெரிவிப்பு



(புதுடில்லி)

சிரியா விவகாரத்தில் ஐ.நா. சபை தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால் ஈரானுக்கு அதிருப்தி இல்லை என்று இந்தியாவுக்கான ஈரான் தூதர் தெரிவித்துள்ளார். சிரியாவில் மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்பு குழுவின் தீர்மானத்தை அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் ஆதரித்தன. சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் வீட்டோ அதிகாரம் மூலம் தீர்மானத்தை முறியடித்தன. ஈரானும் இந்த தீர்மானத்தை எதிர்த்தது.

இந்நிலையில் டில்லியில் பேட்டியளித்த இந்தியாவுக்கான ஈரான் தூதர் சையீத் மஹ்தி நபீசாதேஹ் கூறுகையில்,

சிரியா விவகாரத்தில் ஐ.நா. பாதுகாப்பு குழுவில் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால் ஈரானுக்கு அதிருப்தி இல்லை. அதேநேரம் உலக அளவிலான நிகழ்வுகளை இந்தியா மேலும் கூர்ந்து கவனித்து தனது சொந்த அனுபவங்களை கருதிப் பார்க்க வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு குழுவை சீரமைக்க வேண்டும் என்ற கருத்தில் இந்தியாவுடன் ஒத்துப்போகிறோம். ஏனைய நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடக் கூடாது என்றார். (அ-2)

# ஆபாசப்படம் பார்த்த அமைச்சர்கள் இராஜினாமா கடிதம் சமர்ப்பித்தனர்

(பெங்களூர்)


கர்நாடக சட்டப் பேரவை கூட்டத்தில் கையடக்கத் தொலைபேசியில் ஆபாச படம் பார்த்தது கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதனையடுத்து அமைச்சர்கள் லட்சுமண் சவதி கிருஷ்ணபாலேமர் மற்றும் சி.சி. பாட்டீல் தங்களது இராஜினாமா கடிதத்தை முதல்வர் சதானந்த கவுடாவிடம் வழங்கியுள்ளனர்.

கர்நாடகாவில் சட்டப்பேரவை கூட்டம் நடைபெற்று வருகின்றது. சிந்தகி தாலுகாவில் பாகிஸ்தான் கொடியேற்றப்பட்டது தொடர்பாக கவனஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதில் எதிர்க்கட்சி தலைவர் சித்தராமையா பேசிக் கொண்டிருந்தார். அப்போது கூட்டுறவு அமைச்சர் லட்சுமண் சவதி கையடக்கத் தொலைபேசியில் படம் பார்த்துக் கொண்டிருந்தார்.

பேரவை நிகழ்ச்சிகளை படம் பிடித்துக் கொண்டிருந்த டி.வி. கமராவில் அமைச்சர் இருவரும் ஆபாச படம் பார்த்தது வெளிச்சத்துக்கு வந்தது. இந்தச் செய்தி வெளியானதும் எதிர்க்கட்சித் தலைவர் சித்தராமையா, மஜத தலைவர் குமாரசாமி ஆகியோர் அமைச்சர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதனையடுத்து ஆபாச படங்களை பார்த்த அமைச்சர்களை பதவி விலக வேண்டும் என கட்சி அவசரக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. இந்நிலையில் அமைச்சர்கள் லட்சுமண் சவதி கிருஷ்ணபாலேமர் மற்றும் சி.சி. பாட்டீல் ஆகியோர் தங்களது இராஜினாமா கடிதத்தை முதல்வர் சதானந்த கவுடாவிடம் வழங்கினர்.

(அ-2)


Dinamalar.com

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெரும் ஜோதி தனிப்பெரும் கருணை அருட்பெரும் ஜோதி வடலூ ரில் வள்ளலார் நிறு விய சத்திய ஞான சபையில் தைப்பூசத்தை முன்னிட்டு 7 திரைகளை நீக்கி தோன்றிய ஜோதி தரிசனத்தைப் படத்தில் காணலாம்.

# தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை விரட்டியது


(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்தில் இருந்து 563 விசைப் படகுகளில் மீனவர்கள் கடந்த 6 ஆம் திகதி கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

கச்சதீவு அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது 3 பைபர் படகுகளில் இலங்கை கடற்படையினர் வந்தனர். அங்கு மீன்பிடித்து கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் தடுத்து விரட்டி அடித்தனர்.

இதனால் மிகவும் குறைவான மீன்களுடன் மீனவர்கள் நேற்று காலை கரை திரும்பினர். இதுகுறித்து இராமேஸ்வரம் மீனவர்கள் கூறுகையில், இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து பிரச்சினைகளை சந்தித்து வருகின்றோம். எங்களின் வாழ்வாதாரமாக உள்ள மீன்பிடி தொழிலுக்கு பல கெடுபிடிகளை விதிக்கின்றனர். மத்திய மாநில அரசுகள் தலையிட்டு நிரந்தர தீர்வு காண முன்வர வேண்டும் என்றனர். (அ-2)

# இலங்கையை வீழ்த்தியது இந்தியா





கொமன் வெல்த் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் இந்திய அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய அணி 4 டெஸ்ட், இரண்டு இருபது-20 மற்றும் முத்தரப்பு ஒருநாள் போட்டியில் விளையாடிவருகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்த நிலையில் இருபது-20 போட்டியை சமன் செய்திருந்தது.

முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா அணி வென்ற நிலையில் நேற்று இலங்கை-இந்திய அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி பேர்த்தில் ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது.

இலங்கை அணி 12 ஓட்டங்களை பெற்று இருந்த நிலையில் தரங்க 4 ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்தில் டெண்டுல்கரிடம் பிடி கொடுத்து பவிலியன் திரும்பினார்.

பின்னர் ஜோடி சேர்ந்த இலங்கையில் முன்னாள் அணித்தலைவர் டில்சானும் உலகின் முதல்நிலை ஆட்டக்காரர் சங்ககாரவும் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

இருவருமே 60 பந்துகளில் 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றுக் கொடுத்தார்கள். இலங்கை அணி 74 ஓட்டங்களை பெற்றிருந்த போது சங்கார 26 ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்தில் ஆட்டழிழந்தார்.

பின் ஜோடி சேர்ந்த சன்டிமலும் டில்சானும் ஓட்டங்களை உயர்த்திய போதும் டில்சான் தனது அரைச்சதத்தை 2 ஓட்டங்களால்விட்டுக்கொடுத்தார்.

பின் ஜோடி சேர்ந்த இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனவும் இளம் துடும்பாட்ட வீரர் சன்டிமலும் இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை மெதுவாக உயர்த்தினார்கள்.

ஜெயவர்த்தன 23 ஓட்டங்கள், பெரேரா 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஒரு புறம் சிறப்பாக ஆடிய இளம் வீரர் சன்டிமல் தனது நான்காவது சர்வதேச அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

மறுபுறம் இலங்கை அணியின் உபதலைவர் மத்தியூஸ் சிறப்பாக அடித்தாடி ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

இலங்கை அணி 50 ஓவர்கள் முடிபில் 233 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்தது.

இந்தியஅணி சார்பாக தமிழக வீரர் அஸ்வின்3 விக்கெட்டுக்களையும் சகீர்கான் 2 விக்கெட்டுக்களையும் வினேய்குமார், ஜடேஜா தலா ஒரு விக்கெட்டுக்களையும் பெற்றுக் கொடுத்தனர்.234 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது இந்தியா. அதிரடி ஆட்டக்காரர் சேவாக்கை 10 ஓட்டங்களுடன் பவிலியன் அனுப்பினார் மலிங்க.

பின் ஜோடி சேர்ந்த ஹோலி மற்றும் டெண்டுல்கார் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை விரைவாக உயர்த்தினார்கள்.

தனது 100 ஆவது சதத்தை எடுப்பார் என ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய சச்சின் 48 ஓட்டங்களுடன் மத்தியூஸ் பந்தில் போல்டாகி வெளியேறினார்.

மறுபுறம் சிறப்பாக ஆடிய ஹோலி அரைச்சதம் கடந்தார்.

மறுபுறம் ரெயினா 24 ஓட்டங்களை பெற்ற நிலையில் மத்தியூஸ் பந்தில் வெளியேறினார்.

பின்னர் அணித்தலைவர் தோனி 4 ஓட்டங்களுடன் பிரசாத்தின் பந்தில் மலிங்கவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். சிறப்பாக ஆடிய ஹோலி 77 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆகி வெளியேறினார்.

கடைசி வரை சிறப்பாக ஆடிய ஜடேஜா 24 ஓட்டங்களையும் அஸ்வின் 30 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்து இந்திய அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்கள்.

இலங்கை அணி சார்பாக மத்தியூஸ் 2விக்கெட்டுக்களையும் மலிங்க, பிரசாத், பெரேரா தலா ஒரு விக்கெட்டுக்களையும் பெற்றுக் கொடுத்தார்கள்.

ஆட்டநாயகன் விருது இந்திய அணியின் வெற்றிக்கு வழிவகுத்த தமிழக வீரர் ரவிச்சந்திரன் அஸ்வினுக்கு வழங்கப்பட்டது.

# சச்சின் டெண்டுல்கர், சகீர்கான் மீண்டும் டெஸ்ட் தரவரிசையில்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) டெஸ்ட் போட்டியின் அடிப்படையில் வீரர்களின் தரவரிசைப்பட்டியலை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் முடிந்ததையொட்டி இந்த தரவரிசையை ஐ.சி.சி வெளியிட்டு உள்ளது.

துடுப்பாட்டத் தரவரிசையில் முதல் இடங்களில் டெண்டுல்கர் மீண்டும் இடம்பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிந்த பிறகு டெண்டுல்கர் தரவரிசையில் பின் தங்கினார்.தற்போது 3 இடங்கள் முன்னேறியுள்ளார். அவர் பாகிஸ்தான் வீரர் அசார் அலியுடன் இணைந்து 10 ஆவது இடத்தை பிடித்தார்.

வேறு எந்த துடுப்பாட்ட வீரரும் முதல் 10 இடங்களை பிடிக்கவில்லை.

சங்கக்காரா (இலங்கை) முதல் இடத்தில் உள்ளார். கலீஸ் (தென்னாபிரிக்கா) 2-வது இடத்திலும், கிளார்க் (அவுஸ்திரேலியா) 3-வது இடத்திலும் உள்ளனர்.

டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), யூனிஸ் கான் (பாகிஸ்தான்), அலிஸ்டயர்குக் (இங்கிலாந்து), சமரவீர (இலங்கை), அம்லா (தென்னாபிரிக்கா) ஆகியோர் முறையே 4 முதல் 9 இடங்களில் உள்ளனர்.

இதேபோல பந்துவீச்சு வரிசையில் முதல் 10 இடங்களில் சகிர்கான் மட்டுமே இடம் பெற்றுள்ளார்.



தென்னாபிரிக்கா வேகப்பந்து வீரர் ஸ்டெய்ன் 896 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், அஜ்மல் (பாகிஸ்தான்) 2-வது இடத்திலும், அண்டர்சன் (இங்கிலாந்து) 3-வது இடத்திலும் உள்ளனர்.

ஸ்ரூவர்ட் பிரோட் (இங்கிலாந்து), பீற்றர் சிடில் (அவுஸ்திரேலியா), சுவான் (இங்கிலாந்து), அப்துர் ரஹ்மான் (பாகிஸ்தான்), ஹில்பென்ஹியூஸ் (அவுஸ்திரேலியா), மோர்னி மோர்கல் (தென்னாபிரிக்கா) ஆகியோர் முறையே 4 முதல் 9ஆவது இடங்களில் உள்ளனர்.

# சைக்கிள் பந்தய வீரரை சந்திக்க ஆர்வம் எனது உடல்நிலையில் தினமும் முன்னேற்றம்

**-யுவராஜ் சிங்**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி ஆட்டக்காரர்களில் ஒருவரான யுவராஜ் சிங் புற்று நோயால் அவதிப்பட்டு வருகிறார்.

யுவராஜ் சிங்கிற்கு இரண்டு நுரையீரல்களுக்கு இடையே பரவக்கூடிய புற்று நோய் கட்டி உருவாகியுள்ளது.

இதற்காக அவர் தற்போது அமெரிக்காவின் கீமோ தெரப்பி சிகிச்சை பெற்று வருகிறார்.

9 வார காலம் அவர் சிகிச்சை பெற வேண்டும். யுவராஜ் சிங்குக்கு புற்றுநோய் இருக்கும் தகவல் அறிந்தவுடன் கிரிக்கெட் உலகமே அதிர்ச்சி அடைந்தது. அவர் விரைவில் குணமடைய வேண்டும் என்று அனைத்து தரப்பிலும் பிரார்த்தனை செய்யப்பட்டு வருகிறது.


இந்நிலையில் டுவிட்டர் இணைய தளத்தில் யுவராஜ் சிங் நேற்று அதிகாலையில் கூறியிருப்பதாவது,

எனது உடல் நிலையில் நாளுக்கு நாள் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனது உடல் நிலை பற்றி அறிந்து குணமடைய வாழ்த்து தெரிவித்த அனைவரும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய மந்திரி அஜய் மக்கான், காஷ்மீர் முதல் மந்திரி உமர் அப்துல்லா, குஜராத் முதல் மந்திரி நரேந்திர மோடி, அமிதாபச்சன், சகாரா குரூப் சேர்மன் தோராய், கிரிக்கெட் வாரிய உறுப்பினர்கள், வீரர்கள், ரசிகர்கள் ஆகியோருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பிரபல சைக்கிள்பந்தயவீரர் லான்ஸ்ஆம்ஸ்ட் ராங்கை விரைவில் சந்திக்க விரும்புகிறேன்.

அதன் மூலம் நான் புத்துணர்ச்சி பெறுவேன். ஒவ்வொருவரும் எனது வருகையை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர்.

நான் மீண்டும் அணிக்கு திரும்பி இந்திய உடை தொப்பி அணிந்து விளையாடுவேன்.



இவ்வாறு யுவராஜ்சிங் கூறியுள்ளார்.

# கடைக்குள் வாள்வெட்டு இருவர் கைது

திருநெல்வேலியில் உள்ள கடை ஒன்றிற்குள் புகுந்த சுமார் 20 பேர் அடங்கிய கும்பல் ஒன்று அங்கிருந்த இருவரை தாக்கியும், வாளால் வெட்டியும் காயப்படுத்தியுள்ளது. இச்சம்பவம் நேற்றுக்காலை 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இணுவில் பகுதியைச் சேர்ந்த குடும் பஸ்தரான பொ.புஸ்பேந்திரன் (வயது-32) மற்றும் எஸ்.பிரதீபன் (வயது- 16) ஆகிய இருவரே காயமடைந்தவர்களாவர். இத் தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச்சென்ற குழுவினரில் இருவர் கோப்பாய்ப் பொலிஸரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடை ஒன்றில் ஏற்பட்ட சிறுதகராறே இச்சம்பவத்திற்கு காரணம் எனவும் இத்தாக்குதலில் ஈடுபட்ட நபர்களில் சிலர் ஏற்கெனவே இவ்வாறான வன்முறைகளில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டவர்கள் எனவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். வாள் வெட்டுக்கு இலக்கான இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-4)

# நாடுநகர திட்டமிடல் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் திட்டம்

(மட்டக்களப்பு)

நாடுநகர திட்டமிடல் கட்டளைச் சட்ட மூலத்தில் அரசாங்கம் கொண்டுவர முயற் சிக்கின்ற திருத்தங்களுக்கு கிழக்கு மாகாண சபை அங்கீகாரம் வழங்காது எனத் தெரியவருகின்றது.

அரசாங்கத்தின் நாடு நகர திட்டமிடல் கட்டளைச் சட்டமூலம் தொடர்பான பிரேரணை கிழக்கு மாகாண சபையில் எதிர்வரும் 13 ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ளது.

இந்நிலையில், இத் திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிஸும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் ஆதரவு வழங்காது எனக் கூறப்படுகின்றது.

இந்தச் திருத்தச் சட்டமூலம் மாகாணங்களிடம் உள்ள அதிகாரங்களை மத்திய அரசுக்கு தாரை வார்க்கும் வகையில் அமைந்துள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசியல் அமைப்பில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை இத்திருத்தச் சட்டமூலம் பறிப்பதாக இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அத்துடன், இக் குறித்த சட்டமூலத்திற்கு கிழக்கு மாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசத்துரை சந்திர காந்தனும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இந்த சட்ட மூலத்தின் ஊடாக மாகாண காணிகளை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்க வழிகோலும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-11)

# வெளிநாடுகளின் அழுத்தங்...

காணவும் முடியாது எனவும் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற் கொண்டு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், கதிர்காமத்திற்கு சென்று வழிபாடு நடத்தியதன் பின்னர் இரத்தினபுரிக்குச் சென்றார். அங்கு செய்தியாளர்களைச் சந்தித்து உரையாடிய போதே இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு அழுத்தங்களுக்கு இடமளிக்காது புலிகளை இல்லாதொழித்தார். தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு பயந்து இலங்கைக்கு உதவி செய்ய இந்தியா பின் வாங்கியதால் சீனா ஆக்கிரமித்துக் கொண்டது. இதற்கு கருணாநிதிதான் காரணமாகும்.

இன்றைய சூழ்நிலையில் இலங்கை பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது அல்லது உதவி வழங்குவது தனியாக தமிழ்நாட்டு அரசாங்கத்தால் முடியாது. கச்சதீவினை இந்தியா எக்காரணம் கொண்டும் திரும்ப பெற முடியாது. கருணாநிதியும் இந்திரா காந்தியும் மேற்கொண்ட ஒப்பந்தமொன்றின் கீழேயே வழங்கப்பட்டது. தற்போது கருணாநிதி நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்.

சர்வதேச நீதிமன்றத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நிறுத்த முடியாது. ஏனெனில் அதற்கான ஆதாரங்கள் இல்லை என்றே கூறலாம். புலிகள் ராஜீவ் காந்தியை கொன்றது தான் அவர்கள் செய்த மாபெரும் தவறு. கூலிக்காக செய்தார்களா? அல்லது வேறு தேவைக்காக செய்தார்களா என்பது தெரியாது. ராஜீவ் காந்தி இலங்கை பிரச்சினையை தீர்க்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டவர்.

ஒரு இலட்சம் இந்திய இராணுவத்தினர் இலங்கையில் இருந்தனர். ராஜீவ் உயிருடன் இருந்தால் பிரச்சினை சுமுகமாக இருந்திருக்கும். தென்பகுதி சிங்கள மக்களின் தன்மானத்திற்கு இடையூறு விளைவிக்காத நிலையில் தமிழ் மக்களுக்கும் சுய உரிமை வழங்கப்பட வேண்டும். இலங்கை அரசாங்கத்தினை நம்பி பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

நம்பிக்கையில்லாத விடயம் தோல்வியில் முடியும். தமிழ் அரசியல்வாதிகளில் சிலர் புலிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அரசியலுக்கு வந்தவர்கள். அவர்கள் சந்தேகத்துடன் அனைத்தையும் நோக்குகின்றனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நம்ப மறுக்கின்றனர்.

இதனால்தான் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு வரமறுக்கின்றனர். இந்தியா அல்லது வெளிநாடுகளின் அழுத்தங்களூடாக இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது. இலங்கை மீது கூடுதல் அழுத்தம் கொடுத்தால் அந்நாட்டுக்கு உதவி செய்ய இன்னும் பல நாடுகள் உள்ளன.

வடக்கு கிழக்கு மக்களை விட இலங்கை வாழ் இந்திய மக்கள் மிகவும் கீழ் மட்ட வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். இது குறித்து இந்தியா கூடுதல் அக்கறை கொள்ள வேண்டும்.

இவர்களின் உரிமைக்கும் பாதுகாப்பிற்கும் இந்தியா கூடுதல் அக்கறையும் கரிசனையும் செய்திருக்க வேண்டும். ஆனால் அது இடம்பெறவில்லை.

இனிவரும் காலங்களில் இவ்வாறு இருக்க முடியாது. இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளை முன்கொண்டு வரும் பொருட்டு டில்லியில் மாநாடு ஒன்று நடத்தவுள்ளேன் எனவும் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார். (எ-11)

# இலங்கை விவகாரத்...

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் ஆதரவுடன் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை ஆதரிப்பதற்கு இந்தியா முன்னர்முடிவுசெய்திருந்ததாகதெரியவருகின்றது.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கொழும்புக்கு ஆதரவாக இந்தியா இருக்கும் என்ற உறுதி மொழியை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கேகாந்தா வழங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

ஆயினும் இவ்விவகாரம் தொடர்பிலான இந்தியாவின் இறுதியான முடிபு குறித்த உத்தியோகபூர்வ செய்திகள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

இதனிடையில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக தீர்மானத்தை தோற்கடிக்க இந்தியா உதவும் என கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்துக்கு தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத இலங்கை அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியிருந்தார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தென் அமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளின் ஆதரவைக் கொண்டு தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கையில் இலங்கை அரசாங்கம் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இந்தியாவின் ஆதரவு இருக்கும் வரை ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படவுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என இலங்கையின் அமைச்சர்கள் வெளிப்படையாக கூறிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# காணாமல் போனோ...

செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை நேற்றுச்சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போதே காணாமல் போனோர் தொடர்பில் தகவல் கேட்டுள்ளார். இந்த சந்திப்பு தொடர்பாக அரச அதிபர் தகவல் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத்திணைக்கள குழுவினர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு தரப்பினருடன் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் இன்று (நேற்று) என்னுடன் கலந்துரையாடினார் அத்தோடு வலிகாமம் வடக்கு வடமராட்சி பகுதிகளுக்கும் சென்று மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளைப் பார்வையிடவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் அதாவது, யுத்த காலங்களின் போது காணாமல் போனோர் தொடர்பான முழுமையான விபரம் உள்ளதா எனக் கேட்டிருந்தனர்.

காணாமல் போனோர் தொடர்பான முழுமையான விபரங்கள் இன்னும் திரட்ப்பட வில்லை ஆனால் பதிவுகள் இடம் பெற்றுவருகின்றது எனத் தெரிவித்தேன்.

இதுதவிர யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகள் தொடர்பாகவும் இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டிய பிரதேசங்கள் தொடர்பாகவும் கேட்டிருந்தனர். அதற்கு விளக்கப்படங்களுடன் அறிக்கையை சமர்ப்பித்திருந்தேன்.

அத்தோடு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு வீடுகள் போதுமானதாகயில்லை. உட்கட்டமைப்பு வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்படவேண்டியுள்ளது.

அதற்கான உதவிகள் வழங்கப்பட வேண்டும். இளைஞர் யுவதிகள் பலர் வேலைவாய்ப்பு இன்றியுள்ளனர். போரினாலும் இயற்கையாகவும் பலர் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சுயதொழில் கடன் உதவிகள் வழங்கப்பட வேண்டும். இது எமக்கு பாரிய சவாலாகவுள்ளது என அவர்களுக்கு எடுத்துக்கூறினேன்.

இந்தக் குழுவினர் யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்கையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் என அரச அதிபர் கூறினார். இதேவேளை இராணுவப் பிரசன்னம் முன்புஇருந்ததைவிடதற்போதுகுறைந்துள்ளது என தனக்கு அமெரிக்க குழுவினர் கூறியதாக அரச அதிபர் தெரிவித்தார். (எ-6)

# அரசியல் தலைமை...

கருணாரத்ன, சிறிதுங்க ஜெயசூரிய, டிரான் அலஸ், அர்ஜீன ரணதுங்க ஆகியோருக்கு சம்பந்தப்பட்ட நீதிமன்ற ஆணையை கொழும்பு வலயபிரதிபொலிஸ்மாஅதிர்அனுரா சேனநாயக்காவின் சார்பாக பொலிஸார், நேரடியாக கையளித்தனர்.

நேற்று கொழும்பு நீதிமன்ற வளாகத்திற்கு அண்மையில் சரத் பொன்சேகா விடுதலை தொடர்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திலும் பேரணியிலும் மேற்கண்ட அரசியல் தலைவர்கள் பங்கு பற்றினார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (எ-11)

# கட்டிடத்தில் தீ விப...

அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில்ஒருஆணும்ஒருபெண்ணும் அடங்குவதாகவும்எனினும்அவர்கள் தொடர்பில் சரியான தகவல்கள் கிடைக்க வில்லை எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தீவிபத்து குறித்துபொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒருவரின் சடலம் வீட்டின் மின்விசிறி ஒன்றில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாகவும்.

காயமடைந்த பெண்ணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். தீ ஏற்பட்ட சம்பவம் சந்தேகத்திற்கு இடமானது என்பதால் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

ஆஸ்திரேலியா குடும்ப விசா

திசைகாட்டியின் கிளை

ஆஸ்திரேலியாவில் உதயம்

மெல்பேர்ண் நகரில் 04.02.2012 எமது கிளை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்பதனை அனைத்து அன்புள்ளங்களுக்கும் பெருமகிழ்வோடு அறியத் தருகின்றோம்.



இலங்கை நேரப்படி காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை எமது அலுவலகத்தோடு பின்வரும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளலாம் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

தொ.பேசி இல. :- 006412779209

இயக்குநர் சபையின் தீர்மானத்தின்படி ஆஸ்திரேலியா குடும்பவிசா ஆலோசனையின் இறுதி நாள் இம்மாதம் 25 ஆம் திகதியாகும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. : 021 221 9016

(7464)

கிளை: 115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.

T.P. : 021 491 4527

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.